2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2022 செப்டெம்பர் 20 செவ்வாய்க்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 90 இல. 222 | Tuesday 20, September, 2022 | 12பக்கங்கள் | 40/-

மகாராணி எலிசபெத் நேற்று உலகிற்கு விடை கொடுத்தார்

இலட்சக்கணக்கான மக்கள் திரள பூதவுடல் நல்லடக்கம்

பிரிட்டிஷ் மகாராணி இரண்டாம் எலிசபெத் நேற்று உலகுக்கு விடை கொடுத்தார். மகாராணியின் இறுதிக் கிரியைகள் மிகவும் உணர்வு பூர்வமாக லண்டனில் நடைபெற்றன. ஆறாம் ஜோர்ஜ் நினைவு தேவாலயத்தில் கணவர் எடின்பரோ கோமகனுடன் எலிசபெத் மகாராணி ஒன்றாக நேற்று அடக்கம் செய்யப்பட்டார்.

விண்ட்சர் கோட்டையில் 'பைப்பர் கீதம்' இசைக்கவேண்டுமென மகாராணி தனிப்பட்ட முறையில் கேட்டுக்கொண்டதற்கிணங்க இதன்போது மகாராணியின் விருப்பத்தின் படி பைப்பர் கீதம் இசைக்கப்பட்டது.

நேற்று இரண்டாம் எலிசபெத் மகாராணியின் உடல் தாங்கிய பேழை, வெஸ்ட் மின்ஸ்டர் மண்டபத்தில் வைக்கப்பட்டு, இறுதி ஆராதனைகள் நடைபெற்றன.

பிரிட்டனின் மகாராணி இரண்டாவது எலிசபெத் கடந்த 08 ஆம் திகதி தமது 96 ஆவது வயதில் காலமானார்.

70 ஆண்டு காலமாக பிரிட்டனின் மகாராணியாகவிருந்த இரண்டாம் எலிசபெத், மருத்துவ கண்காணிப்பில் இருந்தபோது காலமானதாக பக்கிங்ஹாம் மாளிகை அறிவித்திருந்தது.

04

பொருளாதார மீட்சி; நாடு மீட்டெடுப்பு

அரசின் வேலைத்திட்டங்களுக்கு நியூசிலாந்து அரசு ஒத்துழைப்பு

பிரசன்னவுடனான சந்திப்பில் தூதுவர் உறுதி

பொருளாதாரப் பிரச்சினையில் இருந்து நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கான அரசாங்கத்தின் தற்போதைய வேலைத் திட்டத்துக்கு நியூசிலாந்து தன்னுடைய முழு ஆதரவை தெரிவித்துக் கொள்வதாக அறிவித்துள்ளது.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மற்றும் இலங்கைக்கான நியூசிலாந்து உயர் ஸ்தானிகர் மைக்கல் அப்பிள்டன் (Michal Appleton) ஆகியோருக்கிடையில் (09) நடைபெற்ற கலந்துரையாடலின் போது இது பற்றி தெரிவிக்கப்பட்டது. இப் பேச்சுவார்த்தை பாராளுமன்றத்தின் ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரின் அலுவலகத்தில் நடந்தது.

இலங்கையின் நட்புறவு நாடாக இந்த நாட்டு மக்கள் முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் பிரச்சினைகளுக்கு அவர்களுக்கு ஒத்துழைப்பை வழங்குவதற்கு எப்பொழுதும் நியூசிலாந்து

04

ரஷ்ய படையினரின் பிடியிலிருந்து உக்ரேனில் மீட்கப்பட்டுள்ள

ஏழு இலங்கையர் குறித்து அதிர்ச்சித் தகவல் கசிவு

ஐரோப்பிய நாடுகளுக்கு உக்ரேன் ஊடாக செல்ல காத்திருந்தவர்களாம்

ரஷ்ய படையினரின் பிடியிலிருந்து உக்ரேனில் மீட்கப்பட்ட இலங்கையர்கள் உக்ரேன் ஊடாக ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதற்கு தங்கியிருந்தவர்கள் என்றும் அவர்கள் திடீரென ஏற்பட்ட யுத்தத்தில் சிக்கிக் கொண்டவர்கள் எனவும் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

முன்னர் இவர்கள் கல்வி கற்பதற்காக வந்தவர்கள் என அறிய வந்தபோதிலும் ஆரம்பகட்ட விசாரணைகளில் இவர்கள் குறித்து பல்வேறு அதிர்ச்சி தகவல்கள் வெளியாகியுள்ளன. இவர்களை ரஷ்யா மற்றும் உக்ரேன்

04

அந்நாடுகளிலுள்ள இலங்கை தூதரக அதிகாரிகளினால் நடத்தப்பட்ட ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக தகவல்

தென்கொரியா காலநிலை மாநாட்டில் நஸீர் அஹமட்

இரு நாட்டு ஒத்துழைப்பு குறித்தும் ஆராய்வு

தென்கொரியாவில் நடைபெற்ற பசுமைக் காலநிலை மாநாட்டில் பங்கேற்ற சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் அந்நாட்டின் பிரதி சுற்றாடல் அமைச்சர் யோ ஜேசுல்லை சந்தித்து முக்கிய பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

தென்கொரியாவின் பரடைஸ் ஹோட்டலில் 14 முதல் 16 வரை நடைபெற்ற இம்மாநாட்டில் ஆசிய, பசுபிக் சமுத்திர நாடுகளின் அமைச்சர்கள் பங்கேற்றனர்.

சுற்றாடல் மற்றும் காலநிலை மாற்றங்களை

04

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின்

இலங்கை மீதான தீர்மானத்தின் நகல்வடிவம் அவசியமற்ற ஒன்று

இலங்கை கடுமையாக எதிர்க்கும் - அலிசப்ரி

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் இலங்கை தொடர்பான தீர்மானத்தின் நகல்வடிவம் அவசியமற்றது என்பதுடன் பிளவுபடுத்தும் தன்மையை கொண்டதென வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். மேலும் இலங்கை இதனை எதிர்க்குமெனவும் அமைச்சர் அலி சப்ரி குறிப்பிட்டுள்ளார். இத் தீர்மானம்

04

எண்ணெய் கொள்வனவு குறித்து ரஷ்யாவுடன் தொடர் பேச்சுக்கள்

"ஸ்புட்னிக்" பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் - அமைச்சர் பந்துல

ரஷ்யாவிடமிருந்து எரிபொருளை கொள்முதல் செய்வதற்கான கடனை பெற்றுக் கொள்வது தொடர்பில் இலங்கை அதிகாரிகள் ரஷ்யாவுடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக

04

ஜெனீவா ஊடாக இலங்கையை ஒருபோதும் முடக்க முடியாது

அது ஒருபோதும் கைகூடாது என பிரதமர் தினேஷ் சூளுரை

அநுராதபுரம் தினகரன் நிருபர்

"தற்போதைய ஆட்சிக்கு எதிரான சக்திகளே ஜெனீவாவில் முறைப்பாடுகளை முன்வைத்து வருகின்றன. ஜெனீவா ஊடாக எம்மை முடக்கும் முயற்சி

04

அம்பேவல அரச பால் தொழிற்சாலையில் மோசடி

"மில்கோ" தலைவர் CIDயில் முறைப்பாடு

அம்பேவல அரச பால் தொழிற்சாலையில் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படும் எரிபொருள் மோசடி தொடர்பில் மில்கோ நிறுவனத்தின் தலைவர் ரேனுக்க பெரேரா குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளார். மில்கோ நிறுவனத்தின் தலைவர்

04

மிக நீண்டகால இடைவெளியின் பின்

பாராளுமன்ற பார்வையாளர் கூடம் இன்று முதல் திறப்பு

பாராளுமன்றில் பொது மக்கள் பார்வையாளர் கலரி இன்று முதல் திறக்கப்படவுள்ளதாக படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். கொவிட்19 நிலைமை மற்றும் பாதுகாப்புக் காரணங்களுக்காகப் பாராளுமன்றை பார்வையிட இதுவரை விதிக்கப்பட்டிருந்த

04

உணவுப் பாதுகாப்பு, சுகாதாரம்;

இலங்கைக்கு ஜப்பான் அவசர உதவியாக 3.5 மில். டொலர்

இலங்கையில் நிலவும் சவால்கள் நிறைந்த பொருளாதாரச் சூழலைக் கவனத்தில் கொண்டு, மனித நேய உதவிகளை பெற்றுக் கொடுப்பதற்காக மேலதிகமாக 3.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை அவசர உதவித் தொகையாக வழங்க ஜப்பான் அரசாங்கம் (16) தீர்மானித்திருந்தது. 02 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான

04

அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் நினைவுப் பேருரை

நம் நாட்டின் ஈழத்து தமிழ் இலக்கிய வரலாற்றில் முன்னோடிகளுள் ஒருவரான தெல்தோட்டை மண் ஈன்றெடுத்த அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் அவர்கள் இலக்கிய உலகுக்கு ஆற்றிய அரும்பணிகள் பற்றி இளம் தலைமுறையினருக்கு எடுத்துச் சொல்லும் நோக்கில் இந்த வருடமும் நினைவுப்

04

தமிழகத்திலிருந்து வெளிவரும் இனிய நந்தவனம் சஞ்சிகையின் வெள்ளி விழா மலர் அறிமுகம் கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. ஞானம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் வைத்திய கலாநிதி தி. ஞானசேகரன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவிற்கு இலக்கியப் புரவலர் அல்ஹாஜ் ஹாசிம் உமர் முன்னிலை வகித்தார். இந்தியாவில் இருந்து வருகை தந்த இனிய நந்தவனம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் த.சந்திரசேகரன் மற்றும் பேராசிரியர் அன்பு சிவா ஆகியோருடன் இலங்கையில் உள்ள பிரதான பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்கள் உட்பட இலக்கிய பிரமுகர்கள் பலரும் இந்த விழாவில் கலந்து கொண்டனர்.

படம்: எம். நசார்

இளைஞன் மீது ஓடஓட வாள்வெட்டு தாக்குதல்

யாழ். நவாலியில் கும்பல் ஒன்று அடாவடி

யாழ்.விசேட நிருபர்

வீதியில் ஓட ஓட 18 வயது இளைஞன் ஒருவர் மீது சரமாரியாக வாள் வெட்டுத்தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவமொன்று யாழ். நவாலி பகுதியில் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம் பெற்றுள்ளது.

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த

04

கோழி இறைச்சியின் விலையில் மாற்றம்

01 Kg இறைச்சி 1300 முதல் 1350

தோலுடன் உறை நிலையிலுள்ள 1 கிலோ கிராம் கோழி இறைச்சி இன்று முதல் ரூபா 1300 முதல் 1350 ரூபா வரையில் விற்பனை செய்யப்படும் என அகில இலங்கை கோழிப் பண்ணை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. தொடர்ந்து கோழி

04

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

தோட்டக் கம்பனிகளின் பிரித்தாளும் சூழ்ச்சிக்குள் தொழிலாளர்கள் சிக்கிவிடக்கூடாது

ஹற்றன் சுழற்சி நிருபர்)

தோட்டக் கம்பனிகளின் பிரித்தாளும் சூழ்ச்சிக்குள் தொழிலாளர்கள் சிக்கிவிடக்கூடாது. ஒன்றிணைந்து ஒருமித்த நோக்குடன் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்தால் வெற்றி நிச்சயம்.

தொழிலாளர்களுக்கு பக்கபலமாக நாம் நிற்போம் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற எம்.பியுமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

மஸ்கெலியா பெருந்தோட்டத்தின் கீழ் இயங்கும் தோட்டங்களின் தோட்டத் தொழிலாளர்கள் கடந்த சில நாட்களாக தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நேற்று (18.09.2022) மஸ்கெலியா அம்பாள்ஸ் மண்டபத்தில் தோட்ட தொழிலாளர்களை ஜீவன் தொண்டமான், சந்தித்து கலந்துரையாடிய பின்னர் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

“மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனமானது, தொழிலாளர்களை துன்புறுத்திவருகின்றது. இந்நிலையில் தமது தொழில்சார் உரிமைகளுக்காக தொழிலாளர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். நாமும் அதற்கு பக்கபலமாக இருக்கின்றோம். எதற்காக தற்போது தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது என நீங்கள் கேட்கலாம். ஆயிரம் ரூபா தொடர்பான வழக்கு விசாரணை நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தது. அதனால் தான் நாம் நடவடிக்கையில் இறங்கவில்லை. தற்போது நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளிவந்துள்ளது. தொழிற்சங்கங்களுக்கு வெற்றி கிடைத்துள்ளது. எமது கோரிக்கை நியாயமானது. அதனால் தான் போராடுகின்றோம். நாளை நாம் சம்பள நிர்ணய சபைக்கு சென்றால் கூட எமக்கும்தான் சாதகமாக அமையும்.

தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்களுக் கிடையில் ஒற்றுமை இருக்க வேண்டும். அவ்வாறு ஒற்றுமை இருப்பது எமக்கு பலம். எனினும், அந்த ஒற்றுமை எம்மிடையே முழுமையாக இல்லை. அது எமது பலவீனமாகும். எமது இந்த பலவீனம் நிர்வாகத்துக்கு சாதகமாக அமைந்துவிடுகின்றது. எமது ஒற்றுமையை கண்டு தோட்ட நிர்வாகங்கள் நடுங்க வேண்டும். ஆயிரம் ரூபாவை ஓரணியில் நின்று கேட்க வலியுறுத்தினோம். அச்சத்தால் தொழிலாளர்கள் பிளவுபட்டு நின்றனர். துரைமாரை கண்டு அஞ்ச வேண்டியதில்லை. கட்சி, தொழிற்சங்க பேதங்களும் அவசியமில்லை என்றார்.

மலைச்சாரல்

கண்டி மாவட்ட

ஒருங்கிணைப்புக் குழுத்தலைவராக குணதிலக்க ராஜபக்ச எம்.பி பதவியேற்பு

(பூஜாபிட்டிய தினகரன் நிருபர்)

கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவராக நியமனம் பெற்றுள்ள கண்டி மாவட்ட பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினரும் பூஜாபிட்டிய பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் குணதிலக்க ராஜபக்ச மாவட்ட செயலகத்திலுள்ள ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் உத்தியோகபூர்வ அலுவலகத்தை திறந்துவைத்தார். இதனைதொடர்ந்து தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார். இந்நிகழ்வில் கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன், அக்குறணை பிரதேச சபை தவிசாளர் இஸ்திஹார் இமாதுதீன், மாவட்ட மற்றும் மாகாண அரசாங்க நிறுவனங்களின் தலைவர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

பிரதமர் தினேஸ் குணவர்தனவினால் பாராளுமன்றத்திலுள்ள பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வில் வைத்து கடந்த 8 ஆம் திகதி கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக நியமனம் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இறத்தோட்டை இந்து தேசிய கல்லூரியில்

மாணவத்தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் விழா

தம்புள்ளை தினகரன் நிருபர்)

இறத்தோட்டை இந்து தேசிய கல்லூரி மாணவத் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் விழா அண்மையில் இறத்தோட்டை பிரதேச சபை கேட்போர் கூடத்தில் வைபவரீதியாக இடம்பெற்றது.இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே கலந்து கொண்டார்.

மாணவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வில் ஆளுநர் லலித்யூ கமகே, மாத்தளை மாநகரசபை முதல்வர் எஸ்.பிரகாஷ், இறத்தோட்டை பிரதேச சபைத் தலைவர் யூ.பீ.டி.குமாரசேன, மத்திய மாகாண முன்னாள் உறுப்பினர் எம்.சிவஞானம், மாத்தளை வலய கல்விப் பணிப்பாளர் ஜே. எம்.இக்பால், மற்றும் இந்து தேசிய கல்லூரி அதிபர் சந்த்ராதேவி உள்ளிட்ட பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர்.

மஸ்கெலியா தோட்ட சம்பளப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு வழங்கப்படவேண்டும்

மஸ்கெலிய தினகரன் நிருபர்)

மஸ்கெலியா பிளாண்டேசனுக்கு உட்பட்ட பகுதிகளில் தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லையேல் எமது பதிலடி தீவிரமாகவிருக்கும். .” என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மஸ்கெலியா பெருந்தோட்டத்தின் கீழ் இயங்கும் தோட்டங்களின் தோட்டதொழிலாளர்கள் கடந்த சில நாட்களாக தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் நேற்று (18.09.2022) மஸ்கெலியா அம்பாள்ஸ் மண்டபத்தில் தோட்ட தொழிலாளர்களை பொது செயலாளர் ஜீவன் தொண்டமான் மற்றும் தலைவர், தவிசாளர் உறுப்பினர்கள், ஆகியோர் சந்தித்து கலந்துரையாடினர்.

இச்சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

” டொலரின் பெறுமதி அதிகரித்துள்ளதால் தேயிலை ஏற்றுமதி மூலம் சிறந்த வருமானம் கிடைக்கின்றது. தற்போதைய சூழ்நிலையில் தொழிலாளர் ஒருவர் 4 கிலோ பச்சைக்கொழுந்து எடுத்தாலே அவர்களின் சம்பளம் ஈடாகிவிடுகின்றது. அதற்கு அப்பால் பறிக்கப்படும் கொழுந்து மூலம் கம்பனிகளே இலாபம் அடைகின்றன. அதாவது நாளொன்றுக்கு சுமார் 6 ஆயிரம் ரூபா வரை உழைத்துக்கொடுத்து விட்டே தொழிலாளர்கள் ஆயிரம் ரூபா பெறுகின்றனர்.

மஸ்கெலியா பிளாண்டேசன், எதிர்வரும் 10 , 11 ஆம் திகதிக்குள் தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்க வேண்டும். மாறாக இழுத்தடிப்பு இடம்பெற்றால், பெருந்தோட்டத்தை அரசாங்கம் சுவீகரிக்க வேண்டும். அரச நிறுவனத்தால் பராமரிக்க முடியவில்லையெனில், தொழிலாளர்களுக்கு காணியை பகிர்ந்தளிக்க வேண்டும்.

சௌமியமூர்த்தி தொண்டமான், ஆறுமுகன் தொண்டமான் போன்ற எமது மறைந்த தலைவர்கள் அனைவருக்கும், தொழிற்சங்க நடவடிக்கை தொடர்பில் பயிற்சியளித்துள்ளனர். அவர்கள் காட்டிய வழியில் பயணிக்கின்றோம். எனவே, தொழிலாளர்கள் தளர்ந்துவிடக் கூடாது. இதைவிட பயங்கரமான போராட்டங்களை நாம் முன்னெடுத்துள்ளோம். ஒற்றுமையாக இருங்கள். “ என்றார்.

தமிழர்களுக்கான அரசியல் தீர்வு:

சமஷ்டி கட்டமைப்பிலான அதிகார பகிர்வையே எதிர்பார்க்கிறோம்

இந்தியாவின் நிலைப்பாடும் இதுவே - எம்.ஏ.சுமந்திரன்

வவுனியா விசேட நிருபர்

சமஷ்டி கட்டமைப்பிலான அதிகார பகிர்வு அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும். அத்தகைய அதிகார பகிர்வையே ஏற்றுக் கொள்வோம். இந்தியாவும் அந்த நிலைப்பாட்டிலேயே உள்ளதென தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவிலுள்ள தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் (18) நடைபெற்ற மத்திய செயற்குழுக் கூட்டத்தின் பின் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் காலையிலிருந்து மாலை வரை வவுனியா அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் எமது மக்களை பாதிக்கும் பல விடயங்கள் தீர்க்கமாக கலந்து ஆலோசிக்கப்பட்டன. விசேடமாக நிலங்கள் அபகரிப்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் மகாவலி, தொல்லியல் திணைக்களம், வனவிலங்கு பாதுகாப்பு, வனப்பாதுகாப்பு என்று வெவ்வேறு சட்டங்களின் அடிப்படையிலும், வேறு விதமாகவும் நிலங்களுக்கு ஏற்பட இருக்கின்ற ஆபத்துக்களை ஆராய்ந்தோம். திருகோணமலையில் தற்போது ஏற்பட்டுள்ள சவால் குறித்து பேசினோம். குறிப்பாக திருக்கோணேஸ்வரத்துக்கு சொந்தமான மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் ஏற்பட்டுள்ள சவால்கள் குறித்து ஆராயப்பட்டது.

ஐ.நாவில் இந்தியாவின் கூற்றிலே இலங்கையில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு ஒன்றை கொடுப்பதில் இலங்கை அரசாங்கம் கால இழுத்தடிப்பு ஒன்றை செய்து வருகின்றது என்று சொல்லியிருக்கிறார்கள். 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல் படுத்துவது உள்ளடங்களாக அதிகார பகிர்வு முறை செய்யப்பட வேண்டும் என்று தான் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே 13 ஆம் திருத்தச் சட்டத்துடன் இந்த விடயம் நிறைவுக்கு வருகிறது என அவர்கள் சொல்லவில்லை. ஆகவே அந்த நிலைப்பாடு நல்ல நிலைப்பாடு. முதல் படியாக 13வது திருத்தத்தை அமுல்படுவத்துவதாக இருந்தாலும் அதனை செய்யட்டும். ஆனால் அது தீர்வல்ல. அரசியல் தீர்வில் சமஸ்டி கட்டமைப்பிலான அதிகார பகிர்வு அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும். அத்தகைய அதிகார பகிர்வையே ஏற்றுக் கொள்வோம். இந்தியாவும் அந்த நிலைப்பாட்டிலேயே உள்ளது.

ஐ.நாவில் நிறைவேற்றப்பட போகும் தீர்மானங்கள் தொடர்பில் கடந்த வெள்ளிக்கிழமை நான் பேசியுள்ளேன். அதில் என்ன மாற்றம் தேவை என தெளிவாக சொல்லப்பட்டுள்ளது.

ஆனால் அதனை நிறைவேற்றப் போகிறவர்கள் இணை அணுசரணை நாடுகள். அவர்கள தான் இறுதியில் அதில் வேறு எதனையும் சேர்த்துக் கொள்ளலாமா, இதைப் பலப்படுத்தலாமா, அப்படி செய்தால் வாக்குகள் கூடுமா, குறையுமா என்கின்ற கடைசி தீர்மானங்களை எடுப்பார்கள். ஏற்கனவே முன்வைக்கப்பட்டுள்ள வரைவு ஓரளவு எல்லா விடயங்களையும் அணுகுகின்ற ஒரு வரைபாக உள்ளது.

குமார் சங்கக்காரவின் சிலை யாழ். பல்கலை வளாகத்தில் நிறுவ அனுமதி வழங்கப்படவில்லை

யாழ். விசேட நிருபர்

யாழ்.பல்கலைக்கழகத்தினுள் இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் வீரர் குமார் சங்ககாரவுக்கு சிலை நிறுவுவதற்காக எவரும் அனுமதி கோரவில்லையென்றும், அவ்வாறான எந்த அனுமதியும் வழங்கப்படவில்லையென்றும் பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

யாழ் பல்கலைக் கழகத்துக்காக, மூன்றரை அடியில் சங்ககாரவின் சிலை உருவாக்கப்பட்டுள்ளதாக செய்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளமை தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் கேட்ட போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

பல்கலைக்கழகத்தினுள் குமார் சங்ககாரவுக்கு சிலை அமைப்பதற்கான எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. சிலை அமைப்பதற்காக எவரும் அனுமதி கோரவில்லை. வளாகத்தினுள் சிலைகளை நிறுவுவதென்பது நீண்ட பொறிமுறைகளைக் கொண்டது. அவ்வாறான அனுமதி எதுவும் வழங்கவில்லை. இந்த சிலை மன்னாரை சேர்ந்த யாழ். பல்கலைகழக மாணவர் ஒருவரால் கண்ணாடி இழையினால் உருவாக்கப்பட்டதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

சாவகச்சேரி புவிதரன் தேசிய சாதனை

சாவகச்சேரி விஷேட நிருபர்

ஆசிய விளையாட்டு போட்டியை இலக்காகக் கொண்டு கடந்த வாரம் நடத்தப்பட்ட தேசிய மெய்வல்லுனர் தகுதி காண் கோலூன்றிப் பாய்தல் போட்டியில் சாவகச்சேரியைச் சேர்ந்த அ.புவிதரன் 5.15 மீற்றர் உயரத்தை தாண்டி புதிய தேசிய சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவனான சரசாலைப் பகுதியைச் சேர்ந்த புவிதரன் கோலூன்றி பாய்தலில் 5 வருட காலமாக முறியடிக்கப்படாத 5.11 மீற்றர் என்ற தேசிய சாதனையை முறியடித்து 5.15 மீற்றர் உயரத்தை தாண்டி இந்த தேசிய சாதனையை பதிவு செய்துள்ளார்.

பல மில்லியன் செலவில் புனரமைக்கப்பட்ட

வாணிமோட்டை குளக்காணிகளை விவசாயத்துக்கு வழங்குமாறு கோரிக்கை

(பரந்தன் குறூப் நிருபர்)

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேசத்திற்குட்பட்ட புத்துவெட்டுவான் வாணிமோட்டைக்குளம் பல மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளபோதும் இதன் கீழான விவசாயக்காணிகள் இதுவரை தமக்கு வழங்கப்படவில்லை எனவும் அதனை விரைவாக பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின்கீழ் உள்ள புத்துவெட்டுவான் குடியேற்ற கிராமத்தில் வாழ்ந்து வரும் குடும்பங்கள் விவசாயத்தை அப்படையாகக் கொண்ட குடும்பங்களாகவே காணப்படுகின்றன. தற்போது மீள்குடியேறி வசித்து வரும் 27க்கும் மேற்பட்ட குடும்பங்கள் விவசாயத்தை மேற்கொள்வதற்கான சொந்தகாணிகள் இன்றி வாழ்ந்து வருவதாகவும் இதனால் ஜீவனபோயமான விவசாய செய்கைகளை மேற்கொள்ள முடியாதநிலை காணப்படுவுதாகவும் தெரிவித்துள்ள காணிகளற்ற விவசாய குடும்பங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

புத்துவெட்டுவான் கிராமத்தில் சேதமடைந்து காணப்பட்ட வாணி மோட்டை குளம் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுகடந்த 04 ஆண்டுகளுக்கு முன்னர் புனரமைக்கப்பட்டுள்ளதாகவும் ஆனால் அதன் கீழான வயல் நிலங்கள் இதுவரை தமக்கு பகிர்ந்தளிக்கப்படவில்லை எனவும் இதனை பெற்றுத்தர விரைவாக நடவடிக்கை எடுக்குமாறு காணிகள் இல்லாத விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தாதிய உத்தியோகத்தர்களுக்கு வடக்கில் சிறப்பு பயிற்சிகள்

கிளிநொச்சி குறூப் நிருபர்

மருத்துவ நிர்வாக விசேட வைத்திய நிபுணர்களால் வடமாகாணத்தில் கடமையாற்றும் தாதிய உத்தியோகத்தர்களுக்கான சிறப்புப் பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கென விசேடமாக கடந்த வாரம் யாழ் வந்த சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் சதாசிவம் சிறீதரன் தமிழ் மொழி மூலமான இந்தப் பயிற்சி நெறியை ஆரம்பித்து வைத்தார். இதில் கலந்து கொண்ட தாதிய உத்தியோகத்தர்கள் இந்த பயிற்சி நெறியானது மிகவும் பயனுள்ளதாக அமைந்ததாக மகிழ்ச்சி தெரிவித்தனர்.

இதன் தொடர்ச்சியாக சனிக்கிழமையும் (17) மருத்துவ நிர்வாக விசேட வைத்திய நிபுணர்களான Dr த.சத்தியமூர்த்தி Dr த.வினோதன், மற்றும் Dr திலிப் லியனகே ஆகியோரால் தாதிய உத்தியோகத்தர்களுக்கான சிறப்பு வகுப்புகள் யாழ் போதனா வைத்தியசாலையில் நடாத்தப்பட்டன.

இந்தப் பயிற்சி நெறியை மருத்துவ நிர்வாக பயிலுனரான Dr த.காண்டீபன் ஒருங்கிணைத்ததுடன், வடக்கின் மூத்த மருத்துவ நிர்வாகிகளுள் ஒருவரான Dr. சிறீ பவானந்தராஜா மேற்பார்வை செய்திருந்தார்.

தொடர்ந்தும் வடக்கின் சுகாதாரத்துறை உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்களுக்கான சிறப்பு வகுப்புகள் நடத்தப்படவுள்ளதாக தெரியவருகிறது.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 செப்டெம்பர் 20 செவ்வாய்க்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

தொழுகை நேரம்
18 முதல் 22 வரை
சுபஹ் - 04.45
லுஹர் - 12.06
அஸர் - 03.15
மஃரிப் - 06.09
இஷா - 07.19

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் புரட்டாசி 3
ராகுகாலம் : பகல் : 03.00 - 04.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: தசமி

மரக்கறிகளின் விலைகள் கணிசமான அளவு வீழ்ச்சி

பச்சை மிளகாய் கிலோ 200 ரூபாவானது



உள்ளூர் பெரிய வெங்காயம் மற்றும் மரக்கறி வகைகளின் மொத்த விலைகள் குறைந்துள்ளதாக தம்புள்ளை மொத்த மரக்கறி வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

நேற்று முன்தினம் 10 இலட்சம் கிலோ மரக்கறிகளும் 05 இலட்சம் கிலோ உள்ளூர் வெங்காயமும் கிடைத்துள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

மரக்கறி வகைகளின் மொத்த விற்பனை அதிகரிப்புடன் மொத்த விலைகள் வீழ்ச்சியடைந்துள்ளதுடன், போஞ்சி மற்றும் கறி மிளகாய் தவிர மலையகம், தாழ்நிலம், யாழ்ப்பாணம் மற்றும் வடமேல் மாகாணங்களின் மரக்கறி வகைகளின் கையிருப்பு குறைந்துள்ளதாக தம்புள்ளை விசேட பொருளாதார வர்த்தக நிலையத்தின் தலைவர் சாந்த ஏக்கநாயக்க தெரிவித்தார்.

ஒரு கிலோ போஞ்சி 400 முதல் 450 ரூபா வரையிலும், ஒரு கிலோ கறி மிளகாய் 600 முதல் 650 ரூபா வரையிலும், ஒரு கிலோ 80 முதல் 90 ரூபா வரையில் விற்பனை

04

இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் நேற்று (19) இலங்கையின் தேசியக் கொடியுடன் ஐக்கிய இராச்சியத்தின் கொடியும் ஜனாதிபதி அலுவலக வளாகத்தில் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டன.

கொழும்பு தாமரை கோபுரம்; பார்வையிடும் நேர அட்டவணையில் மாற்றம்

கொழும்பு தாமரை கோபுரத்தை பார்வையிடும் நேரம் இன்று (20) முதல் பொதுமக்களுக்காக திருத்தப்பட்டுள்ளதாக கொழும்பு தாமரைக் கோபுர முகாமைத்துவ நிறுவனம் அறிவித்துள்ளது.

இதன்படி தாமரை கோபுரம் இன்று முதல் வார நாட்களில் நண்பகல் 12 மணி முதல் இரவு 10.00 மணி வரை பொதுமக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்படும் என குறித்த நிறுவனத்தின் தலைவர் மேஜர் ஜெனரல்

04

சுற்றுலாத்துறையில் மீள் எழுச்சி

இவ்வருடத்தில் 900 மில். டொலர்கள் வருமானம்

இலங்கையில் கடந்த மூன்று வருடங்களாக தொடர்ச்சியாக பாதிக்கப்பட்ட சுற்றுலாத்துறை, உலகளாவிய பொழுதுபோக்கு பயணத்தின் மீள் எழுச்சி, இலங்கை அதிகாரிகள் மற்றும் தொழில்துறை பங்குதாரர்கள் கவனம் செலுத்தி அதிக சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்கு வரவழைப்பதன் மூலம் ஓரளவு மீட்சியைக் காட்டுகிறது.

இலங்கை மத்திய வங்கியால் தொகுக்கப்பட்ட வருவாய்த் தரவுகளின்படி, ஆகஸ்ட் மாதத்தில் சுற்றுலா மூலம் இலங்கை 67.9 மில்லியன் அமெரிக்க டொலரை ஈட்டியுள்ளது.

எவ்வாறாயினும், ஜூலை மாதத்தில் 85.1 மில்லியன் ரூபா சுற்றுலா வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது.

ஒப்பீட்டளவில் கடந்த மாதத்தில் சுற்றுலா பயணிகளின் வருகை குறைவடைந்தமையினால், முந்தைய மாதத்தை விட ஆகஸ்ட் வருமானம் சற்று குறைவடைந்துள்ளது.

ஜூலை மாதத்தில் 47,293 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்திருந்த நிலையில், ஆகஸ்ட் மாதத்தில் அந்த எண்ணிக்கை 37,760

04

சர்வதேசத்தின் உதவிகளுடன் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு

IMF இன் உதவியும் சாதகமாகவுள்ளது –பிரதமர்

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன் இலங்கை பொருளாதார நெருக்கடியை சமாளிக்க முடியுமென பிரதமர் தினேஷ் குணவர்த்தன நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தற்போது நிலவும் நிலைமையை சமாளிக்க நிர்வாகம் ஒரு மூலோபாயத்தை கொண்டுள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நிலைமையை தீர்க்க தற்போதைய நிர்வாகத்துக்கு பல்வேறு நாடுகள் உதவுவதாக பிரதமர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், பலமான அரசியல் விசுவாசங்களைக் கொண்ட சில குழுக்கள் வெளிநாட்டமைப்புகளை இதில் ஈடுபடுமாறு கோருவதாக பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அரசாங்கத்துக்கு எதிராக சிலர் முறைப்பாடு செய்துள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

மருதானையில் இருந்து ஹிக்கடுவை நோக்கி சென்ற ரயில் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு அருகில் தடம்புரண்டதால் கரையோர ரயில் பாதையில் நேற்று சிறு தாமதம் ஏற்பட்டது. (படம் : சுதத் நிசாந்த)

காசாவிற்கு விசா அனுமதிக்கு 45 நாட்களுக்கு முன்னதாகவே விண்ணப்பிக்க வேண்டும்

பாலஸ்தீன தூதரகம் அறிவிப்பு!

மேற்குக் கரை மற்றும் கிழக்கு ஜெருசலேமில் உள்ள வெளிநாட்டவர்கள், பாலஸ்தீனிய கல்வி நிறுவனங்களில் படிக்க அல்லது கற்பிக்க, பயணம், வணிகம், வேலை அல்லது தன்னார்வத் தொண்டு ஆகியவற்றிற்கு மேலும் சிக்கலாக எழுதப்பட்ட (90 பக்க ஆவணம்) மற்றும் எழுதப்படாத நுழைவு கட்டுப்பாடுகள் முதலிய நடவடிக்கைகள் இந்த வருடம் பெப்ரவரி இல் அறிமுகப்படுத்தப்பட்டன.பின்னர் செப்டம்பர் 4, 2022 இல் திருத்தப்பட்டு, அக்டோபர் 20, 2022 முதல் நடைமுறைக்கு வரும் என பாலஸ்தீன தூதரகம் தெரிவி'த்துள்ளது.

இதில் வெளிநாட்டு கடவுச்சீட்டு மற்றும் பாலஸ்தீனில் நுழைவதற்கான நடவடிக்கைகள் குறிப்பிடப்பட்டிருக்கும். குறிப்பாக வெளிநாட்டு கடவுச்சீட்டைக் கொண்ட பாலஸ்தீனியர்கள் தங்களிடம் சொத்து இருக்கிறதா அல்லது வாரிசாக இருக்கிறதா என்பதை வெளிப்படுத்துவது உட்பட கூடுதல் பாரபட்சமான நடவடிக்கைகளுக்கு

உட்படுத்தப்படுகிறார்கள் என தூதரகம் தெரிவித்துள்ளது.

மேலும், மேற்குக் காசா கரைக்கு விசா கோரும் எவரும் வருகைக்கு 45 நாட்களுக்கு முன்னதாக விண்ணப்பிக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளது.

இந்த பாரபட்சமான நடவடிக்கைகளை திணிப்பதன் நோக்கம், மக்கள் வேலை செய்யவோ அல்லது தன்னார்வத் தொண்டு செய்யவோ முடியாதபடி விசாக்கள் மற்றும் விசா நீடிப்புகளுக்கு கடுமையான கால வரம்புகளை விதிப்பது மற்றும் பிற மாநிலங்களிலிருந்து கல்வி மற்றும் கலாசார பரிமாற்றங்களைத் தடுப்பதற்கும் மற்றும் பாலஸ்தீனத்தில் குடிபெயரும் வளர்ச்சியைத்

04

தமிழ் இளைஞர்களை விடுவிக்க நடவடிக்கை

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ்

இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள அனைத்து இளைஞர்களையும் விரைவில் விடுவிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயற்சித்த போது இந்திய கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 69 தமிழ் இளைஞர்களின் உறவினர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின் போது அமைச்சர் இதனை கூறியுள்ளார்.

நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மீன்பிடித் தொழிலை முன்னெடுத்துச் செல்ல முடியாத காரணத்தினால் அவர்கள் இவ்வாறு வெளிநாடு செல்ல முயற்சித்ததாக முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பில் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 69 தமிழ் இளைஞர்களும் தற்போது பெங்களூர் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக வேறு நாடுகளுக்கு செல்வதை ஒருபோதும் ஏற்க முடியாதென சுட்டிக்காட்டிய அமைச்சர், நட்புறவை பயன்படுத்தி கைது செய்யப்பட்டுள்ள இளைஞர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

ரூ.1,000 சம்பள உயர்வு கோரி மஸ்கெலியா தோட்டக் கம்பனி தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

ஹற்றன் சுழற்சி நிருபர்

மஸ்கெலியா பெருந்தோட்ட கம்பனிக்கு சொந்தமான தேயிலை தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை உடனடியாக 1,000 ரூபாவாக அதிகரிக்குமாறு கோரி மஸ்கெலியா பிரதேசத்திலுள்ள பல தேயிலை தோட்டங்களில் தொழிலாளர்கள் நேற்று (19) காலை கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஏற்பாட்டில் மஸ்கெலியா பெருந்தோட்ட கம்பனிக்குச் சொந்தமான மஸ்கெலியா கிளன்டில்ட் தோட்டத்திலும் போராட்டம் நடத்தப்பட்டது. அத்தோடு, லக்ஷபான மற்றும் பிரவுன்ஸ்வீக் தோட்டங்களிலும் போராட்டங்கள் நடைபெற்றன.

போராட்டத்தில் கலந்து கொண்ட தொழிலாளர்கள் எதிர்ப்பு பதாதைகளை ஏந்தியவண்ணம், கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட தொழிலாளர் தேசிய சங்கத்தின் தேசிய அமைப்பாளர் கணபதி நகுலேஸ்வரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

நாட்டிலுள்ள ஏனைய பெருந்தோட்டக் கம்பனிகளின் கீழ் உள்ள அனைத்து தேயிலை தோட்டங்களிலும் நாளாந்த சம்பளம் 1,000/ முதல் 1,200/ வரை வழங்கப்படுவதாக தெரிவித்தார்.

மஸ்கெலியா பெருந்தோட்டக் கம்பனிக்குச் சொந்தமான தேயிலைத் தோட்டங்களில் மட்டும் 1,000 ரூபாவுக்கும் குறைவான சம்பளம் கொடுத்து அதிக இலாபம் பெற்று அப்பாவி தோட்டத் தொழிலாளர்களை ஒடுக்கப்படுவதாகவும், தொழிலாளர்கள், தற்போது கடும் பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்து வருவதாகவும், மூன்று வேளை உண்பவர்கள் தற்போது ஒரு வேளை மாத்திரமே உண்பதாகவும், குழந்தைகளுடன் வறுமையில் வாடுவதாகவும், இதனால் எதிர்காலத்தில் பட்டினியால் இறக்க நேரிடுமெனவும் தெரிவித்தனர்.

எனவே மஸ்கொலியாவிலும் 1000 ரூபா சம்பளத்தை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்தனர்.

திகதி 18.09.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4882
ரூ. 7,632,870.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,029,582.00
ஆங்கில எழுத்து X வெற்றி இலக்கங்கள் 5 5 9 7 6 4

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3124
ரூ. 4,650,560.00
ஆங்கில எழுத்து C வெற்றி இலக்கங்கள் 48 65 66 78
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 76,768,010.00

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1337
ரூ. 1,503,780.00
வெற்றி இலக்கங்கள் மகரம் 5 3 2 0 9 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,809,497.20

ராசி சுப பலன்
சீட்டிழுப்பு இலக்கம் : 191
ரூ. 5,660,820.00
வெற்றி இலக்கங்கள் கன்னி 03 28 35 41
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 4,825,101.20

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 912
ரூ. 1,663,720.00
E 09 36 76 77
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 126,085,499.60

மேல் 27 Mega POWER மேகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1230
ரூ. 2,557,800.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 271,129,790.00
L 20 30 31 52 73
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

மகாராணி எலிசபெத் நேற்று...

அவருக்கு ஸ்கொட்லாந்திலுள்ள பெல்மொரல் மாளிகையில் சிகிச்சை யளிக்கப்பட்டது. 26 வயதில் பிரிட்டனின் மகாராணியாக முடிசூடிய இரண்டாம் எலிசபெத், 70 ஆண்டுகள் ஆட்சி செய்தார்.

வெஸ்ட்மின்ஸ்டர் மண்டபத்தில் ராணியின் உடலுக்கு இறுதி மரியாதை செலுத்த பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட நேரம் இலங்கை நேரப்படி நேற்றுக் காலை 11 மணியுடன் நிறைவடைந்தது.

இறுதி ஊர்வலத்தைக் காணவும், இறுதிச் சடங்குகள் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதைக் காணவும் லண்டன் நகரில் ஏராளமானோர் குவிந்தனர்.

மகாராணியின் உடலை தாங்கிய பேழை பிரிட்டன் நேரப்படி காலை 11 மணிக்கு வெஸ்ட்மின்ஸ்டர் அபே தேவாலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு சமய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

அதற்காக பிரிட்டன் அரசியல்வாதிகள், வெளிநாட்டுத் தலைவர்கள் மற்றும் பெருமளவிலான விருந்தினர்கள் கலந்துகொண்டனர்.

03 ஆவது சார்ள்ஸ் மன்னருடன் அரச குடும்ப உறுப்பினர்களும் இறுதி ஊர்வலத்துடன் வெஸ்ட்மின்ஸ்டர் அபேக்கு சென்றனர்.

பிரிட்டன் மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் உடல் பொது மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டபின்னர் நேற்றுதிங்கள்கிழமை அரசு மரியாதையுடன் இறுதிக் கிரியைகள் நடைபெற்றன.

நேற்றுக் காலை தனது இறுதிப் பயணத்தை ஆரம்பித்த மகாராணியின் உடல் முதலில் வெஸ்ட்மின்ஸ்டர் அபே கொண்டு செல்லப்பட்டது. அங்கு ஆயிரக் கணக்கானோர் முன்னிலையில் ஜெபக்கூட்டம் நடைபெற்றது.

அரச மரியாதையுடன் நடைபெற்ற மகாராணியின் இறுதிச் சடங்கில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளிலிருந்து சுமார் 2,000 பேர் கலந்துகொண்டதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மகாராணியின் உடல் ஊர்வலமாக வின்ட்சர் கோட்டைக்கு எடுத்துச் செல்லப்பட்டு வின்ட்சரிலுள்ள மன்னர் ஐந்தாம் ஜோர்ஜ் ஞாபகார்த்த தேவாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

புனித ஜார்ஜ் தேவாலயத்துக்குள்ளே கல்லறை ஜெபத்தில் மிக குறைந்த எண்ணிக்கையிலான தனிப்பட்ட முறையில் நெருக்கமான விருந்தினர்கள் மட்டுமே கலந்துகொண்டதுடன் ஜெபத்தை விண்ட்சர் டீன் டேவிட் கோனர் நடத்தினார். கேன்டர்பரி ஆர்ச் பிஷப் ஜஸ்டின் வெல்பை ஆசி வழங்கினார்.

மகாராணியின் ஆட்சி நிறைவுறுவதைக் குறிக்கும் சம்பிரதாயங்கள் அதன் பின் நடந்தன.

ஏகாதிபத்திய அரச மணிமுடி, மகாராணியின் சிலுவைக் கோளம், செங்கோல் போன்றவை சவப்பெட்டியின் மேலே இருந்து அகற்றப்பட்டு கடைசியாக மகாராணியிடமிருந்த மணி முடி நீக்கப்பட்டது. கடைசி பாடல் இசைக்கப்பட்ட பிறகு மகாராணியின் கம்பனி கேம்ப் கலர், கிரெனேடியர் கார்ட்ஸ் கம்பளம் அல்லது கொடி ஒன்றை சவப்பெட்டியின் மீது அரசர் போர்த்துவது சம்பிரதாயமாகும்.

இறுதியாக எம்.ஐ.05 படையின் முன்னாள் தலைவரும் லார்ட் சேம்பர்லெய்னுமான பேரோன் பார்க்கர் தனது அதிகாரக் கோலை உடைத்து சவப்பெட்டியின் மீது வைப்பார். அரச குடும்பத்தில் அரசியின் மிக மூத்த அதிகாரி என்ற முறையில் அரசிக்கான தனது சேவையை அவர் முடித்துக் கொள்வதை இது குறிக்கும்.

பின்னர் ராணியின் உடல் ரோயல் வால்ட்டில் இறக்கப்பட்டதும். மகாராணியின் பைப்பர் இசைப்பார். பிறகு, 'தேவனே அரசனை காப்பாற்று' என்ற கீதம் பாடப்பட்டது. விண்ட்சர் கோட்டையில் பைப்பர் கீதம் இசைக்கவேண்டும் என்பது ராணியே தனிப்பட்ட முறையில் கேட்டுக்கொண்ட கோரிக்கை என்று பக்கிங்ஹாம் அரண்மனை தெரிவித்துள்ளது.

கல்லறை சேவை முடிவுக்கு வந்து அரசரும், அரச குடும்பத்தினரும் தேவாலயத்தை விட்டு புறப்பட்டனர்.

நேற்று மாலை, குடும்பத்தினர் மட்டும் பங்கு பெறும் ஒரு ஜெபத்துக்குப் பிறகு, புனித ஜார்ஜ் தேவாலயத்துக்குள் இடம் பெற்றுள்ள ஆறாம் ஜார்ஜ் நினைவு தேவாலயத்தில் தனது கணவர் எடின்பரோ கோமகனுடன் மகாராணி ஒன்றாகப் அடக்கம் செய்யப்பட்டார்.

அவரது கல்லறையின் மேலே பதிப்பிக்கப்படும் கல்லில் 'ELIZABETH II 19262022' என்று பொறிக்கப்பட்டிருந்தது.

அரசின் வேலைத்திட்டங்களுக்கு...

தயாராக இருப்பதாக நியூசிலாந்து உயர் ஸ்தானிகர் தெரிவித்தார்.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நியூசிலாந்து உயர் ஸ்தானிகரிடம் நியூசிலாந்து சுற்றுலாப் பயணிகளுக்கு மத்தியில் இலங்கையை ஒரு கவர்ச்சிகரமான சுற்றுலா மையமாக மேம்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அதற்கு தனது உடன்பாட்டை தெரிவித்த உயர் ஸ்தானிகர் ஏற்கனவே அது சம்பந்தமாக கவனம் செலுத்தப்பட்டதாகத் தெரிவித்தார்.

தற்போதைய அரசின் நிலை பற்றி உயர் ஸ்தானிகருக்கு இங்கு தெளிவுபடுத்திய அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, புதிய ஜனாதிபதி நியமிக்கப்பட்டதோடு நாட்டுக்குள் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இலங்கை மீதான தீர்மானத்தின்...

வாக்கெடுப்புக்கு விடப்பட்டாலும் இலங்கை அதனை எதிர்க்குமென அமைச்சர் அலி சப்ரி மோர்னிங் செய்திச் சேவைக்கு தெரிவித்துள்ளார்.

நகல்வடிவ தீர்மானம் தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பில் கேள்விக்கு பதிலளித்துள்ள அமைச்சர், இந்த தருணத்தில் இது தேவையற்ற விடயமென நாங்கள் அவர்களுக்கு தெளிவாக தெரிவித்துள்ளோமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

நாங்கள் பிளவுபடுத்தும் எந்த பொறிமுறையையும் இந்த தருணத்தில் விரும்பவில்லை. எங்களுக்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவே அவசியமென அவர் தெரிவித்துள்ளார்.

தீர்மானமொன்று முன்வைக்கப்பட்டாலும் இல்லாவிட்டாலும் உள்நாட்டு பொறிமுறை மூலம் நல்லிணக்கத்தையும் பொறுப்புக்கூறலையும் உறுதி செய்வது அரசாங்கத்தின் கடமையென வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கையரென்ற அடிப்படையில் பொறுப்புக்கூறலையும் நல்லிணக்கத்தையும் உள்நாட்டு பொறிமுறை மூலம் உருவாக்குவது எங்களது கடமையாகும். இது தொடருமென தெரிவித்துள்ள அலிசப்ரி, அதற்கு அப்பால்பட்ட எதுவும் எந்த சர்வதேச பொறிமுறையும் எங்கள் அரசமைப்பை மீறும் வகையில் அமைந்திருக்குமெனவும் குறிப்பிட்டுள்ளார்.

போதிய ஆதரவு இருந்தாலும் இல்லாவிட்டாலும் நாங்கள் இந்த தீர்மானத்தை எதிர்ப்போம். ஏனென்றால் எங்களால் இதனை ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எண்ணெய் கொள்வனவு குறித்து...

போக்குவரத்து,பெருந்தெருக்கள் அமைச்சர் மற்றும் ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன, ஸ்புட்னிக் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியின் போது தெரிவித்துள்ளார்.

இலங்கை பொருளாதார மற்றும் அந்நிய செலாவணி பிரச்சினையிலிருந்து மெல்ல மெல்ல வழமைக்கு திரும்பிக் கொண்டிருக்கும் வேளையில் ரஷ்யாவிடமிருந்து பெரும் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் கடன் பெற்றுக் கொள்வதற்காக நடைபெறும் கலந்துரையாடல்களில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் பந்துல குணவர்த்தன சுட்டிக்காட்டியுள்ளார்.

ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய்யை கொள்முதல் செய்வதற்கும் மற்றும் நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் பிரச்சினைக்கு நிவாரணம் பெற்றுக் கொடுப்பதற்கும் இலங்கைக்கு கடன் பெற்றுக்கொள்வது தொடர்பாக இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புட்டினிடம் வேண்டுகோள் விடுத்திருந்ததாகவும் அமைச்சர் அங்கு தெரிவித்தார்.

எம்.ஐ.ஆர் என அழைக்கப்படும் ரஷ்யாவின் கொடுப்பனவு தொகுதியுடன் தொடர்பை ஏற்படுத்தக் கூடிய திறன் தொடர்பாக இலங்கை அதிகாரிகள் ரஷ்ய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாகவும் இரண்டு நாடுகளின் மத்திய வங்கிகளுக்கு மிடையேயும் இது தொடர்பான கலந்துரையாடல்கள் நடைபெறுவதாகவும் அமைச்சர் பந்துல குணவர்த்தன பேட்டியின் போது தெரிவித்தார்.

ரஷ்யாவுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள பொருளாதார தடை காரணமாக மாஸ்டர் மற்றும் விஸா அட்டைகளை ரஷ்யர்களுக்கு பயன்படுத்த முடியாத நிலைமை தோன்றியுள்ளது. ரஷ்ய கொடுப்பனவு தொகுதியுடன் இணையும் போது இலங்கைக்கு வருகை தரும் ரஷ்ய உல்லாச பயணிகளுக்கு ரஷ்யாவின் கடனட்டை மற்றும் பற்று அட்டைகளை பயன்படுத்த சந்தர்ப்பம் கிடைப்பதால் அவர்களுக்கு அது இலகுவாக அமையுமெனவும் மத்திய வங்கியின் அனுமதி கிடைத்த பின்னர் இது பற்றி அறிவிக்கவுள்ளதாகவும் அவர் அங்கு தெரிவித்தார்.

அம்பேவல அரச பால்...

ரேனுக்க பெரேரா நேற்றைய தினம் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் இந்த முறைப்பாட்டை செய்துள்ளார்.

குறித்த குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு சந்தேக நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மில்கோ நிறுவனத்தின் தலைவர் தனது முறைப்பாட்டில் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த 2019 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியிலேயே எரிபொருள் மோசடியானது இடம்பெற்றிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் குறித்த குற்றச்சாட்டு தொடர்பில் தற்போது உள்ளக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் மில்கோ நிறுவனத்தின் தலைவர் ரேனுக்க பெரேரா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு ஜப்பான் அவசர...

உணவுப் பொருட்களை உலக உணவு நிகழ்ச்சித் திட்டம் (WFP), உணவு, போஷாக்கு, சுகாதாரம், ஆரோக்கியம் போன்றவற்றுக்காக 01 மில்லியன் அமெரிக்க டொலர்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் செம்பிறைச் சங்கத்தினூடாகவும், போஷாக்குக்காக 0.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (UNICEF) ஊடாகவும் இலங்கை மக்களுக்காக வழங்க முன்வந்துள்ளது.

கடந்த மே 20 ஆம் திகதி அறிவிக்கப்பட்ட 03 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான உதவி வழங்கப்பட்டிருந்ததைத் தொடர்ந்து, இந்த அறிவிப்பினூடாக, தற்போதைய சூழலில் ஜப்பான் வழங்கியுள்ள நிதி உதவியின் மொத்தப் பெறுமதி 6.5 மில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்ந்துள்ளது. நீண்ட காலமாக ஜப்பானிய மக்கள் நட்புறவைப் பேணி வரும், இலங்கை மக்கள் எதிர்நோக்கியுள்ள நெருக்கடியான சூழ்நிலையிலிருந்து மீண்டெழுவதற்கு, இந்த உதவி பங்களிப்பு வழங்குமென ஜப்பான் எதிர்பார்க்கின்றது.

1951 ஆம் ஆண்டு செப்டெம்பர் 06 ஆம் திகதி சான் பிரான்சிஸ்கோவில் நடைபெற்ற சமாதான மாநாட்டின் போது மறைந்த ஜே.ஆர். ஜெயவர்த்தன ஆற்றியிருந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உரையிலிருந்து இரு நாடுகளுக்குமிடையிலான இராஜதந்திர உறவுகள் ஆரம்பமாகியிருந்ததுடன், தற்போது 70 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ளது. இக் காலப்பகுதியில் இலங்கையின் உற்ற நட்பு நாடாக, ஜப்பான் எப்போதும் இலங்கைக்கு ஆதரவளித்த வண்ணமுள்ளது. இந்த நட்புறவின் அடிப்படையில், இலங்கையில் மூன்று முன்னுரிமை பிரிவுகளின் அடிப்படையில் நிலைபேறான அபிவிருத்திக்கு ஜப்பான் ஆதரவளித்த வண்ணமுள்ளது. அவை, (01) தர வளர்ச்சியை ஊக்குவித்தல், (02) உள்ளடக்கமான வளர்ச்சிக்காக அபிவிருத்திக்கான ஒன்றிணைவு மற்றும் (03) பாதிப்புறும் தன்மையை குறைத்தல் போன்றன. இதற்காக 140 பில்லியன் ஜப்பானிய யென்களுக்கு அதிகமான தொகை வழங்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் மாத்திரம், இதுவரையில் 35.7 மில்லியன் அமெரிக்க டொலர்களை (செப்டெம்பர் மாதம் வரையில்) மானிய உதவியாக வழங்கியுள்ளோம். குறிப்பாக (02) மற்றும் (03) முன்னுரிமைப் பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆதரவுகளினூடாக, ஜப்பானினால் உடனடி மற்றும் நடுத்தர மற்றும் நீண்ட கால உதவிகள் வழங்கப்பட்டு, இலங்கை மக்களின் எதிர்கால வளர்ச்சிக்கான திறனை மேம்படுத்திக் கொள்வதற்கு உதவிகள் வழங்கப்படுகின்றன.

இலங்கையின் நிலைபேறான விருத்திக்காக ஆதரவளிப்பை நாம் தொடர்வதுடன், இந்த மாதத்தின் பிற்பகுதியில், இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் விஜயத்தினூடாக பரஸ்பர உறவை மேலும் வலுப்படுத்த எதிர்பார்க்கின்றோம். இலங்கை மக்களுடன் எமது உறவை மேலும் வலிமைப்படுத்த ஜப்பானிய தூதரகம் எதிர்பார்க்கின்றது.

இளைஞன் மீது ஓடஓட...

ச. துசாளன் (வயது 18) எனும் இளைஞன் மீதே வாள் வெட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நவாலி கிழக்கு பகுதியிலுள்ள நண்பனின் பிறந்தநாளுக்கு ஞாயிற்றுக்கிழமை இரவு சென்று விட்டு வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த வேளை, நவாலி சம்பந்தப்பிள்ளையார் ஆலயத்துக்கருகில் இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த 05 பேர் கொண்ட குழு வாள் வெட்டை நடத்தியுள்ளது. தாக்குதலுக்கிலக்கான இளைஞன் வன்முறை கும்பலின் தாக்குதலிலிருந்து தப்பிக்கொள்வதற்காக வீதியில் ஓடிய போதிலும் துரத்தி துரத்தி சரமாரியாக வாள் வெட்டு நடத்திவிட்டு தப்பிச் சென்றது.

கோழி இறைச்சியின் விலையில்...

உற்பத்திகளை சந்தைக்கு விடுவிப்பது தொடர்பில் சங்க உறுப்பினர்கள் சந்தித்து கலந்துரையாடவுள்ளதாக அகில இலங்கை கோழி உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்துள்ளார். முக்கியமாக கால்நடை தீவனம் கிடைத்தால் கோழி உற்பத்தி செலவை குறைக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஏழு இலங்கையர் குறித்து...

நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகள் விசாரணைக் குட்படுத்தவுள்ளனர். இவர்கள் சிங்களம் அல்லது ஆங்கில மொழிகளில் எவ்வித பரீட்சயமும் இல்லையென ஆரம்ப விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளது. மேலும் இவர்கள் தங்களுக்குள் தமிழில் உரையாடுவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களின் பலர் முன்னுக்குப் பின் முரணான தகவல்களை வழங்கியுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

இது எவ்வாறு இருப்பினும், உக்ரேன் பத்திரிகையாளரான மரியா ரமனென்கோ அவர்களது படங்களை வெளியிட்டுள்ளதுடன் இலங்கையர்கள் கடத்தப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டதாகவும் அவர் தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

இலங்கையர்கள் சித்திரவதை செய்யப்பட்டார்கள் அவர்களின் நகங்கள் பிடுங்கப்பட்டன மேலும் ரஷ்யர்களிற்காக வேலைபார்க்க நிர்ப்பந்திக்கப்பட்டார்கள் என பொலிஸ் அதிகாரிகளை மேற்கோள் காட்டி உக்ரேன் பத்திரிகையாளர் செய்தி வெளியிட்டுள்ளார்.

இலங்கையை சேர்ந்த ஆறு ஆண்களும் பெண்ணொருவரும் உக்ரேன் மீதான போர் ஆரம்பமாவதற்கு மூன்று வாரங்களிற்கு முன்னரே கல்வி, தொழிலுக்காக உக்ரேன் வந்தனர் என தெரிவித்துள்ள உக்ரேன் பத்திரிகையாளர், சில நாட்கள் வரை ரஷ்ய படையினரின் ஆக்கிரமிப்பிலிருந்த வொவ்சான்ஸ்க் என்பது தெரியவந்ததாகவும் உக்ரேன் பத்திரிகையாளர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் தங்கள் பகுதி விடுவிக்கப்பட்டதும் ஏழு இலங்கையர்களும் மீண்டும் கார்கிவிற்கு நடந்து செல்ல முயன்றதாகவும், அவர்கள் ஹோட்டல் ஒன்றை சென்றடைந்ததும் அதன் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பொலிஸாருக்கு தகவலை தெரிவித்ததாகவும் உக்ரேன் பத்திரிகையாளர் தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

அருள்வாக்கி அப்துல் காதிர்...

பேருரையொன்றை நடாத்த தெல்தோட்டை ஊடக மன்றம் திட்டமிட்டுள்ளது.

இந்த வருடத்திற்கான நினைவுப் பேருரை "தெல்தோட்டை – புதிய தோர் மாற்றத்தை நோக்கி" என்ற கருப்பொருளில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 24ம் திகதி (சனிக்கிழமை) மு.ப. 9.30 மணி முதல், தெல்தோட்டை, புலவர் மலை அடிவாரத்தில் அமைந்துள்ள, க/எனசல்கொல்ல மத்திய கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நினைவுப் பேருரையினை கலாநிதி ரவூப் ஸெய்ன் (நளீமி) நிகழ்த்தவுள்ளார்.

இந்நிகழ்வின் மற்றுமொரு முக்கிய அம்சமாக அருள்வாக்கி அப்துல் காதிர் புலவரை ஜனரஞ்சகப் படுத்தும் நோக்கில் 1965இல் புலவர் பிறந்த நூற்றாண்டு விழாவின் போது புலவர் பற்றிய சிறப்பிதழொன்றை வெளியீட்டமைக்காக தினகரன் தேசிய நாளிதழிற்கும், புலவர் இயற்கையெய்திய நூற்றாண்டினை அனுஷ்டிக்கும் வகையில் 2018ம் ஆண்டு ஜுன் மாதம் ஞானம் சஞ்சிகையின் 217ஆவது இதழை புலவர் பற்றிய சிறப்பிதழாக வெளியிட்ட ஞானம் சஞ்சிகையின் இணை ஆசிரியர் வைத்தியர் ஞானம் ஞானசேகரன் அவர்களுக்கும், புலவர் பற்றிய சிறப்பிதழொன்றை வெளியிட்ட தென்னிந்தியாவின் இளம்பிறை எம். ஏ. ரகுமான் அவர்களுக்கும் தெல்தோட்டை ஊடக மன்றமானது, 'அருள்வாக்கி நேசன்' விருது வழங்கி பாராட்டி கௌரவிக்க உள்ளது.

ஜெனீவா ஊடாக இலங்கையை...

ஒருபோதும் கைகூடாது "என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார். அநுராதபுரத்தில் (18) நடைபெற்ற ஆன்மீக நிகழ்வுகளில் பங்கேற்ற பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

பிரதமர் மேலும் கருத்து தெரிவிக்கையில், "தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் கூட விடுவிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு கோரிக்கைகள் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், இந்த ஆட்சியைக் கொண்டு செல்ல முடியாது எனக் கூறியவர்கள் தான், பொருளாதார விவகாரம் தொடர்பிலும் ஜெனீவாவில் முறைப்பாடுகளை முன்வைத்துள்ளனர். சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் கூட முன்னாள், இந்நாள் ஜனாதிபதிகளின் கீழ் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

எமது அரசு ஜனநாயக ஆட்சி முறையை பின்பற்றுகின்றது. அந்தவகையில் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. வரலாற்றில் என்றுமில்லாத நெருக்கடியை எதிர்கொண்டுள்ளோம்.

இந்த நெருக்கடியில் இருந்து மீளமுடியும் என்ற நம்பிக்கையை சர்வதேசம் வழங்கியுள்ளது. சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து சாதகபதில் கிடைத்துள்ளது.

அமெரிக்கா, ஜப்பான், இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் எமக்கு உதவும். எனவே, ஜெனீவா ஊடாக எம்மை முடக்கலாம் என்ற முயற்சி ஒருபோதும் கைகூடாது" என தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற பார்வையாளர்...

கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது தொடர்பில் படைக்கல சேவிதரினால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவு பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவினால் கடந்த 14ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதற்கமைய முதற்கட்டமாக பாராளுமன்ற அமர்வு தினங்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பாராளுமன்றத்தை பார்வையிட விரும்பும் தரப்பினருக்கு அனுமதியை வழங்க இணக்கம் காணப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்று முதல் அமுலுக்கு வரும் வகையில் பாடசாலை மாணவர்கள் பாராளுமன்றக் கட்டடத்தொகுதிக்கு வருகைதர முடியும்.

இதற்கமைய, முற்பகல் 9.30 முதல் பிற்பகல் 03 மணிவரை அனுமதிக்கப்படுவரென படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்தார்.

அத்துடன், பாராளுமன்றுக்கு பிரவேசிப்பதற்கான விண்ணப்பங்களை www.parliament.lk என்ற இணையத்தளத்துக்கு பிரவேசிப்பதன் மூலம் 011 2777 473, 011 2777 335 என்ற தொலைநகல் இலக்கங்கள் ஊடாகவும் சமர்ப்பிக்க முடியுமென தெரிவிக்கப்படுகிறது.

பல்கலைக்கழகங்களின் மாணவர் குழுக்கள், அரசின் கீழ் பதிவுசெய்யப்பட்ட உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் இந்த வசதியைப் பெற்றுக் கொள்ளலாமென படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ மேலும் தெரிவித்தார்.

காசாவிற்கு விசா அனுமதி... (03 ஆம் பக்கத் தொடர்)

தடுப்பதும், குடும்பங்களை ஒன்றிணைப்பதைத் தடுப்பதும் ஆகும்.

தன்னிச்சையாக இருப்பதைத் தவிர, சட்டவிரோத நடவடிக்கைகள் பாலஸ்தீனத்தில் மக்களுக்கு குடும்ப வாழ்க்கைக்கு உரிமை இல்லை என்பதை தெளிவுபடுத்துகின்றன. ஏனெனில் இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள அதிகாரத்திற்கு குடும்ப மறு இணைப்பு மற்றும் "பொது கொள்கை அடிப்படையில்" வருகைகளை மறுக்கும் முழுமையான மற்றும் முழு உரிமை உள்ளது. அனைத்துத் துறைகளிலும் பாலஸ்தீன மக்களுக்கான இஸ்ரேல் போர்ப் பிரகடனம் மற்றும் அதன் நோக்கம் குடியேறியவர்களைத் துரத்துவதன் மூலமும், பாலஸ்தீனியர்களை இனச் சுத்திகரிப்பதன் மூலமும் நமது நிலத்தைத் திருடி அதன் நிறவெறி அமைப்பைத் தீவிரப்படுத்துவதாகும்.

இந்த அமைப்பு பாலஸ்தீனப் பகுதிகளில் வேலை, படிப்பு அல்லது தன்னார்வப் பணிக்காக வரும் வெளிநாட்டினரைத் தடுக்க அவர்களின் நிறவெறிக் கொள்கையை வலுப்படுத்துகிறது.

மேலும், கிழக்கு ஜெருசலேம் உட்பட ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் உள்ள சட்டவிரோத இஸ்ரேலிய குடியேற்றங்களுக்குச் செல்லும் வெளிநாட்டவர்களுக்கு இந்த நடவடிக்கைகள் எதுவும் பொருந்தாது என அறிக்கை தெரிவிக்கின்றது.

கிழக்கு ஜெருசலேம் உட்பட ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனப் பகுதியின் எந்தப் பகுதியிலும் பாலஸ்தீனியர்கள் மீது அதன் சட்டவிரோதச் சட்டங்களைத் திணிக்க இஸ்ரேலுக்கு இறையாண்மை, அதிகார வரம்பு அல்லது சட்டப்பூர்வ உரிமை இல்லை. சர்வதேச சட்டம் மற்றும் தொடர்புடைய ஐக்கிய நாடுகளின் தீர்மானங்களின் படி, இறையாண்மை என்பது அரசின் பிரதிநிதியான பாலஸ்தீன மக்களுக்கு மட்டுமே சொந்தமானது.

தென்கொரியா காலநிலை...

கட்டுப்படுத்துவதற்கான உபாயங்கள் பற்றி அமைச்சர் நஸீர் அஹமட், மாநாட்டில் கலந்து கொண்டோருடன் பேச்சுக்களை நடத்தினார்.

அத்துடன் தென்கொரிய நாட்டின் பிரதி சுற்றாடல் அமைச்சர் யோ ஜேசுலை சியோலில் சந்தித்து முக்கிய பேச்சுக்களை நடத்தினார். இலங்கையில் சுற்றாடல் துறையுடன் சம்பந்தப்பட்ட சுற்றாடல் மேம்பாடு, கனிய மணல் அகழ்வு தொடர்பிலும் புதிய திட்டங்களை உருவாக்குவதற்கு அந்நாட்டு அமைச்சர் நிதியுதவி வழங்க இணக்கம் தெரிவித்தார்.

அத்துடன் இலங்கை தென்கொரியா விவசாயிகளின் பரஸ்பர தொழிநுட்ப மற்றும் பாரம்பரிய நடைமுறைகளை பகிரந்து கொள்வது குறித்தும் இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது. சுற்றாடல் துறையில் இருதரப்பு ஒத்துழைப்புக்களை வலுப்படுத்துவது குறித்தும் ஆர்வம் காட்டப்பட்டது.

கொழும்பு தாமரை கோபுரம்;... (03 ஆம் பக்கத் தொடர்)

(ஓய்வு பெற்ற) பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

அத்தோடு வார இறுதி நாட்களில் காலை 10.00 மணி முதல் இரவு 11.00 மணி வரை தாமரை கோபுரம் பொது மக்களின் பார்வைக்காக திறந்து வைக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். கொழும்பு தாமரைக் கோபுரத்தின் நெலும் குளுன என அழைக்கப்படும் பகுதிகள் செப்டெம்பர் 15 ஆம் திகதி முதல் பொதுமக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.

மரக்கறிகளின் விலைகள்... (03 ஆம் பக்கத் தொடர்)

செய்யப்பட்ட கெக்கரி மற்றும் வெள்ளரிக் காய்களின் மொத்த விலை நேற்று 35 முதல் 40 ரூபா வரையிலும் குறைத்து விற்கப்பட்டதாகவும் அவர் கூறினார். ஒரு கிலோ பச்சை மிளகாய் மொத்த விற்பனை விலையும் 450 ரூபாவில் இருந்து 200 ரூபாவாகக் குறைந்துள்ளது.

இவ்வருடத்தில் ৯০০ மில். ... (03 ஆம் பக்கத் தொடர்)

பேர் வரை சுமார் 10 ஆயிரத்தினால் குறைந்துள்ளது.

இந்த வருடம் மார்ச் மாதம் முதல் அமெரிக்க டொலருக்கு நிகரான பெறுமதியில் 80 வீதத்தை இலங்கையின் நாணயம் இழந்ததையடுத்து, இலங்கை சுற்றுலா பயணிகளுக்கு ஒப்பீட்டளவில் மலிவான சுற்றுலாத் தலமாக மாறியது.

ஜூலையில் ஏற்பட்ட பாரிய சமூக அமைதியின்மை கணிசமாகத் தணிந்துள்ள நிலையில் சில வாரங்களுக்கு முன்னர் பல ஐரோப்பிய நாடுகள் இலங்கைக்கான பயண ஆலோசனைகளை தளர்த்தியுள்ளன.

ஆகஸ்ட மாத வருவாயுடன், சுற்றுலா பயணிகளின் வருகையால் கடந்த எட்டு மாதங்களில் ஈட்டப்பட்ட மொத்த வருவாய் 892.8 மில்லியன் டொலராக உயர்ந்துள்ளது. கொவிட்19 தொற்றுநோய் அதன் இரண்டாவது ஆண்டாக சுற்றுலா தொழில்துறையைத் தாக்கியதால் கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் சுற்றுலா வருவாய் 63.5 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது.

இந்த ஆண்டு சுற்றுலா வர்த்தகத்திலிருந்து குறைந்தது ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை எதிர்பார்க்கலாம் என்று அதிகாரிகள் கூறுகின்றனர். வெளிநாட்டு நாணயத் தட்டுப்பாட்டினால் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியின் மோசமான விளைவுகளை இலங்கைக்கு பெருமளவில் ஈடு செய்ய, புலம்பெயர் பணியாளர்களின் பணப்பரிமாற்றங்களுடன் இத்தகைய சுற்றுலா பயணிகளின் வரவுகளும் உதவுகின்றன.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

கண்டி கட்டுக்கலை பள்ளிவாசல் மற்றும் அரபுக் கல்லூரிக்கு பௌத்த தேரர்கள் விஜயம்

நாட்டில் நல்லிணக்கத்தையும் சகவாழ்வையும் ஏற்படுத்தும் நோக்கில் அலவத்துக்கொட கொனகலகல விஹராதிபதி தலைமையிலான பௌத்த சமய தேரர் குழுவினர் கண்டி கட்டுக்கலை ஜும்ஆப் பள்ளிவாசல் மற்றும் கட்டுக்கலை அல் புர்க்கானிய்யாவுக்கு விஜயம் செய்து ஜும்ஆப் குத்பா சொற்பொழிவினையும் மத்ரஸா மற்றும் அங்கு அமைந்துள்ள நூதன சாலை போன்ற இடங்களைப் பார்வையிட்டனர்.

கண்டி கட்டுக்கலை ஜும்ஆப் பள்ளிவாசலில் இடம்பெற்ற குத்பா பேருரையினையும் அரபுக் கல்லூரியின் வகுப்பறைகள், நூலகம், கற்பித்தல் முறைகள், நூதனசாலை போன்றவற்றைப் பார்வையிட்டு இஸ்லாமிய சமயக் கடமைகள் போன்ற விளக்கங்களையும் தெளிவுகளையும் பெற்றுக் கொண்டதோடு அரபுக் கல்லூரி மாணவர்களுக்கு பௌத்த பிரிவினா போன்ற இடங்களைப் பார்வையிட சமுகமளிக்குமாறு அன்பான கோரிக்கை விடுத்துச் சென்றுள்ளனர்.

அங்கு வருகை தந்த பௌத்த சமய தேரர்கள் இதன் போது கண்டி கட்டுக்கலை ஜும்ஆப் பள்ளிவாசலின் செயலாளரும் கண்டி மாவட்ட பள்ளிவாசல்களின் சம்மேளனத்தின் தலைவர் கே. ஆர். சித்தீக் உள்ளிட்ட பள்ளிவாசல் நிர்வாக உத்தியோகஸ்தர்கள், அரபுக் கல்லூரி அதிபர், மௌலவிமார்கள் மற்றும் கண்டி தேசிய வைத்தியசாலையின் நரம்பியல் வைத்திய நிபுணர் டப்ளியூ. டி. எல். சிறிவர்தன உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

கம்பளையில் மதம் மற்றும் சமூக நல்லிணக்கத்துக்கு வித்திட்ட மௌலவி பி.எம். ஹுஸைன்தீன்

கம்பளையில் நீண்ட காலமாக தேசிய சகவாழ்வு,சமய நல்லிணக்கம் மற்றும் சமூகங்களுக்கிடையே புரிந்துணர்வு ஆகியவற்றுக்கு அரும் பணி ஆற்றி வருகிறார் கம்பளை அல் ஹக்கீமிய்யா அரபு கல்லூரியின் அதிபர் மௌலவி பி.எம். ஹுஸைன்தீன் (பலாஹி). இவர் சமூகப் பணிகளிலும் அதிக ஈடுபாடுமிக்கவர். இவ்வூரில் முதன் முதலாக 115 பிள்ளைகளின் நிகழ்ச்சிகளை முஸ்லிம் வானொலி சேவையில் ஒலிபரப்பச் செய்த பெருமையும் அவரையே சாரும். நாவல கொஸ்வத்தை பள்ளிவாசலில் இருக்கும் கால கட்டத்தில் கடந்த 5 வருடங்களாக இலங்கை முஸ்லிம் வானொலி சேவையில் குத்பா பேருரைகள் தொடச்சியாக ஒலிபரப்பப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.இவருடனான ஒரு கலந்துரையாடல்,..

இக்பால் அலி

? நீங்கள் கம்பளையில் பல்லினங்களுக்கிடையே தேசிய நல்லிணக்கம், சகவாழ்வு மற்றும் புரிந்துணர்வுகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் அதிக ஈடுபாடு கொண்ட ஒருவர். அதற்கான காரணம்.

கம்பளை நகர் பள்ளியில் கடமையில் இருக்கும் போது பொலிஸ் நிலையத்தில் பல நிகழ்வுகள் நடைபெறும். சர்வ சமய தலைவர்களுக்கிடையிலான ஆலோசனைக் கூட்டங்கள் எனப் பல நிகழ்வுகள் இடம்பெறும். ஒவ்வொரு நிகழ்வுகளிலும் எனக்கு அழைப்பு விடுப்பார்கள். அதில் நானும் கலந்து கொள்வேன்.

அவை மட்டுமல்ல கம்பளை பொலிஸ் நிலையத்தின் மூலம் ஒரு விண்ணப்பப்படிவம் ஒன்றையும் தந்து சர்வ சமயக் குழுவில் இணைத்துக் கொண்டனர். அதற்கான அடையாள அட்டையையும் பொலிஸார் வழங்கினார்கள். கம்பளை நகர் பள்ளியில் பிரதான இமாமாக இருப்பதால் முஸ்லிம் மக்களுடைய தேவைகளுக்கு எந்த நேரத்திலும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியோடு தொலைபேசியின் மூலம் தொடர்பு கொள்ளலாம். நேரில் சென்று கதைக்கலாம். இதன் மூலம் கம்பளைப் பொலிஸாருடன் மிக நெருக்கமான உறவு ஏற்பட்டது.

பொலிஸ் நிலையம் செல்ல நேரம் கிடைக்கா விட்டால் பொலிஸ் அதிகாரிகளை அனுப்பி என்னிடம் ஆலோசனைப் பெற்றுக் கொள்வார்கள்.இதன் மூலம் ஏற்பட்ட உறவு என்னவென்றால் காலப் போக்கில் சர்வசமயக் குழுவில் எல்லா சமயத்தவர்களும் அங்கத்துவம் பெற்றிருந்தார்கள். கிறிஸ்தவ தேவலாயத்தின் வண. பங்குத் தந்தை, இந்து ஆலயத்தின் குருக்கள்,பௌத்த விஹாராதிபதி பிரதான தேரர் ஆகிய அனைவருடனும் நானும் ஒருவராக இருந்து ஒற்றுமையுடன் இயங்கி வந்தேன்.

பொதுவாக பௌத்த சமயத்தின் ஏதாவது விசேட நிகழ்வு என்றால் எல்லா சமயத்தவர்களுடைய ஆலோசனைகளையும் உள்வாங்கிக் கொள்வார்கள். முஸ்லிம் சமயத்தவர்களுடைய புனித ரமழான் காலம் என்று வந்தால் தாரவிஹ் தொழுகை நடைபெறும். ஆண்கள் இரவில் பள்ளிகளுக்குச் தொழுகைக்குச் செல்வார்கள்.பாதைகளில் இளம் சிறார்கள் விளையாடுவார்கள், ஏதாவது இதில் அசௌகரியங்கள் இருக்கின்றதா? பாதுகாப்பு வழங்க வேண்டுமா? உங்களுக்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று என்னிடம் கேட்பார்கள். இரவுத் தொழுகை நடைபெறும் பட்சத்தில் நள்ளிரவு 12.00 மணி அளவில் பெண்கள் பாதையில் செல்வார்கள்.அவை பற்றிக் கூறி பாதுகாப்புத் தருவார்கள்.

அதேவேளையில் கம்பளை விஹாரையின் மூலம் வருடா வருடம் நடத்தப்படும் பெரஹரா உற்சவம் பற்றி எம்மை அழைத்து ஆலோசனைக் கூட்டம் நடத்துவார்கள்.அதற்கு நாங்கள் எல்லோரும் கண்ணியம் செலுத்துவதற்காக நகர் பள்ளிவாசல் இஷாத் தொழுகை முடிந்தவுடன் பெரஹராவை பார்த்து விட்டு வருவோம்.

மறைந்த மர்ஹூம் காதர் ஹாஜியார், அவர்களுக்குத் தேவையான சகல உணவு வசதிகளையும் செய்து கொடுப்பார்.வெசாக், பொசன் போன்ற நிகழ்வுகள் வந்தாலும் எமது நகர் பிரதேச முஸ்லிம்கள்

அவர்களுக்கு கொடுத்து உதவுவார்கள்.பௌத்த சமயத்திற்கும் முஸ்லிம் சமயத்திற்குமிடையே மிக நெருக்கமான உறவு இருந்து வந்தது. கிறிஸ்தவ தேவலாயத்தில் நடைபெறும் விழாவுக்கும் எங்களுக்கு அழைப்பு விடுப்பார்கள்.

அத்தோடு கோயில் நிகழ்வுகளிலும் கலந்து கொள்வோம். இவ்வாறு மும்மத தலைவர்கள் கம்பளையில் நடக்கும் அனைத்து நிகழ்வுகளிலும் கலந்து கொள்வார்கள்.

? கண்டி திகனக் கலவரம் நடைபெற்ற போது கம்பளையில் எவையேனும் அசம்பாவிதங்கள் நடைபெறவில்லையா?

அந்தக் கலவர கால கட்டத்தில் கம்பளையிலும் அது பரவலாம் என்ற ஒரு வதந்தி மக்கள் மத்தியில் இருந்தது. அத்தோடு முஸ்லிம் மக்களும் அச்சத்தில் இருந்தனர்.

எப்பொழுதும் சர்வ சமய குழுவினர்கள் ஒன்று கூடி கூட்டம் நடத்துவோம். அதே போன்று கம்பளை இல்லவத்துறைப் பள்ளிவாசலில் கூட்டம் ஒன்றை அவசரமாக நடத்தினோம். எல்லா சர்வ மதங்களைச் சேர்ந்த மத போதகர்கள் வந்தார்கள். அதன் போது கம்பளையில் அந்தக் கலவரம் வருவதற்கு இடமளிக்க விடமாட்டோம் என்று ஒரு ஏகமனதான உறுதியான தீர்மானத்தை எடுத்துச் செயற்பட்டார்கள்.பொலிஸாருக்கு அனைத்து சர்வ சமயத் தலைவர்களும் ஒத்துழைப்பு வழங்கினார்கள். எந்தவொரு அசம்பாவிதங்களும் நடைபெறவில்லை.இன்றைக்கும் நட்புறவு இருந்து கொண்டுதான் இருக்கிறது.

கம்பளையில் முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறைகள் இடம்பெறாமல் இருப்பதற்கு முக்கிய காரணம் கம்பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாவார். நாங்கள் அவருடன் நடந்து கொண்ட முறையை வைத்துத்தான் அவர் எங்களுக்கு பாதுகாப்பு வழங்கினார். ஒரு சகோதரத்துமான முறையில் தான் கம்பளைக்கு பாதுகாப்புத் தந்தார்கள்.இங்கு தமிழ், கிறிஸ்தவ. முஸ்லிம். சிங்களவர் என்ற பாகுபாடே கிடையாது. நாங்கள் எல்லோரும் ஒரே மேசையில் இருந்து சாப்பிடுவோம். தேநீர் அருந்துவோம்.எங்களுக்கிடையே ஒரு இனவாத ரீதியிலான கசப்புணர்வுகள் எவையும் கிடையாது. நூற்றுக்குநூறு வீதமாக கம்பளையில் அவ்வாறான மோசமான மனிதர்கள் கிடையாது. அது கம்பளையில் இல்லை.

எல்லா விடயங்களிலும் எல்லா மக்களுடனும் ஒன்று சேர்ந்து வாழக் கூடியவர்கள் இருக்கிறார்கள். இதற்குப் பின்னர் பொலிஸ் தலைமையில் கம்பளையிலுள்ள சகல சிவில் சமூக அமைப்புக்கள்,இளைஞர் குழுக்களை வரவழைத்து, ஒரு பொதுக் கூட்டம் ஒன்றை நடத்தினார்கள். அதன் பின்பு பாதுகாப்பு உத்தவாரம் உறுதி செய்யப்பட்டது.நாங்கள் அவர்களுடன் சேர்ந்து இயங்கியமையினால் எங்களுடைய பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கப்பட்டது.

? நீங்கள் ஜம்மிய்யதுல் உலமா சபையோடு சேர்ந்து இயங்கவில்லையா?

நான் கம்பளையில் பிரதான இமாமாக கடமையாற்றும் காலத்தில் அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபை இருக்கவில்லை. நாங்கள் உலமாக்கள் சேர்ந்து மத்ரஸதுல் ஹுதா என்று ஆரம்பித்து பின்னர் இத்திஹாதுல் உலமா என்று பெயரை வைத்து இயங்கி வந்தோம். இதில் கஹட்டபிட்டிய மௌலவி இக்பால் இருந்தார். அவர் மரணம் அடைந்து விட்டார். மௌலவி அன்வர்தீன், கம்பளை சாஹிரா கல்லூரியின் அசிரியர் மௌலவி நவாஸ் என நாங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து இயங்கினோம். இது 1986 இல் இத்திஹாதுல் உலமா என்ற பெயரையும் வைத்தோம்.இத்திஹாதுல் உலமா சபையின் செயலாளர். உப தலைவர் போன்ற பதவிகளைப் பொறுப்பேற்று செயற்பட்டேன்.இது ஒரு தசாப்த காலம் இயங்கியது. காலப் போக்கில் ஜம்மிய்யதுல் உலமா ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வந்தமையால் இந்த அமைப்பை நாங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஏகமனதாக தீர்மானம் எடுத்து அதனோடு இணைத்து கொண்டோம்.

அத்துடன் கொழும்பில் பள்ளிவாசல்கள் சம்மேளனம் ஆரம்பிக்கப்பட்டதோடு கம்பளையிலும் பள்ளிவாசல்கள் சம்மேளனம் ஆரம்பிக்கப்பட்டு மௌலவி ஹைதர் அலி தலைவராக இருந்தார். உப தலைவர் நான். இதனை உருவாக்கியவர் ஹைதர் அலி. இப்போதும் உப தலைவராக இருக்கிறேன். மரியாவத்தைப் பள்ளிவாசலில் நிர்வாகத்தில் உப தலைவராக இருந்துள்ளேன்.

? சமய நல்லிணக்கத்திற்காக பங்காற்றி வரும் நீங்கள் இதன் மூலம் எவ்வகையிலான பயன்களை அடைந்துள்ளீர்கள்?

கிராமத்தில் சில பள்ளிவாசல்களை அமைக்க வேண்டும் என்ற நிலைப்பாடு இருந்தது. அந்த வகையில் 'குடமாகே' என்ற இடத்தில் பள்ளி கட்டுவதற்கு தயாரானார்கள். ஒரு சிறு அறையை கட்டி ஆரம்பிக்கும் போது அந்நிய மக்களால் ஒரு தவாறான கருத்துப் பரப்பப்பட்டு அது தடுத்து நிறுத்துவதறகான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

பொலிஸாரிடம் சென்று நான் இவை பற்றி முறைப்பாடு தெரிவித்தேன். இந்த இடத்தில் 40 பிள்ளைகள் அளவில் குர்ஆன் ஓதி வருகிறார்கள். அவர்கள் தூர இடங்களுக்குச்

செல்ல முடியாது. அது குறித்த இடத்தில் தான் நடத்தப்பட வேண்டும் என்று அவர்களிடம் தெரிவித்தேன். அதற்கு அவர்கள் வந்து பார்வையிட்டுச் சென்றார்கள்.இந்த இடத்தை வந்து பார்த்தவுடன் என்னை எல்லோருக்கும் நன்கு தெரியும்.குர்ஆன் மத்ரஸா தான் நடத்திக் கொண்டிருக்கிறார். அவர்கள் எல்லா மக்களுடனும் சகவாசமாக நடக்கக் கூடியவர் என்று கூறி அதற்கான அங்கீகாரத்தை வழங்கினார்கள். இன்று இது ஒரு ஜும்ஆப் பள்ளியாகும்.

அதேபோன்று சாலியாவத்தைப் பள்ளிவாசல் ஒன்று நிர்மாணிக்க ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு தடை வந்தது. பொலிஸார் சீல் வைத்திருந்தார்கள். நான் பொலிஸில் இந்த இடத்தில் அறநெறிப் பாடசாலை தான் நடத்துகிறேன் என்று கடிதத்தை எழுதிக் கொடுத்து விட்டு ஆரம்பித்தேன்.வந்து பார்த்தவர்கள் இவர் தான் நடத்துக்கிறார். அதில் ஒன்றும் வராது என்ற தீர்மானம் செய்து அங்கீகாரம் வழங்கினார்கள். அது இன்று ஜும்ஆப் பள்ளியாக இருக்கிறது.

அதே போன்று அம்பகொட்டுவ அஸ்சபா பள்ளியில் பிரச்சினை எழுந்தது. பன்றித் தலையைக் கொண்டு வந்து போட்டிருந்தார்கள்.ஆனால் ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்து திறந்து வைக்கப்பட்டது. இதுவும் இன்று ஜும்ஆப் பள்ளிவாசல் ஆகும். இப்படி பல நன்மைகளையும் பயன்களையும் பல்லின மக்களுடன் சேர்ந்து பயணம் செய்யும் போது பெற்றுக் கொள்ளலாம்.

? உங்களின் ஆரம்ப கல்வி வாழ்க்கை குறித்துச் சொல்ல முடியுமா?

ஹப்புகஸ்தலாவையில் பிறந்தேன். அங்குள்ள சாஹிரா மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றேன். அங்கு எட்டாம் வகுப்பு வரையிலும் கற்றேன். ஆரம்ப காலத்தில் எட்டாம் ஆண்டு படித்தால் அரபுக் கல்லூரியில் இணைத்துக் கொள்வார்கள். அந்த வகையில் காத்தான்குடியிலுள்ள மத்ரஸத்துல் அல் பலாஹ் அரபுக் கல்லூரியில் இணைந்து கொண்டேன். இந்தியா அதினாம் பட்டிணத்தைச் சேர்ந்த அப்துல்லா ஹஸ்ரத் அவர்கள் அதிபராக இருந்தார்கள். உப அதிபராக அலியார் ஹஸ்ரத் இருந்தார்கள். மௌலவி ஆதம்லெப்பை புஹாரி ஆசிரியராக இருந்து எனக்கு பாடம் நடத்தினார். என்னுடைய வகுப்பு நண்பராக கலாநிதி அஸ்ரப் இருந்தார். இது இலங்கையில் மிகப் பிரபல்யமான அரபுக் கல்லூரி. இந்த அரபுக் கல்லூரி மிகப் பழைமை வாய்ந்த கல்லூரி. மிகப் பெரிய மார்க்க அறிஞர்களையும் உலமாக்களையும் உருவாக்கிய கல்லூரி. இங்கு ஏழு வருடம் கல்வி கற்றேன்.

? நீங்கள் ஹப்புகஸ்தலாவையில் பிறந்து கம்பளை நகரை வசிப்பிடமாகக் கொள்ளக் காரணம் என்ன?

ஆண்டியா கடவத்தை மஸ்ஜிதுல் அப்ராஸ், இல்லவத்துறை ஜும்ஆப் பள்ளிகளில் கடமையாற்றும் போது மூத்த மகனும் இளைய மகனும் கம்பளை சாஹிராக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார்கள். இரு பிள்ளைகளுடைய படிப்பை கருத்திற் கொண்டு வெளியே செல்வதை விட கம்பளையிலேயே நிரந்தர வதிவிடமாக ஆக்கிக் கொள்ளலாம் என்று ஒரு தீர்மானத்தை எடுத்தேன். ஆதலால் கம்பளையை வதிவிடமாக தெரிவு செய்து கொண்டேன்.

? நீங்கள் பிரத்தியேகமான முறையில் ஒரு தனியார் அரபுக் கல்லூரி நடத்தி வருகின்றீர்கள். அதன் ஆரம்பம் பற்றிக் கூறுவீர்களா?

கம்பளையை தெரிவு செய்தவுடன் ஒரு தனியார் அரபுக் கல்லூரியொன்றை ஆரம்பிக்க வேண்டும் என்ற சிந்தனை இருந்தது. அப்போது மரியாவத்தை அஸ்ஸாலிஹா ஜும்ஆப் பள்ளிவாசலில் இமாமாக கடமையாற்றுகின்றேன். அங்கேயும் பள்ளியில் குர்ஆன் மத்ராஸா நடத்தி வந்தேன். ஆனால் பள்ளிவாசல் முடிவடைந்தவுடன் சும்மா இருக்கும் நேரத்தை ஒரு பிரயோசனமாகப் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கம் இருந்தது. அத்தோடு 'நாங்கள் குடும்பத்தோடு இருப்பதால் பள்ளிவாசல் குர்ஆன் மத்ரஸாவுக்கு சமுகமளிக்க முடியாத பிள்ளைகளுக்கு வீட்டில் வைத்து கொஞ்சம் ஓதிக் கொடுங்கள்' என்று பொது மக்களுடைய வேண்டுகோளும் அதிகமாக இருந்தது.

2000 ஆம் அண்டில் அல் மத்ரஸதுல் ஹுதா என்ற பெயரில் 10, 15 பிள்ளைகளோடு ஆரம்பித்தேன்.வளர்ச்சி கண்டு வந்தது.பிள்ளைகளுக்கு பரீட்சைகள் வைத்தல்,மீலாத் விழாப் போட்டி நடத்துதல், மார்க்க ஒழுக்கப் பண்புகளை கற்றுக் கொடுத்தல் மிகச் சிறப்பாக நடத்தி வந்தோம். இம்மத்ரஸாவுக்கு ஏராளமான பிள்ளைகள் வரத் தொடங்கினார்கள்.மாலை 5.00 மணிக்கு பிற்பாடுதான் இந்த மத்ரஸா ஆரம்பிக்கப்படும். இது நன்கு வளர்ந்து வந்தது. பெற்றோர்கள் இம் மத்ரஸா மீது அதிக விருப்பம் கொண்டார்கள். சொந்தமான இடம் ஒன்றை வாங்கி சுதந்திரமான முறையில் நடத்தி வந்தோம். பின்னர் 100 பிள்ளைகளுக்கு மேல் கல்வி பயிலும் மத்ரஸாவாக இது மாற்றம் பெற்றது.

2006 இல் அல் மத்ரஸதுல் ஹக்கீமியா எனப் பெயர் வைத்தோம். அது நன்கு வளர்ச்சி கண்டு 100 க்கு மேற்பட்ட பிள்ளைகள் இங்கு அரபுக் கல்வி கற்றார்கள். இதில் பகுதி நேரக் குர்ஆன் மத்ரஸா, ஹிப்லு மத்ரஸா வையும் ஆரம்பித்து மிகத் திறன்பட நடத்தி வந்தோம்.

? இந்த மத்ரஸா எதிர்நோக்கிய சவால்கள்?.

கொரோனா காலத்தில் இம் மத்ரஸா நடைபெற்றதால் அதனைப் பார்வையிட சுகாதாரப் பிரிவினர் திடீரென வந்து விட்டார்கள்.

இக்கால கட்டத்தில் பிள்ளைகளும் பயந்தார்கள், பெற்றோர்களும் பயந்தார்கள். இதனால் வருகை தந்த பிள்ளைகளில் நிறையப் பேர் நின்று விட்டார்கள். ஆனாலும் அவ்வாறு குறைந்த பிள்ளைகள் தற்போது மீண்டும் படிப்படியாக வருகை தந்து கொண்டிருக்கிறார்கள்.

தொடர்ந்து ஹிப்லு குர்ஆன் மனனம் உள்ளிட்ட அனைத்து கல்வி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.அவர்களுக்கு பரீட்சை நடக்கின்றது. குர்ஆன் திலாவத், குர்ஆனை முறையாக ஓதக் கூடிய அமைப்பு. குர்ஆனை மனனம் செய்தல், சீரான முறையில் ஓதுதல், ஹதீஸ், துஆ, பிக்ஹு கலை உள்ளிட்ட கிட்டத்தட்ட 10 பாடங்கள் உட்படுத்தப்பட்டு ஐந்து வருடத்திற்குள் பயிற்சி நெறியை முடித்துக் கொள்வதற்கான பாடத் திட்டத்தை வகுத்து நடத்தி வருகின்றோம்.

? ஒரு பள்ளியில் பிரதான இமாமாக கடமையில் இருந்து கொண்டு நீங்கள் பிரத்தியேகமான முறையில் தனியார் குர்ஆன் மத்ரஸாவை நடத்துவதற்கு தடைகள் வரவில்லையா?

நான் கம்பளை நகர் பள்ளியில் கடமை புரிய செல்வதற்கு முன்னர் இருந்தே மத்ரஸாவை நடத்தி வந்தேன். இதை நான் எந்தச் சந்தர்ப்பத்திலும் கைவிடவிரும்பவில்லை. அப்பொழுது கம்பளை நகர் பள்ளிவாசலின் தலைவராக முன்னாள் அமைச்சர் மர்ஹூம் ஏ. ஆர், எம். காதர் ஹாஜியார் இருந்தார்கள். அவர் என்னை அந்தப் பள்ளிக்கு இமாமாக கடமையாற்ற அழைப்பு விடுத்தார். அதற்கு நான் பள்ளியில் எனக்கு கடமையாற்ற பூரண விருப்பம் ஆனாலும் நான் ஒரு தனியான மத்ரஸாவை நடத்தி வருகின்றேன். அதைத் தொடர்ந்து கைவிடாமல் நடத்துவதற்கு அனுமதி தர வேண்டும் 'என்ற வேண்டுகோளையும் அவரிடம் முன் வைத்தேன். அதற்கு அவர் இணக்கம் தெரிவித்தார்.நான் அப்பள்ளியில் இணைந்து கொண்டோலும் மத்ரஸாவையும் சிறப்பாக நடத்தி வந்தேன்.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

தினகரன்
THINAKARAN
திகைரன்

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் புரட்டாதி மாதம் 04ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஸபர் பிறை 24

குறள் தரும் சிந்தனை

அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தங்கணத்தார்
அல்லார்முன் கோட்டி கொளல்

அறிவுள்ளவர்கள், அறிவில்லாதவர்களின் அவையில் பேசுவது, தூய்மையில்லாத முற்றத்தில் சிந்திடும் அமிழ்தம்போல் வீணாகிவிடும்.

உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்த ஒன்றுபட வேண்டிய தருணம்

பொருளாதார நெருக்கடிக்கு நாடு முகம் கொடுத்துள்ள தற்போதைய சூழலில் மக்களின் உணவு பாதுகாப்பு மற்றும் போஷாக்கு தொடர்பில் விஷேட கவனம் செலுத்தப்பட்டுள்ளன.

இப்பின்புலத்தில் பரந்தடிப்படையிலான திட்டங்களை உள்ளடக்கிய வேலைத்திட்டமாக கிராமிய பொருளாதார மேம்பாட்டு மையங்களை வலுவூட்டும் பல்துறை சார் கூட்டுப் பொறிமுறையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இம்மாதம் 13 ஆம் திகதி ஆரம்பித்து வைத்துள்ளார். இப்பொறிமுறையானது ஏழு குழுக்களைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் போஷாக்கு சபைக்கு ஜனாதிபதி தலைமை தாங்குகிறார்.

உணவு பாதுகாப்பையும் போஷாக்கையும் உறுதிப்படுத்துவதைப் பிரதான இலக்காகக் கொண்டுள்ள இவ்வேலைத்திட்டத்தின் அடிப்படை நோக்கம், எந்தவொரு குடிமகனும் பட்டினியால் வாடவும், போஷாக்கு குறைபாட்டினால் எந்தவொரு குழந்தையும் பாதிக்கப்படவும் கூடாது என்பதாகும். அதற்கேற்ப ஜனாதிபதி, எவரும் பட்டினியால் வாட இடமளிக்க வேண்டாம் என அறிவுறுத்தல்களையும் வழங்கி இருக்கின்றார்.

அந்த வகையில், நாட்டு மக்களின் உணவுப் பாதுகாப்பையும் போஷாக்கையும் உறுதி செய்யும் வகையிலான வேலைத்திட்டங்கள் மேல் மட்டம் முதல் அடிமட்டம் வரையும், அதாவது தேசிய மட்டம் முதல் மாகாண, மாவட்ட, பிரதேச, கிராமிய மட்டம் வரையும் விரிவான அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான சூழலில், உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கை உறுதி செய்யும் வேலைத்திட்டத்திற்கு பொறுப்பான ஜனாதிபதியின் ஆலோசகர் கலாநிதி சுரேன் பட்டகொட தலைமையில் மாவட்ட செயலாளர்களுக்கும் பிரதேச செயலாளர்களுக்கும் இத்திட்டம் குறித்து கடந்த வெள்ளியன்று அறிவூட்டப்பட்டுள்ளன.

இச்சமயம் உரையாற்றிய கலாநிதி பட்டகொட, 'உணவு இல்லாதவர்களுக்கு உணவு வழங்குவதை முதன்மை இலக்காகக் கொண்டுள்ள இத்திட்டத்திற்கு தேவையான தரவுகளை வீடு வீடாகச் சென்றாவது சேகரிக்குமாறும் இப்பணியை அடுத்த வாரத்திற்குள் ஆரம்பிக்குமாறும் தேவைப்படின் இத்தரவுகளை சேகரிக்கவென இணைய தளத் தொழில்நுடபத்தைப் பயன்படுத்த முடியும் என்றும் கூறியுள்ளார்.

இது நாட்டு மக்களின் உணவுப் பாதுகாப்பையும் போஷாக்கையும் உறுதிப்படுத்துவதற்கு எவ்வளவு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது என்பதை தெளிவாக எடுத்துக்காட்டக் கூடியதாக உள்ளது.

நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடியின் விளைவாக மக்கள் அசௌகரியங்களையும் அழுத்தங்களையும் எதிர்கொண்டுள்ளனர் என்பதில் ஐயமில்லை.

ஆனாலும், கடந்த சிறுபோகத்திலும் பெரும் போகத்திலும் உரிய அறுவடையைப் பெற்றுக்கொள்வதில் நாடு தோல்வி அடைந்தன. அதன் விளைவாகவே நாட்டில் உணவு நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றது. இந்த உணவுப் பற்றாக்குறையினால் 06 வீதமான மக்கள் உணவு உட்கொள்வதைக் குறைத்துக் கொண்டுள்ளனர்' என்று சுட்டிக்காட்டியுள்ள கலாநிதி சுரேன் பட்டகொட, குறைந்த வருமானம் பெறுவோருக்கு உணவு வழங்குவதை இப்பொறிமுறை முதன்மைத் திட்டமாகக் கொண்டுள்ளதோடு சமூக சமையலறைத் திட்டத்தின் ஊடாக உணவு இல்லாதோருக்கு உணவு வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது' என்றும் கூறியுள்ளார்.

அதனால் நாட்டு மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி முன்னெடுக்கப்படும் இவ்வேலைத்திட்டத்திற்கு சகலரும் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க வேண்டும். மக்களின் உணவு பாதுகாப்பையும் போஷாக்கையும் உறுதிப்படுத்துவதற்கு சகரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டிய தருணம் இது. அர்ப்பணிப்புடன் உழைக்க வேண்டிய தேவை நாட்டின் முன்பாக இருந்து கொண்டிருக்கின்றது.

இந்த நிலையில் காலாகாலமாகப் பின்பற்றப்படும் அரசியல் முறைமையைக் கையாண்டு அற்ப அரசியல் இலாபம் பெற்றுக்கொள்வதற்கான நேர காலம் இதுல்ல. மக்களின் உணவுப் பாதுகாப்பையும் போஷாக்கையும் உறுதிப்படுத்துவதற்கு முன்னுரிமை அளித்து செயற்படுவது இன்றைய அவசரத் தேவையாக உள்ளது. இதில் ஏற்ற தாழ்வுகள் பார்க்கப்படலாகாது.

கடந்த பெரும்போகம், சிறுபோகத்தில் போன்று எதிர்வரும் போகங்களிலும் உரிய அறுவடையைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைக்கு உள்ளாக முடியாது. அவ்வாறான நிலைமையைத் தவிர்ப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக பசளை, விதை, கிருமிநாசினி உள்ளிட்ட அனைத்தையும் எவ்வித தட்டுப்பாடுகளும் இன்றி விவசாயிகளுக்கு பெற்றுக்கொடுப்பதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஆகவே எதிர்வரும் போகங்களில் உரிய அறுவடையைப் பெற்றுக்கொள்வதற்கும் மக்களின் உணவுப் பாதுகாப்பையும் போஷாக்கையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் என முன்னெடுக்கப்படும் அனைத்து வேலைத்திட்டங்களுக்கும் உயரிய ஆதரவும் ஒத்துழைப்பும் அளிக்கவென கைகோர்த்து செயற்பட வேண்டும். அது காலத்தின் அவசியத் தேவை மாத்திரமல்லாமல் நாட்டுக்கும் மக்களுக்கும் அளிக்கும் பாரிய சேவையாகவும் அமையும் என்றால் அது மிகையாகாது.

editor.tkn@lakehouse.lk

இலக்கிய ஆளுமை அருள்வாக்கி அப்துல் காதிர் புலவருக்கு ஓர் விழா

அருள்வாக்கி அப்துல் காதிர் நினைவு தின விழா எதிர்வரும் 24 ஆம் திகதி கண்டி எனசல்கொல்ல மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறுவதோடு, அருள்வாக்கி நினைவு மலரும் வெளியிடப்பட உள்ளது. இந்நிகழ்வில் தினகரன் பிரதம ஆசிரியர் ரி. செந்தில் வேலவர், ஞானம் சஞ்சிகை இணை ஆசிரியர் வைத்தியர் ஞானம் ஞானசேகரன், இளம்பிறை எம்.ஏ. ரகுமான் ஆகியோர் கௌரவிக்கப்படுகின்றனர். அதன் நிமித்தம் இக்கட்டுரை பிரசுரமாகிறது.

சங்க காலப்புலவர்களும், மூவேந்தர்களும், குறுநில மன்னர்களும் தமிழ்த் தாயை பேணிப் பாதுகாத்தது போல் இலங்கையிலும் இந்தியாவிலும் வாழ்ந்த பல புலவர்களும் அறிஞர்களும் தமிழுக்கு அருந்தொண்டாற்றியுள்ளனர். அவ்வரிசையில் 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் தமிழ் தொண்டாற்றிய மலையகப் புலவர்களுள் அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் மின்னுந் தாரகையாகத் திகழ்கின்றார்.

பச்சைப்பசேலென்ற மலைத்தொடர்களாலும் மனதை ஈர்க்கும் அழகிய தேயிலைத் தோட்டங்களாலும் சூழப்பட்டிருந்த தெல்தோட்டை போப்பிட்டிய எனும் குக்கிராமத்தில் இவர் 1866ம் ஆண்டு பிறந்தார். தமது ஆரம்பக்கல்வியை ஊர் பள்ளிக்கூடத்தில் கற்ற இவரை, இவரது தந்தை அல்லா பிச்சை ராவுத்தர் இடைநிலைக் கல்வியை கற்பதற்காக கண்டி குயீன்ஸ் அகடமியில் சேர்த்தார். பதினொரு வயதேயான இவர் மாலை வேளையில் தம் வகுப்புத் தோழர்களுடன் கண்டி குன்றுமலைப் பூங்காவுக்குச் சென்று இயற்கைக் காட்சிகளை ரசிப்பதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் தம் சகாக்களிடம் தனக்கு மயக்க நிலை போன்று ஏற்படுவதாகவும் அச்சமயத்தில் பல இன்பக் காட்சிகள் தென்படுவதாகவும் கூறி கண்டியின் வனப்பை அடுக்கு மொழியில் விபரித்தார். இதுபற்றி ஆசிரியர் அவரிடம் அளவலாவிக் கொண்டிருந்த போது எலிசபத் எனும் மாணவி அவ்விடம் வந்தார். அவரின் அழகை கவிதை அமைப்பிலே பாடிக்காட்டினார். இதுவே அவரிடமிருந்து கவிதை வெளிக்கொணரப்பட்ட முதற் சந்தர்ப்பமாகும். அன்று முதல் மாணவர் மன்றங்களிலும் கலை விழாக்களிலும் கலந்து கொண்டு கவிதை படிக்கத் தொடங்கினார். பள்ளிவாசல்களிலும், வீடுகளிலும் நடைபெறும் மௌலீது வைபவங்களிலும், மரண வீடுகளிலும் பதங்கள் பாடினார். இந்துக்களின் கலை விழாக்களிலும் கலந்துகொண்டு கவிபாடுவார்.

இவரது கவிதையாற்றலில் கட்டுண்டு போன மக்கள் பாம்பாட்டியின் மகுடியில் மயங்கிய பாம்பினைப் போன்று ஆடாது அசையாது அமர்ந்திருந்து கவிதைகளுக்கு செவி சாய்ப்பர். மகிழ்ச்சிப் பிரவாகத்தால் மக்கள் இவரை சிறு பராயத்திலேயே புலவர் என்றும், அவர் வாழ்ந்த பகுதியை புலவர் மலை என்றும் அழைத்தனர்.

தம் புதல்வரின் கவிப் புலமையை இனங்கண்டு கொண்ட இவரது தந்தை உயர் கல்வி கற்பதற்காக தமிழ்நாடு மதுரை ஜில்லா திருப்புத்தூர் தமிழ் வித்தியாலயத்தில் சேர்த்தார். அங்கு முதல்வராக இருந்த மஹ்மூது முத்துபாவாப் புலவரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களையும், அரபுத்தமிழையும், ஆங்கிலத்தையும் தெள்ளத்தெளிவாக கற்றுத் தேர்ந்தார்.

இவர் தமிழ் இலக்கியத்திற்கு வழங்கியுள்ள பங்களிப்பின் காரணமாக தமிழ் மூதறிஞர்களாலும், இஸ்லாமிய இலக்கிய வாதிகளாலும் பல்வேறு சிறப்புப் பட்டங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். 1881ம் ஆண்டு தமிழக வித்துவசிரோமணி கவிராயர் அம்பலவாணர் தலைமையில் யாழ்ப்பாணத்தில் கவியரங்கொன்று நடைபெற்றது.

அங்கு பல மூத்த புலவர்களும், அறிஞர் பெருமக்களும் குழுமியிருந்தனர். மேடையை நோக்கி வந்த 16 வயது மதிக்கத்தக்க சிறுவனொருவனைக் கண்ட ஒரு புலவர் 'யார் இந்தச் சிறுக்கன்?' எனக் கேட்டார். நானும் கவி பாட வந்துள்ளேன் என்றான் சிறுவன். 'வாரும் இரும்படியும்' என்றார் அப்புலவர்.

உடனே அச்சிறுவன் 'அட்டகிரி எட்டையும் பந்தாகவே உருட்டி அம்பலம் முன்னிலையில் வைப்பேன்...' என்ற கவிதையையும் மற்றும் சில கவிதைகளையும் பாடியபோது சபையோர்கள் அருள்வாக்கி எனும் பட்டத்தை வழங்கி கௌரவித்தனர். 1912ஆம் ஆண்டு வித்துவானும் சபாநாயகருமான சு.மு. அசனாலெப்பைப் புலவர் தலைமையில் யாழ்ப்பாணத்தில் வைத்து வித்துவதீபம் எனும் பட்டம் வழங்கப்பட்டது.

ஸ்ரீ விக்ரமசிங்ஹ மன்னன் காலத்தில் ஒரு சிங்களக் கவிஞர் 'மெஹிவாம நிலதாரிங் ... என்ற கவிதையின் சந்தத்துக்கேற்ப ஒரு பாடலை பாடுமாறு கேட்டபோது உடனே அதே சத்தத்தில் ஒரு பாடலை இசைத்துக் காட்டினார். இதனால் மக்கள் இவருக்கு நிமிட வித்துவான் எனும் பட்டத்தை வழங்கினர். இவை மாத்திரமன்றி மேலும் ஒன்பது (9) சிறப்புப் பெயர்கள் வழங்கி இவர் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

ஒரு தடவை கண்டி மாநகரிலே மாபெரும் கலையரங்கொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நாட்டின் பல பாகங்களிலிருந்தும் புலமைமிக்க பல கவிஞர்களும், பொது மக்களும் அங்கு சமுகமளித்திருந்தனர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பொன்னம்பலக் கவிராயர், சங்கரன் பிள்ளை புலவர் போன்றோரும் சமுகமளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இம்மாபெரும் சபையிலே அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் பாட்டாலே விளக்கின் திரிகளை எரியச் செய்து பாட்டினாலேயே அவ்வனைத்து திரிகளையும் அனைத்தும் காட்டினார். இது சபையோரை மெய்சிலிர்க்க வைத்தது. இந்நிகழ்வே 'தீப சித்தி' எனப்படுகின்றது. இந்நிகழ்வு கவிஞரின் இறை பக்தியின் முக்தி நிலையையும், தமிழ் இலக்கண, இலக்கியத்தில் அவர் கொண்டிருந்த புலமையையும் படம்பிடித்துக் காட்டுகின்றது.

வித்துபதீபப் புலவரவர்கள் 30க்கும் மேற்பட்ட நூல்களை இயற்றி தமிழுலகில் ஒரு திருப்பு முனையை உருவாக்கினார். அவரது நூல்களில் சிலதை மட்டுமே இன்று எழுத்து வடிவில் காண முடிகின்றது.

என்றாலும் தினகரன் பத்திரிகையே 1963.9.19ஆம் திகதி 4ம் பக்கத்தில் இவரைப்பற்றிய செய்திகளை முதன் முதலில் வெளிச்சத்துக்கு கொண்டு வந்தது. அதன் பின் 1965ஆம் ஆண்டு அதிபர் எஸ்.எம்.ஏ. ஹஸன் தலைமைத்தாங்கி நடத்திய நூற்றாண்டு விழாவும் 1965.8.30 ஆம் திகதி தினகரன் பத்திரிகை வெளியிட்ட அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் நூற்றாண்டு விழா சிறப்பு மலரும் புலவரை முழு நாட்டுக்கும் ஜனரஞ்சகப்படுத்தியது. இம்மலரில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற முதலாவது அங்கத்தவர் செ. இராசதுரையினதும், அக்கரணை பாராளுமன்ற இரண்டாவது அங்கத்தவர் ஏ.சி.எஸ். ஹமீத்தினதும் ஆசியுரை இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தேச அபிமானி
ஐ.எம். நிஸாம் பி.ஏ.
ஆசிரிய ஆலோசகர்
கண்டி கல்வி வலயம்

நாடகம், அரங்கியல் உயர் டிப்ளோமா விருது கலைத்துறை மேம்பாட்டுக்கோர் உந்துசக்தி

டவர் மண்டப அரங்கியல் மன்றம் 1978 ஆம் ஆண்டு பாராளுமன்ற 1 ஆம் இலக்க சட்டத்தின் கீழ், இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. அதன் நோக்கங்கள் மற்றும் பணிகளை செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஒன்றாக, 1997 இல் நிறுவப்பட்ட டவர் மண்டப நாடக அரங்கியல் பாடசாலையின் நாடகம் மற்றும் அரங்கியல் உயர்தர டிப்ளோமா பாடநெறியின் எட்டாவது டிப்ளோமா விருது வழங்கும் வைபவம் பௌத்தம், கலாசார மற்றும் மத அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தலைமையில் எல்பின்ஸ்டன் திரையரங்கில் கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

இங்கு கற்கையை நிறைவு செய்து உயர் டிப்ளோமா சான்றிதழ் பெற்ற 37 பேரில் ஐவருக்கு சி. டொன் பஸ்டியன் ஜயவீர பண்டார புலமைப்பரிசில் வழங்கப்பட்டுள்ளன. அத்தோடு சட்டத்தரணி ஜோன் டி சில்வா புலமைப்பரிசில், சட்டத்தரணி சார்ள்ஸ் டயஸ் புலமைப்பரிசில், பேராசிரியர் எதிரிவீர சரச்சந்திர புலமைப்பரிசில்களும் வழங்கப்பட்டன.

இலங்கையில் நாடகம் மற்றும் அரங்கியல் உயர் டிப்ளோமாவை வழங்கும் ஒரே பொது நிறுவனமாக டவர் மண்டப நாடக அரங்கியல் பாடசாலை விளங்குகிறது. நாடகம், நாடகம் குறித்த அறிமுறை, செயன்முறை அறிவு உட்பட நாடகம் மற்றும் அரங்கியல் கலை தொடர்பில் பரந்த நிபுணத்துவம் கொண்ட விரிவுரையாளர்களின் கீழ் இங்கு கற்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அறிவு, திறன் மற்றும் பரந்த மனப்பான்மையைக் கொண்ட முழுமையான டிப்ளோமாதாரர்களை உருவாக்கி, அவர்களை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்துடன் இணைத்து நாடகம் மற்றும் அரங்கியல் துறையில் கல்வி மாணிப் பட்டம் பெற வழிகாட்டப்படுகின்றது. இதன் ஊடாக நாடகம் மற்றும் அரங்கியல் ஆசிரியர்களாக பணியாற்றுவதற்கு இப்பட்டம் வாய்ப்பளிக்கின்றது.

இவ்வைபவத்தில் உரையாற்றும் போது அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கா, 'இலங்கையின் கலைத்துறையை மேம்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அவற்றில் நாடகம் மற்றும் அரங்கியல் துறையை மேம்படுத்துவதற்கும் முக்கிய இடமளிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் எமது டவர் மண்டப நாடகம் மற்றும் அரங்கியல் பாடசாலையில் கற்று உயர் டிப்ளோமாவைப் பெற்றுக் கொள்பவர்களை பாராட்டிவாழ்த்துவதாகவும் நாடகம் மற்றும் அரங்கியல் குறித்த அறிவை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல இதுவொரு உந்துசக்தியாக அமையும் என நம்புவதாகவும் குறிப்பிட்டார்.

அமைச்சர் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் பி.எம்.சி. திலகரத்ன, அதே பல்கலைக்கழகத்தின் கல்விப் பீட பீடாதிபதி சசிகலா குகமூர்த்தி, கல்விப் பீடத்தின் இடைநிலை மற்றும் மூன்றாம் நிலைக் கல்வித் துறைத் தலைவர் பேராசிரியர் ஷமேந்திர வணசிங்க, புத்தசாசன, மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் செயலாளர், சோமரத்ன விதானபத்திரன, அமைச்சின் பாரம்பரிய பிரிவின் மேலதிக செயலாளர் (அபிவிருத்தி), கே.ஏ.டி. ஆர். நிஷாந்தி ஜயசிங்க, மேலதிக செயலாளர் (நிர்வாகம்) எஸ்.ஜி. பள்ளியகுருகே, நாடக மற்றும் கலைநிகழ்ச்சிகளுக்கான உயர் டிப்ளோமா நிர்வாக சபை உறுப்பினர்கள், ஆசிரியப் பணியாளர்கள், டிப்ளோமா பட்டம் பெற்றவர்கள், அவர்களின் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள், ஆகியோர் கலந்துகொண்டனர்.

படங்கள்: எம். நசார்

சைக்கிள் ஓட்ட நிகழ்விற்காக கைகோர்த்த வங்கியாளர்கள்

DFCC வங்கி, ஹட்டன் நஷனல் வங்கி, நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி மற்றும் சம்பத் வங்கி பிஎல்சி ஆகியவை அங்குரார்ப்பண "Bankers on Bicycles" சைக்கிள் ஓட்ட நிகழ்விற்காக சமீபத்தில் கைகோர்த்து செயல்பட்டுள்ளன. இலங்கையில் முதன்முதலாக இடம் பெற்ற "Bankers on Bicycles" நிகழ்வானது உங்கள் வாழ்க்கை நடைமுறையில் சைக்கிள் ஓட்டுதலை இணைத்து ஒரு நிலை பேற்றியல் கொண்ட வாழ்க்கை முறையை மேம்படுத்த முயல்கிறது. இது மாதாந்தம் இடம்பெறும் ஒரு நிகழ்வாக அமையும் என எதிர்பார்க்கப்படுவதுடன், இதில் பங்கேற்கின்ற ஒவ்வொரு வங்கியும் சுழற்சி அடிப்படையில் செயல்பாடுகளுக்கு பொறுப்பு வகிக்கவுள்ளது.

2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி காலை 6 மணிக்கு கொழும்பு 03 இல் உள்ள DFCC வங்கியின் தலைமை அலுவலகத்தில் அங்குரார்ப்பண சைக்கிள் சவாரி ஆரம்பமானது. இதில் பங்குபற்றிய நான்கு வங்கிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி 150 க்கும் மேற்பட்ட வங்கியாளர்கள் நிகழ்வில் கலந்துகொண்டனர். இதில் பங்கேற்றவர்களில் நான்கு வங்கிகளின் பிரதம நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் சிரேஷ்ட நிர்வாகத்தினர் மற்றும் அனைத்து பணி நிலை ஊழியர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பல்வேறு வகையான சைக்கிள் ஓட்டுநர்கள் உள்ளடங்கியிருந்ததுடன், நிகழ்வு அனைத்து ஊழியர்களும் பங்கேற்கும் வகையில் அமையப்பெற்றது. இம்முறை, சைக்கிள் ஓட்டுபவர்களை தெஹிவளைக்கு அழைத்துச் சென்று திரும்பும் நகர சுற்றுவட்டத்தை "Bankers on Bicycles" நிகழ்வு ஒழுங்கமைத்திருந்தது.

இந்த முயற்சி குறித்து DFCC வங்கியின் அன்றாட வங்கிச்சேவை, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் துறைப் பிரிவுக்கான சிரேஷ்ட துணைத் தலைமை அதிகாரியான ஆசிரி இத்தமல்கொட அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், "2020 ஆம் ஆண்டு எங்களின் 65 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் போது சைக்கிள் ஓட்டுதலை ஒரு வாழ்க்கைமுறை தெரிவாக நாம் அறிமுகப்படுத்தியிருந்தோம். அதன்பிறகு, நாங்கள் எங்கள் ஊழியர்களுக்கு சைக்கிள் ஓட்டும் நாட்களை வழக்கமாக ஏற்பாடு செய்து வருகிறோம். குறிப்பாக, ஹோட்டன் பிளேஸிலுள்ள எமது Pinnacle Centre இல் வாடிக்கையாளர்களுக்கும் சைக்கிள் ஓட்டும் வசதிகளை ஏற்படுத்தியுள்ளோம். நாட்டில், குறிப்பாக கண்டி மற்றும் குருநாகலில், எமது நிலைபேற்றியல் மூலோபாயம் மற்றும் வேலைத்திட்டத்தால் ஈர்க்கப்பட்டு, நிலைபேற்றியல் கொண்ட மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை மேம்படுத்த விரும்புகிறோம். சைக்கிள் ஓட்டுதல் அதற்கு பாரிய பங்களிப்பாக இருக்க முடியும். இந்த முயற்சியை விரிவுபடுத்துவதில் தொழில்துறையில் ஒருமித்த சிந்தனை கொண்டவர்களுடன் கூட்டாளராக செயற்பட முடிந்ததில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். ஒரு சிறந்த வாழ்க்கை முறையை மேம்படுத்துவதற்கான வாய்ப்பை உருவாக்குவது மட்டுமல்லாமல், வங்கித் தொழில்துறையில் ஒத்துழைப்பை ஊக்குவிக்கவும் மற்றும் தோழமை உணர்வை வளர்க்கவும் வழிகோலும்," என்று குறிப்பிட்டார்.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

திருச்சிலுவை மகிமை திருவிழா

கத்தோலிக்கத் திருச்சபை கடந்த புதன்கிழமை திருச்சிலுவை மகிமை திருநாளை சிறப்பித்தது.

நம் ஆண்டவர் இயேசு சுமந்த சிலுவை வெற்றியின் சின்னமாகவும் தியாகத்தின் சின்னமாகவும் மீட்பளிக்கும் சின்னமாகவும் போற்றப்படுகிறது.

தியாகத்தில் மற்றவன் உயர்வது தான் தியாகியின் வீரச்செயல். தன் சிந்தனை, தனது செயல் பெரிது என்று கருதாது பிறரின் கருத்துக்களை தனது வாழ்வாக்கும்போது அங்கு சிலுவையைச் சுமக்க வேண்டிய நிலை உருவாகின்றது.

இயேசுவின் வாழ்வில் இந்த நிலைதான் ஏற்பட்டது. தாம் நலமாய் இருப்பதை பொருட்டாகக் கருதாத இயேசு தந்தையின் சித்தத்தை ஏற்றுக் கீழ்ப்படிந்தார். எனவே, அவர் பிறரால் இகழப்பட்டு, அவமானப் பட்டு சிலுவைச் சாவை ஏற்றார்.

சிலுவையில் அறையப்பட்டு சிலுவையில் மரித்த அவர் மூன்றாம் நாள் வெற்றி வீரராய் உயிர்த்தார். எனவே, இயேசுவின் தியாகமும் வீரமும் வெற்றியும் நம்பிக்கை தரும் நல்ல செயல் ஆயிற்று.

இயேசு சிலுவையில் மரித்து உயிர்த்ததால் நமக்கு விடுதலை, மீட்பு, வெற்றி கிடைத்தது. இதனைத் தெளிவாக நமக்கு உணர்த்தவே சிலுவை பற்றிய செய்தி அழிந்து போகின்றவர்க்கு மடமையே. ஆனால் மீட்புப் பெறும் நமக்கோ அது கடவுளின் வல்லமை என்று 1கொரி 1:18 இல் புனித பவுலடியார் கூறுகின்றார்.

இயேசுவின் அடிச்சுவட்டினைப் பின்பற்றி அவர் வாழ்ந்த தியாகம், அன்பு வாழ்வு, மன்னிப்பு இவற்றின் வழிகளை நமது வாழ்வாக்கி வாழ்வது கிறிஸ்தவரின் உயரிய பண்பாகும். தம் சிலுவையைச் சுமக்காமல் என்னைப் பின்பற்றி வருவோர் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர். தம் உயிரைக் காக்க விரும்புவோர் அதை இழந்து விடுவர். என் பொருட்டுத் தம் உயிரை இழப்போரே அதைக் காத்துக் கொள்வர் (மத் 10:3839). எனவேதான் சிலுவை ஒருவனின் வாழ்வை சீர்படுத்தி வான்வீட்டை அடைய உதவும் ஏணிப்படியாகும்.

நமது பாவங்களுக்காக நமது அக்கிரமங்களுக்காக இயேசு சிலுவையில் இரத்தம் சிந்தினார் (கொலோ 1:20). இயேசு சிலுவையில் சிந்திய இரத்தத்தால் நமது பாவங்கள் மன்னிக்கப்பட்டன.

தன் பாவங்களை நன்கு உணர்ந்த தாவீது என் பாவங்களையெல்லாம் துடைத்தருளும். தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே உருவாக்கும் (திபா 51:910 என்று மனதுருகி மன்றாடி புதுவாழ்விற்குத் தகுதியுடையோரானார். பாவத்தால் இறை உறவு துண்டிக்கப்பட்டு அவரைப் பகைக்கும் உள்ளம் உடையோராய்த் தீச்செயல்கள் புரிந்து வந்தீர்கள். இப்பொழுது நீங்கள் தூயோராகவும், மாசற்றோராகவும், குறைச்சொல்லுக்கு ஆளாகாதோராகவும் தம்முள் விளங்குமாறு ஊனுடல் எடுத்த தம் மகனின் சாவின் வழியாகக் கடவுள் உங்களைத் தம்மோடு ஒப்புரவாக்கினார் (கொலோ 1:21) என்பதால் பாவத்திலிருந்து விடுபட்டு புது உறவு பெற்று அப்பா தந்தையே (உரோ 8:16) என்று அழைக்கும் உரிமை பெறுகின்றோம். இவ்வாறு புது உறவு பெற்று கடவுளை அப்பா தந்தையே என்று அழைக்கும் போது நம் உள்ளத்தோடு சேர்ந்து தூய ஆவியாரும் நாம் கடவுளின் பிள்ளைகள் என்பதற்குச் சான்று பகர்கின்றார்.

ஒரு குழந்தை தனக்கே உரிய உரிமைக் குரலில் அப்பா என்று தன் தந்தையை அழைத்து உரிமை கொண்டாடி மகிழ்வதுபோல் கடவுளை நாம் அப்பா என்று அழைத்து உரிமை பெற்று மகிழ அடிப்படையும் ஆணிவேரும் இயேசு சுமந்து மரித்த புனித சிலுவைதான்

ஒருவனின் உடலில் சுத்தமான இரத்தம் இருப்பின் அவன் ஆரோக்கியமானவன். மாறாக இரத்தத்தில் கோளாறு அல்லது உடலில் கோளாறு என்றால் அவன் நோயாளியாகி விடுகிறான். உடலில், மனதில் சக்தியின்றி அல்லல் படுகிறான்.

அப்போது அவனுக்கு பிறரின் உதவி தேவைப்படுகிறது. தனிமையில் நோயால் வருந்தும்போது யாரிடம் செல்வோம் இறைவா? என்று புலம்பிப்பாடுகையில் சாவின் இருள்சூழ் பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும் நீர் என்னோடு இருப்பதால் எத்தீங்கிற்கும் அஞ்சிடேன் (திபா 23:4) என்ற இறைவார்த்தை ஆறுதலும், நம்பிக்கையும் தருகிறது. ஏனெனில் வார்த்தையான தேவன் நமக்காய் பாடுபட்டார். அவருடைய தழும்புகளால் நாம் குணமடைகிறோம் (இசை 53:4).

சகோதரி ஜோவிட்டா...

மட்டக்களப்பு கல்லடி வேளாங்கண்ணி ஆலய திருவிழா

மட்டக்களப்பு மறை மாவட்டத்தில் கல்லடி புனித வேளாங்கண்ணி அன்னை ஆலயத்தின் திருவிழா கடந்த 11ஆம் திகதி மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகையின் தலைமையில் பக்திபூர்வமாக கொண்டாடப்பட்டது. கடந்த 8ஆம் திகதி கொடியேற்றத்துடன் திருவிழா நிகழ்வுகள் ஆரம்பமாகி தினமும் நவநாள் ஆராதனைகள் இடம்பெற்றன. பத்தாம் திகதி சனிக்கிழமை சனிக்கிழமை மாலை அன்னை வேளாங்கண்ணியின் திருச்சுரூப பவனியையடுத்து வெஸ்பர்ஸ் ஆராதனையும் நடைபெற்றது. 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை ஆயரின் தலைமையில் திருவிழா கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. மட்டக்களப்பு கல்லடி கடற்கரை பிரதேசத்தில் அமைந்துள்ள பழமை வாய்ந்த கத்தோலிக்க ஆலயமாக அன்னை வேளாங்கண்ணி ஆலயம் திகழ்கிறது. மறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிளுமிருந்து விசுவாசிகள் திருவிழாவில் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (படங்கள், தகவல்: கல்லடி குறூப் நிருபர்)

மறைக்கல்வி புகட்டும் கனி தரும் வாழ்வு

மறைக்கல்வி தினத்தை சிறப்பிக்கும் வகையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நுவரெலியா புனித பிரான்சிஸ் சேவியர் ஆலயத்தில் சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. பங்கின் தமிழ் மொழி மூல மறைக்கல்வி ஆசிரியர்களை படத்தில் காணலாம். (பட உதவி: திருமதி பிரின்ஸி)

நம் தாயாம் திருச்சபை கடந்த ஞாயிற்றுக்கிழமையை மறைக் கல்வி ஞாயிறாக சிறப்பித்தது.

பிள்ளைகளை விசுவாசத்திலும் இறை நம்பிக்கையிலும் உருவாக்குவதற்கு மறைக்கல்வி முக்கிய பங்களிப்பை செய்கிறது. அத்துடன் சிறந்த நல்லொழுக்கத்துடன் பிள்ளைகள் வளர்வதிலும் மறைக்கல்வியின் அவசியம் உணரப்பட்டுள்ளது. அதனை கருத்திற் கொண்டே கத்தோலிக்கத் திருச்சபை பிள்ளைகளுக்கான மறைக்கல்விக்கு முக்கியத்துவமளிக்கிறது.

மறைக்கல்வி என்பதன் பொருள் என்ன ? உண்மையில் எல்லோருக்கும் மறைக்கல்வி வேண்டும் என்பதை பரிசுத்த வேதாகமம் போதிக்கின்றதா ? நமது ஆண்டவர் இயேசு மறைக்கல்வி அனைவருக்கும் அவசியம் என்பதை வலியுறுத்தினாரா?

இந்த கேள்விகள் நமக்கு தருகின்ற பதில்!

எல்லோருக்கும் கல்வி வேண்டும். வாசிக்கத் தெரிய வேண்டும். எழுதத் தெரிய வேண்டும் எனும் சிந்தனை தொன்று தொட்டு வருகின்றது.

அதை மறைக்கல்வியுடன் ஒப்பிட்டு ப்பார்க்கும் போது எல்லோருக்கும் மறைக்கல்வி வேண்டும் என்பது உறுதியாகின்றது.

திருமறையைப் போதிப்பது மறைக்கல்வி. வார்த்தையாகிய இறைவனின் வார்த்தை வடிவிலான பரிசுத்த வேதாகமத்தை பிறருக்குச் சொல்வது மறைக்கல்வி.

விண்ணக வாழ்க்கையைப் பற்றிய இறைமகனின் போதனைகளையும் உலகம் தோன்றியது முதல் எதிர்நோக்கியுள்ள அவரது வருகை வரையிலான இறை உண்மைகளைப் போதிப்பதும் மறைக்கல்வியே.

மறைந்திருப்பதைப் போதிப்பது மறைக்கல்வி.

இறைவனின் திட்டங்கள் எப்போதுமே நமக்கு வெள்ளிடை மலைபோல சொல்லப்படுவதில்லை. பல வேளைகளில் கடவுளின் திட்டங்கள் மறைந்தே வெளிப்படும். அதிகம் படித்தால், அதிக ஞானம் இருந்தால் நமக்கு பரிசுத்த வேதாகமத்தின் உள்ளடக்கம் விளங்கும் என பலர் நினைக்கலாம். ஆனால் அப்படியல்ல. “ஞானிகளுக்கு மறைத்து குழந்தைகளுக்கு வெளிப்படுவதே” மறை உண்மைகள்.

இறைவனின் போதனையை எல்லோரும் அறிந்து கொள்ள வேண்டும் என்பது இறை சித்தம்.

“உலகெங்கும் போய் நற்செய்தியை அறிவியுங்கள்” என்பது இயேசுவின் கட்டளை. அது மறைக்கல்வியின் வழியாக செயல்படுகிறது. மறைக்கல்வியே அதற்கு அடிப்படையாகிறது.

அடிப்படைக் கிறிஸ்தவ நம்பிக்கை நமக்குச் சொல்வது ஒரே கடவுள் நமது நாதர் இயேசுவே. தந்தை, மகன், தூய ஆவி எனும் வடிவில் அவர் நம்மை ஆள்கின்றார். தந்தை நம்மைப் படைத்தார். மகன் நம்மை மீட்டார். ஆவியானவர் நம்மை வழிநடத்துகிறார். இந்த உண்மையை உலகம் அறிய செய்வது மறைக்கல்வியின் நோக்கமாகும். இயேசு மதம் எனும் எல்லைகளுக்கு அப்பால் செயற்பட்டு தந்தையோடு உறவாடியவர். ஆன்மீகத்தின் நிலை மதத்தின் எல்லைகளுக்கு வெளியே என்பதை உணர்த்தியவர்.

எனவே ஒருவனை கிறிஸ்தவன் எனும் அடையாளப் போர்வைக்குள் அடைப்பதல்ல மறைக்கல்வி.

அவனது மனதுக்குள் நிகழ்காலம் பற்றியும், இறையின் நிறைவைப் பற்றியும் சொல்வதே மறைக்கல்வி. அவனை கிறிஸ்தவ உண்மைகளைப் புரிந்து கொள்ளத் தூண்டுவதே மறைக்கல்வி.

இயேசுவின் போதனைகள் அன்பின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டவை. “நீ இறைவனை நேசி”, “உன்னைப்போலவே பிறரை நேசி” எனும் இரண்டு சாவிகளில் தான் அந்த விண்ணக வாசலின் பூட்டு திறக்கப்படும்.

இறைவனை நேசிப்பது,மனிதனை நேசிப்பது என்றால் என்ன ? “நானே திராட்சைக் கொடி நீங்கள் அதன் கிளைகள்” என்றார் இயேசு. கிளைகளை வெட்டி விடுவதோ, காயப்படுத்துவதோ கொடியை நேசிப்பதாகாது. அல்லது கொடியை வெட்டி விட்டுக் கிளைகளை நேசித்தல் சாத்தியமற்றது. இறையன்பும், பிறரன்பும் பின்னிப் பிணைந்த அன்பின் உயரிய நிலை என்பதையே அந்த மறை செய்தி தெரிவிக்கின்றது.

“கிறிஸ்துவைப் பிரதிபலிப்பதே மிகச்சிறந்த மறைக்கல்வி”.

செயல்களில் கனிகள் விளையவேண்டும். அதற்கு நமது பிள்ளைகள் நல்ல மரமாய் வளர வேண்டியது அவசியம்.

எல்லோருக்கும் மறைக்கல்வி என்பது கிறிஸ்தவர்கள் மனதில் இருத்திக் கொள்ள வேண்டிய ஒரு விடயம் நாம் மறை உண்மைகளை அறிந்து கொள்வதும். அந்த உண்மைகளை வார்த்தைகளின் மூலமாகவும் வாழ்க்கையின் மூலமாகவும் பிறருக்குப் பகிர்வதும் சிறந்த பணிகளாகும். அந்த வகையில் எல்லோருக்கும் மறைக்கல்வி அவசியமாகிறது.

லோரன்ஸ் செல்வநாயகம்...

திம்பிரிகஸ்யாய புனித தெரேசாள் ஆலய திருவிழா

27 ஆம் திகதி கொடியேற்றம்

கொழும்பு உயர்மறை மாவட்டத்தின் திம்பிரிகஸ்யாய புனித தெரேசாள் ஆலயத்தின் வருடாந்த திருவிழா எதிர்வரும் 27ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து தினமும் நவ நாள் ஆராதனைகள், திருப்பலி பூசைகள் இடம் பெற்று எதிர்வரும் அக்டோபர் முதலாம் திகதி மாலை வெஸ்பர்ஸ் ஆராதனையும் அதனைத் தொடர்ந்து புனித தெரேசாளின் திருச்சுரூப பவனியும் இடம் பெறவுள்ளது.

மறுநாள் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருவிழா திருப்பலி பூசைகள் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளதுடன் தமிழில் திருவிழா திருப்பலி பூசை முற்பகல் 9. 45 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

பங்கு மக்களுடன் இணைந்து பங்குத்தந்தை சந்தன பெரேரா அடிகளார் அதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றார்.

தகவல்: மிலியன் ஜேம்ஸ்

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

கிழக்கின் குரல்

எழுத்தாளர்களுக்கான ஒன்றுகூடல் செயலமர்வு

(தோப்பூர் குறூப் நிருபர்)

கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட மூதூர், கிண்ணியா, வெருகல் பிரதேச செயலக பிரிவிற்குற்பட்ட எழுத்தாளர்களுக்கான ஒன்றுகூடல் செயலமர்வும், பிரதேச சாகித்திய விழாவும் (18) மூதூர் சேனையூர் அனாமிகா பண்பாட்டு மையத்தில் நடைபெற்றது.

இதன்போது கலை நிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டன.

இந்நிகழ்வில், தென்கிழக்கு பல்கலைக்கழக மொழித்துறை விரிவுரையாளர் எம்.அஷ்ரப், ஓய்வுநிலை அதிபர் இரா.இரத்தினசிங்கம்,மூதூர் பிரதேசசபை தவிசாளர் எம்.ஏ.அரூஸ், அனாமிகா பண்பாட்டு மைய பணிப்பாளர் பேராசிரியர் பாலசுகுமார் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

மேலும், மூதூர், கிண்ணியா, வெருகல் பிரதேச செயலக பிரிவிற்குற்பட்ட எழுத்தாளர்கள், கலைஞர்கள், இலக்கியவாதிகள், இலக்கிய ஆர்வலர்கள் மற்றும் ஊடகவியலாளர் உள்ளிட்டோரும் இந்நிகழ்வில் கலந்து தங்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தினர்.

ஒலுவில் துறைமுகத்தில்

தொழிற்சாலை அமைக்க தனியாருக்கு காணி வழங்குவதை ஏற்க முடியாது

(ஏ.எம்.ஆஷிப்)

மீன்பிடித் துறைமுகமாக மாற்றப்பட்டுள்ள ஒலுவில் துறைமுகத்தில் தனியாருக்கு தொழிற்சாலை அமைப்பதற்கு இடம் வழங்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்துள்ளதாகவும். இம்முடிவை மீளாய்வு செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளதாகவும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இரண்டு கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஒலுவில் பொதுநூலகக் கட்டடத் திறப்பு விழாவில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். கடந்த சனிக்கிழமை (17) இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் தெரிவித்ததாவது,

அம்பாறை மாவட்டத்தில் மூன்று சமூகங்களும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றன. ஆனால் சில இனவாதிகள் இன முறுகல்களை ஏற்படுத்துவதற்கு எத்தனித்து வருகின்றனர். இதனை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் முறியடித்து, சுமுகமான நிலையை ஏற்படுத்தி வருகின்றது.

ஒலுவில் துறைமுக நிர்மாணிப்பினால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு அவசரத் தீர்வு காணுமாறு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

அதேவேளை ஒலுவில் துறைமுகத்தை துறைமுக அதிகார சபையினர் மீன்பிடித் துறைமுகமாக மாற்றி, மீன்பிடித் துறைமுக திணைக்களத்துக்கு ஒப்படைத்துள்ளனர். இதில் தனியாருக்கு தொழிற்சாலை அமைப்பதற்கு இடம் வழங்கப்பட்டுள்ளது. இதனை மீளாய்வு செய்ய வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளோம்.

தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முஸ்தீபுகளை மேற்கொண்டு வருகின்றது. இதனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீளாய்வு செய்ய வேண்டுமென அவரிடம் கோரிக்கை விடுத்திருப்பதாகவும் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். அட்டாளைச்சேனை பிரதேச சபைத் தவிசாளர் எம். அமானுல்லாஹ் தலைமையில் இக்கூட்டம் இடம் பெற்றது.

நீரோடையில் மூழ்கி குடும்பஸ்தர் உயிரிழப்பு

(பாசிக்குடா நிருபர்)

மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெள்ளக்கல்லு மலைப்பகுதியிலுள்ள நீரோடையில் மூழ்கி ஒருவர் உயிரிழந்தார்.

குசலானமலை பகுதியைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான சித்திரவேல் சிறிகந்தராஜா வயது (58) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வெள்ளக்கல்லு மலைப்பகுதிக்கு மீன் பிடிப்பதற்கும் காட்டில் தேன் எடுப்பதற்காகவும் மூன்று நாட்களுக்கு முன்னர் சென்றிருந்த நிலையிலே இவர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் தனது மனைவியிடம் 2000 ரூபாய் பணத்தினை பெற்றுக்கொண்டு பிலிப்பியர் சேனை பகுதிக்கு சென்று வருவதாக கூறி நேற்றுக்காலை செறிருக்கின்றார்.

ஊருக்கு சென்றவரை எதிர்பார்த்திருந்த குடும்பம் அவர் திரும்பி வராமல், நீரோடையில் குறித்த நபர் சடலமாக கிடப்பதை கண்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

சட்ட பரிசோதனைக்காக சடலம் செங்கலடி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு, பின்னர் உறவினரிடம் கையளிப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றன.

தமிழ்மொழி தினப் போட்டிகள்

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் மொழி தினப்போட்டியின் பிரதான நிகழ்வு மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திலுள்ள நாவற்காடு நாமகள் வித்தியாலய தேசிய பாடசாலையில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப்பணிப்பாளர் தருமரெத்தினம் அனந்தரூபன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஐந்து வலயங்களையும் சேர்ந்த பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள், உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், நடுவர்கள் உள்ளிட்ட பிரமுகர்கள் இதில் கலந்து கொண்டனர். அதனைத்தொடர்ந்து இறைவணக்கம், தமிழ்மொழி வாழ்த்து, வலய கீதம் என்பன இசைக்கப்பட்டன. மாணவர்களின் வரவேற்பு நடனத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இதனைத்தொடர்ந்து போட்டிகள் ஆரம்பமாகின. மாவட்டத்தின் ஐந்து வலயங்களுக்குள்ளும் நடைபெற்ற போட்டி முடிவுகளின் அடிப்படையில், மட்டக்களப்பு வலயம் முதலிடத்தையும், மட்டக்களப்பு மேற்கு, பட்டிருப்பு வலயங்கள் இரண்டாம் இடங்களையும், கல்குடா வலயம் மூன்றாம் இடத்தையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

நூறுநாள் போராட்டத்தின் ஐம்பதாவது நாள் நிகழ்வுகள்

(கல்லடி குறூப் நிருபர்)

தமிழ் மக்களுக்கான கௌரவமான அரசியல் உரிமையை வலியுறுத்தி வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்பு அமைப்பின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படும் நூறு நாள் போராட்டத்தின் 50 ஆவது நாள் நிகழ்வுகள், நேற்றுக் காலை (19) மட்டக்களப்பு கல்லடி கடற்கரைப் பகுதியில் இடம்பெற்றது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்டு வரும் இப் போராட்டம் வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் நெறிப்படுத்துநர் கண்டுமணி லவகுசராசா தலைமையில் இடம்பெறுகிறது.

சுழற்சி முறையில் இப்போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது. நேற்றைய நாள் நிகழ்வில் கோரிக்கை அடங்கிய பதாதைகளை கையில் ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியும் கவனயீர்ப்பு போராட்டம் நடாத்தப்பட்டது.

'நடமாடுவது எங்கள் சுதந்திரம் ஒன்று கூடுவது எங்கள சுதந்திரம், 'பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை', 'வேண்டும் வேண்டும் வடக்கு கிழக்கு மக்களுக்கு அரசியல் தீர்வு வேண்டும்' சிவில் அமைப்புக்களின் செயற்பாட்டை தடுக்காதே, 'அரசியல் கைதிகளை விடுதலை செய் ' போன்ற கோஷங்கள் இதன்போது எழுப்பப்பட்டது.

போராட்டத்தின் இறுதியில் கோரிக்கை வாசகங்கள் எழுதப்பட்ட காற்றாடிகள் பேரணியாக கடற்கரையில் எடுத்துச் செல்லப்பட்டு பறக்க விடப்பட்டன. இதில் சிவில் அமைப்புக்கள் இளைஞர் யுவதிகள் மற்றும் பிரதேச மக்கள் கலந்து கொண்டனர்.

சுகாதார முறைகளை கையாளாத உணவகங்களுக்கு எதிராக நடவடிக்கை

(ஒலுவில் விஷேட நிருபர்)

அட்டாளைச்சேனை சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்திற்குட்பட்ட பிரதேசங்களில், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாது உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக, அட்டானைச்சேனை சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் ஏ.எம்.இஸ்மாயில் தெரிவித்தார்.

ஒலுவில், பாலமுனை, அட்டாளைச்சேனை ஆகிய பிரதேசங்களிலுள்ள உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்களில் பாவனைக்கு உதவாத உணவுப் பண்டங்கள் விற்பனை செய்யப்படுவதாக பொது மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர். இதையடுத்து கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஐ.எல்.எம். நிபாஸின் ஆலோசனைக்கமைய திடீர் சோதனைகள் நடாத்தப்பட்டன.

உணவகங்கள் மற்றும் உணவு கையாளும் நிலையங்கள், பேக்கரிகள் என்பவற்றையே பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சோதனையிட்டனர்.

உணவு சட்ட விதிமுறைகள், நுகர்வோர் விவகாரசட்டங்கள் மற்றும் அதன் விதிமுறைகளுக்கு அமைய வேண்டுமெனவும், உணவு தயாரிப்போர், உணவு விநியோகிக்கும் இடம், பயன்படுத்தும் உபகரணங்களை தூய்மையாக வைத்திருக்க வேண்டுமெனவும், உணவகங்களில் பணியாற்றுபவர்கள் முகக்கவசம், கையுறை போன்றவற்றை பாவிக்க வேண்டுமெனவும் இதன்போது அறிவுறுத்தப்பட்டது.

உணவு பாதுகாப்பு சட்ட திட்டங்களை மீறுபவர்களுக்கெதிராக நீதி மன்றினூடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளன.

ஒரே சூலில் நான்கு குழந்தைகளை பிரசவித்த தாய்க்கு ஒரு இலட்சம் ரூபா நிதி

(மட்டக்களப்பு விஷேட நிருபர்)

ஒரே சூலில் நான்கு குழந்தைகளைப் பிரசவித்த ஏழ்மைத் தாய்க்கு, தியாகி அறக்கொடை நிதியத்தின் ஸ்தாபகத் தலைவரும் சமூக செயற்பாட்டாளருமான "சமூகஜோதி" வாமதேவன் தியாகேந்திரன் நிதியுதவி வழங்கியுள்ளார்.

முதல் கட்டமாக அக்குழந்தைகளின் பராமரிப்பிற்காக ஒரு இலட்சம் ரூபாவை அவர் வழங்கினார். கல்குடா மீடியா போரம் பணிப்பாளரும் ஊடகவியலாளருமான எம்.ரீ.எம். பாரிஸ் மூலம் குழந்தைகளின் தாயிடம் இந்த நிதியுதவித் தொகை வழங்கப்பட்டது.

கல்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவின் ஹூசைனிய்யா புரத்தை சேர்ந்த 24 வயதான இளம் தாய் ஒருவர் கடந்த மாதம் (27) ஒரு ஆண், மூன்று பெண் என நான்கு குழந்தைகளை ஒரே சூலில் பிரசவித்திருந்தார். அக்குடும்பத்தின் ஏழ்மை நிலையைக் கருத்தில் கொண்டு நாடளாவிய ரீதியில் இன, மத வேறுபாடின்றி பல்வேறு மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டு வரும் தியாகி அறக்கொடை நிதியத்தின் ஸ்தாபகத் தலைவரும் சமூக செயற்பாட்டாளருமான "சமூக ஜோதி" வாமதேவன் தியாகேந்திரன் உதவ முன்வந்து முதல் கட்டமாக ஒரு இலட்சம் ரூபாவை வழங்கினார்.

ஒலுவில் பிரதேசத்தில் புதிய பொது நூலகம் திறப்பு

(பாலமுனை தினகரன் நிருபர்)

பிரதேச சபை தவிசாளர் ஏ.எல். அமானுல்லா தலைமையில் கடந்த சனிக்கிழமை(17) நடைபெற்ற இந் நூலக திறப்பு விழாவில், பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் கலந்து கொண்டார். பிரதித்தலைவர் சட்டத்தரணி எஸ்.எம்.ஏ.கபூர், முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எஸ். உதுமாலெவ்வை, மற்றும் பிரதேச சபையின் செயலாளர் பாயிஸ், உப தவிசாளர் எஸ்.எல்.எம்.ஹனிபா, உட்பட சபை உறுப்பினர்களான உவைஸ், அமீன்,பதூர்தின், ஆகியோருடன் ஊர் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்

சுமார் 15 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இப்பொது நூலகத்தை இப்பிரதேச ஆசிரியர்கள், மாணவர்கள் கல்வியலாளர்கள்,பொது மக்கள்,பல்கலைக் கழக மாணவர்கள் பயன்படுத்த வுள்ளனர்.

கர்ப்பிணி, பாலூட்டும் தாய்மாருக்கு போஷாக்கு உணவுப் பொதிகள்

(மட்டக்களப்பு குறூப் நிருபர்)

கர்பிணித் தாய்மார்கள்,பாலூட்டும் தாய்மார்களின் போஷாக்கு மட்டத்தை அதிகரிக்கும் நோக்கில் மூவாயிரம் பேருக்கு போஷாக்கு உணவுப்பொதிகள் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியைக் கருத்திற்கொண்டு இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சேவைகள் பணிமனையின் அனுசரணையில் இவை வழங்கப்படுகின்றன. மட்டக்களப்பு சுகாதார வைத்தியதிகாரி பிரிவிற்குட்பட்ட கூளாவடி பிரதேசத்தில் நூறு தாய்மார்களுக்கு சுமார் தலா பத்தாயிரம் ரூபாய் பெறுமதியான போஷாக்கு உணவுப் பொதிகள் நேற்று காலை வழங்கப்பட்டன.

சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் இ.உதயகுமார் தலைமையில் கூழாவடி மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்ற இவ்வைபத்தில், மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் என்.சுகுணன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

வறுமையை காரணமாகக் கருதி கல்வியை கைவிடக் கூடாது

(எம்.என்.எம். அப்ராஸ்)

மாணவர்கள் கல்வியின் சரியான இலக்கை அடைவதற்கு வறுமை காரணமாக அமையக் கூடாது என்பதற்காகவே,புலமைப்பரிசில் திட்டத்தை

சமுர்த்தி திணைக்களம் ஆரம்பித்துள்ளதாக அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ்.எம். சப்ராஸ் தெரிவித்தார்.

சமுர்த்தி சிப்தொர புலமைப்பரிசில் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வும், பல்கலைக்கழகத்திற்கு தகுதி பெற்ற சிப்தொர புலமைப்பரிசில் மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வுகள், கல்முனை பிரதேச செயலக சமூர்த்தி தலைமை பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.ஆர். எம்.சாலிஹ் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. கல்முனை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக கலந்து கொண்ட அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ்.எம்.சப்ராஸ் மேலும் தெரிவித்ததாவது,

சமுர்த்தி திட்டத்தின் நோக்கம் வறுமையை ஒழிப்பதாகும்.புலமைபரிசில் வழங்குவதால் மாணவர்களின் கல்வியை விருத்தி செய்ய முடியும்.

கல்முனை பிரதேச செயலாளரும், நானும் சமுர்த்தி குடும்பத்திலிருந்தே இந்த உயர் பதவிகளுக்கு தெரிவானோம். அதேபோன்று ஏழைக் குடும்பத்தில் பிறந்த அப்துல் கலாம்தான் பிற்காலத்தில் உலகில் தலை சிறந்த விஞ்ஞானியாகவும் இந்தியாவின் ஜனாதிபதியாகவும் மிளிர்ந்தார். கூகுள் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் சுந்தர் பிச்சை சாதாரண குடும்ப தொழிலாளியின் மகனாவார். கல்வியால் தலைநிமிர்ந்து வாழலாம் என்பதற்கு இவர்கள் நல்ல சான்றாளர்களாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கிண்ணியாவை ஒழுங்குபடுத்துவது தொடர்பில் விஷேட செயலமர்வு

(கிண்ணியா தினகரன் நிருபர்)

அகில இலங்கை ஜம்இயத்துல் உலமா கிண்ணியா கிளையின் ஏற்பாட்டில், பள்ளிவாசல் நிருவாகிகள் மற்றும் உலமாக்களுக்கான ஒரு நாள் செயலமர்வு நடாத்தப்பட்டது.

இந்நிகழ்வு, கிண்ணியா சூரங்கல் பிரதேசத்தில் அமைந்துள்ள மஸ்ஜிதுல் ஆஹிரா ஜும்ஆ பள்ளிவாசலில் ஞாயிற்றுக்கிழமை (18) நடைபெற்றது.

அகில இலங்கை ஜம்இயத்துல் உலமா கிண்ணியா கிளையின் தலைவரும் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் அறபுத்துறைத் தலைவருமான ஏ.ஆர். நஸாரின் தலைமையில் இச்செயலமர்வு நடைபெற்றது.

இதில் கிண்ணியாவின் அனைத்துப் பள்ளிவாசல்களின் நிருவாகிகளும், உலமாக்களும் கலந்துகொண்டனர்.

கிண்ணியா பிரதேசத்தில் குர்ஆன் மத்ரஸாக்களை ஒழுங்குபடுத்துதல், அஹதிய்யா பாடசாலைகளை ஆரம்பித்தல், போதைப்பொருளை கட்டுப்படுத்துதல், இளைஞர்களை ஒழுங்குபடுத்துதல் மற்றும் திருமண ஒழுங்குகள் தொடர்பிலும் இச்செயலமர்வில் கலந்துரையாடப்பட்டது.

இறுதியில் ஊரின் நலன்கருதி பல தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.கனி, ஜோர்தான் நாட்டுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் அப்துல் லாபிர், அல்ஹித்மதுல் உம்மா பௌன்டேசனின் தலைவர் கஸ்ஸாலி முஹம்மத் பாத்திஹ், கிண்ணியா பொலிஸ் பொறுப்பதிகாரி சமிந்த பெர்னான்டோ, வான்எல பொலிஸ் பிரதி பொறுப்பதிகாரி எம்.எச். அன்ஸார், குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி எம்.எச்.எம். அஜித், கிண்ணியா மஜ்லிஷ் அஷ்ஷூறாவின் தலைவர் ஓய்வுபெற்ற அதிபர் ஏ.ஆர். பரீட், கிண்ணியா பள்ளிவாசல் சம்மேளன தலைவர் ஓய்வு பெற்ற அதிபர் வை.முஹ்மீன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

அரசியல் தீர்வை வலியுறுத்தி பட்டம்விடும் நிகழ்வு

(திருக்கோவில் தினகரன் நிருபர்)

வடக்கு கிழக்கு மக்களுக்கு உரிமையுடன் கூடிய கௌரவமான அரசியல் தீர்வு வேண்டுமென வானில் பட்டம்விட்டு கோரிக்கை விடுக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்படும் நூறுநாள் போராட்டத்தின் 50வது நாளான நேற்று (19) இக்கோரிக்கை விடுக்கப்பட்டது. இப்பட்டம் விடும் நிகழ்வானது வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் திருக்கோவில் விநாயகபுரம் கடற்கரையில் இடம்பெற்றது.

இதன்போது, நாங்கள் நாட்டை துண்டாடவோ தனியரசோ கேட்கவில்லை. நாட்டுக்குள் கௌரவமான உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வையே கேட்கின்றோம். மற்றும் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் வழங்குவது ஜனநாயக உரிமையாகும். 13வது திருத்தச் சட்டமானது அரசியல் அமைப்பு ரீதியாக அதிகாரப் பரவலாக்கத்திற்கான உரிமையை உறுதிப்படுத்துகிறது போன்ற கோஷங்களும் இதன்போது எழுப்பப்பட்டன.

இவ்வார்ப்பாட்ட பேரணியில் வடக்கு கிழக்கு வாழ் பொதுமக்கள், கிராம அடிப்படை அமைப்புக்கள், விவசாய மீனவ சங்கங்கள், பெண்கள் அமைப்புக்கள், மாணவ அமைப்புக்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் என்பனவும் கலந்து கொண்டன.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

விலை மனுக்கோரல்

பொது பாதுகாப்பு அமைச்சு
இலங்கை பொலிஸ்

இலங்கை காவல்துறையின் கொள்முதல் குழுவின் தலைவரினால், பொலிஸ் தலைமையகத்தின் கட்டிடப் பிரிவின் பணிப்பாளரிடம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டத்திற்கு பொருத்தமான தகுதியினைக் கொண்ட மனுதாரர்களிடமிருந்து மனுக்கள் கோரப்படுகின்றது.

இல.	வேலைத்திட்டம்.	செயற்திட்ட காலம் (நாட்கள்)	மதிப்பீட்டுத் தொகை (ரூ.மில்லியன்)	மனுக்காப்புறுதிப் பிணைத்தொகை (ரூ.)	CIDA தர நிறுவன பதிவு	மீளச்செலுத்தப் படாத தொகை (ரூ).
01.	நாராஹேன்பிட்ட பொலிஸ் வளாக கட்டிடத்திற்கு வர்ணம் பூசுதல் மற்றும் புதுப்பித்தல் பணி பணிகள் LA/B1/77/12 (A)	154	21.87	330,000.00	C5 அல்லது C6 மட்டும். (கட்டிடங்கள்)	8,000.00

1. மனுக்கோரலானது தேசிய மனுக்கோரல் போட்டி முறைக்கமைய இடம்பெறுகின்றது. இந்த திட்டங்களுக்கு பொது நிதி சுற்றறிக்கை எண் **04/2016 (ii)** விதிகள் பொருந்தும், மேலும் அந்த சுற்றறிக்கையின் விதிகளின்படி மாகாணத்திற்குள் பதிவுசெய்யப்பட்ட மனுதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. மேலே உள்ள அட்டவணையின் 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் விதிகளுக்கு உட்பட்டவை. அத்தகைய திட்டங்களுக்கான மனுக்களை கொள்வனவு செய்ய விரும்பும் மனுதாரர்கள் மனு திறக்கும் நேரத்தில் மனு ஆவணங்களுடன் இந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்த PCA/03 சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.
3. கொழும்பு 01 பொலிஸ் தலைமையகத்தில் அமைந்துள்ள பணிப்பாளர் (கட்டிடம்) அலுவலக தொலைப்பேசி எண் **0112013184** இற்கு அழைப்பினை ஏற்படுத்தி மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்வதுடன், மனு ஆவணங்களை, வாரத்தில் அலுவலக நாட்களில் **2022.09.20** ஆம் திகதி முதல் **2022.10.11** வரை காலை **09.00** மணி முதல் **15.00** மணி நேரம் வரை இலவசமாக பரிசீலனை செய்ய முடியும். மீள் செலுத்தப்படாத கட்டணத்தை பணிப்பாளருக்கு (கட்டிடம்) செலுத்துவதன் மூலம் மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும்.
4. சமர்ப்பிக்கப்பட்ட மனுக்களின் செல்லுபடியாகும் காலம் **91 நாட்கள்** வரையாகும்.
5. மேல் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு நிகரான மனு பாதுகாப்பு செல்லுபடியாகும் காப்புறுதிப்பிணையுடன் மனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களிலிருந்து மட்டுமே பெற்றுக்கொண்ட "காவல் துறைத் தலைவர்" (IGP) என்ற பெயரில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன், அவை **2023.02.07** ஆம் திகதி வரை செல்லுபடியாகும். (மனு ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியிலிருந்து **119 நாட்கள்** வரையாகும்).
6. முத்திரையிடப்பட்ட மனு ஆவணங்களை **இரண்டு பிரதிகளுடன் 2022.10.12 ஆம் திகதி 1000** மணித்தியாலங்களுக்கு முன் **கொழும்பு 01 "பொலிஸ் தலைமையகம்" ஐந்தாம் மாடியில் அமைந்துள்ள கணக்காளர் (கட்டிடம்) அலுவலகத்தில்** வைக்கப்பட்டுள்ள டென்டர் பெட்டியில் இடுதல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். இலங்கை பொலிஸ் கொள்முதல் குழுவினால் எடுக்கப்படும் தீர்மானம் இறுதியானதாக ஏற்றுக்கொள்ளப்படும்.

இலங்கை காவல்துறையின் கொள்முதல் குழு சார்பாக,
பணிப்பாளர் (கட்டிடம்),
பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு - 01.

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் புதிய பசும் பாலை விற்பனை செய்வதற்கு விலைமனுக்களை கோருவதற்கான அறிவித்தல்

2022 நவம்பர் 01ஆம் திகதி முதல் டிசம்பர் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பின்வரும் NLDB பண்ணைகளிலிருந்து புதிய பசும் பாலை விற்பனை செய்வற்காக உள்நாட்டு கொள்வனவாளர்கள் / நிறுவனங்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கொழும்பு-05, இல. 40, நாவல வீதி, நாராஹென்பிட்டி, தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையின் தலைவர் அழைக்கிறார்.

பண்ணை	முகவரி	ஒரு நாளைக்கு கிடைக்கத்தக்க பசும் பாலின் அதிகபட்ச சராசரி அளவு (லீற்றர்)
போபத்தலாவ	போபத்தலாவ பண்ணை, போபத்தலாவ	2,000
மெனிக்பாலம்	மெனிக்பாலம் பண்ணை, போத்தலாவ	2,000
டயகம	டயகம பண்ணை, டயகம	2,000
ரிதியகம	ரிதியகம பண்ணை, அம்பலாந்தொட்ட	5,000
ரொசிட்டா	ரொசிட்டா பண்ணை, கொட்டகல	150
மரந்தாவில	மரந்தாவில பண்ணை, பிங்கிரிய	200
ஆண்டிகம	ஆண்டிகம பண்ணை, தம்பதெனிய	500
கல்பொக்குண	கல்பொக்குண பண்ணை, உடபத்தாவ	200
கொவுல்வெவ	கொவுல்வெவ பண்ணை, நாரம்மல	500
ருக்கத்தென்ன	ருக்கத்தென்ன பண்ணை, பிங்கிரிய	200
நாரங்கல்ல	நாரங்கல்ல பண்ணை, கித்தலாவ	200
சிறிங்கபத	சிறிங்கபத பண்ணை, படல்கம	100
மெல்சிரிபுர	மெல்சிரிபுர பண்ணை, மெல்சிரிபுர	200
நிக்கவெரட்டிய	நிக்கவெரட்டிய பண்ணை, நிக்கவெரட்டிய	100
ஓயம்மடுவ	ஓயம்மடுவ பண்ணை, ஆலயபத்துவ	100

கொள்வனவாளர்கள் பின்வரும் மாதிரி வடிவத்தின் பிரகாரம் விலைமனு ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட கொள்வனவுதாரர்/கள் மேற்படி ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கு 07 நாட்களுக்கு முன் தேசிய பண்ணை விலங்கு அபிவிருதிச் சபையுடன் சட்டபூர்வமான உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட இணங்குதல் வேண்டும் என்பதுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 02 வாரங்களுக்குள் கொள்வனவு செய்யும் பாலின் அளவுக்குப் பெறுமதியான வங்கி வைப்பு / வங்கி உத்தரவாதத்தை வைத்தல் வேண்டும். இயையுடைய பண்ணைகளிலிருந்து பாலை போக்குவரத்துச் செய்தல் இயையுடைய கொள்வனவாளர்களாலேயே மேற்கொள்ளப்படல் வேண்டும்.

திகதி:

தலைவர்,
தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை,
இல. 40, நாவல வீதி, நாராஹென்பிட்டி, கொழும்பு-05.

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையிடமிருந்து புதிய பசும் பாலைக் கொள்வனவு செய்வதற்கான விலைக்கோரல்

கொள்வனவாளர் / நிறுவனத்தின் பெயர்:.....
கொள்வனவாளரின் உத்தியோகபூர்வ முகவரி:.....

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள விலைகளில் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையிடமிருந்து பின்வரும் அளவான புதிய பசும் பாலைக் கொள்வனவு செய்வதற்கு நான்/நாம் இணங்குகிறேன்/இணங்குகிறோம்.

	பண்ணை	ஒரு லீட்டர் புதிய பசும் பாலிற்கான விலை (ரூபா)	ஒரு நாளைக்கு கொள்வனவு செய்ய இணங்கும் புதிய பசும் பாலின் அளவு (லீற்றர்)	Fat %	SNF %
01	.....				

ஏனைய விலைகள் :.....

முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைக் கோரல்களை 2022-10-04ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்குப் பிந்தாமல் இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கோரல் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் அல்லது தலைவர், தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை, த.பெ. இல. 1748, இல. 40, நாவல வீதி, நாராஹென்பிட்டி, கொழும்பு-05 எனும் முகவரிக்குப் பதிவு தபாலில் அனுப்புதல் வேண்டும். தயவு செய்து கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விலைக்கோரலின் பெயரைக் குறிப்பிடவும். தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

அன்றைய தினமே பி.ப. 2.30 மணிக்கு விலைக்கோரல்கள் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதன் பேரில் விலைக்கோரல் திறக்கும் நிகழ்வில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.

தலைவர்,
தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை,
இல. 40, நாவல வீதி, நாராஹென்பிட்டி, கொழும்பு-05.
தொலைபேசி: 011-2501701/2, 077-3782127

Best way to fulfil your Future Dreams
SUNDAY OBSERVER
E-mail your advertisements to,
classified@lakehouse.lk
Marriage Proposals
Decades of Trusted Service
Piyumi- 0112 429 383 Ramani - 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
நகர அபிவிருத்தி அதிகார சபை
விலைக்கோரலுக்கான அழைப்பு

பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை நகர அபிவிருத்தி அதிகார சபையின் சார்பில் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவர் (கீழ்நிலை) அழைக்கின்றார்.

அட்டவணை -01

விலைக் கோரல் இல.	திட்டத்தின் பெயர்	வெட் வரியின்றி வேலையின் மதிப்பீட்டுக் கிரயம் (ரூபா)	மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா)	விலைக் கோரல் பிணை முறி (ரூபா)	விநியோகக் காலம் (நாட்கள்)	தேவையான CIDA பதிவுத் தரம்	விலைக் கோரல் செல்லுபடிக் காலம்
01	காலி கோட்டையிலுள்ள அஞ்சல் அலுவலகத்தை மறுசீரமைப்பதற்காக மரங்களைக் கொள்வனவு செய்தல் PD/ UDA/GALLE/ PTPO/2022/023	24,000,000.00	6,500.00 + வெட்	240,000.00	30	-	2023 ஜனவரி 23ஆம் திகதி வரை

01. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் முறையில் நடாத்தப்படும்.
02. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியாக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்குட்படுத்தப்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் ஏனைய தேவைப்பாடுகள் விலைக்கோரல் ஆவணத்தில் தரப்பட்டுள்ளன.
03. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பத்தரமுல்ல, ''செத்சிறிபாய - படிநிலை 1" 7ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகார சபை, பெறுகைக்கான தலைவரிடம் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2022 செப்டெம்பர் 20ஆம் திகதி முதல் 2022 ஒக்டோபர் 07ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் பெறுகைக்கான தலைவரின் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
04. 01ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தை நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதிப் பிரிவு சிறாப்பருக்கு செலுத்துவதன் பேரிலும் செப்டெம்பர் 20ஆம் திகதி முதல் 2022 ஒக்டோபர் 07ஆம் திகதி வரையில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையான காலத்தில் பத்தரமுல்லை, செத்சிறிபாய - படிநிலை 1, 7ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகார சபை, பெறுகைப் பிரிவு, பெறுகைக் குழுத் தலைவருக்கு செலுத்தி எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் செய்வதன் பேரில் எந்தவொரு விலைமனுதாரரும் அல்லது அவரின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் ஆங்கில மொழியிலான விலைக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
05. இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதும் மற்றும் இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கி / நிர்மாண உத்தரவாத நிதியத்தினால் (CGF) வழங்கப்பட்டதும் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள விபரக்குறிப்பின் பிரகாரம் வங்கி உத்தரவாதமொன்றை விலைக்கோரல் பிணை முறியாக விலைமனுக்களுடன் இணைத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறித் தொகை மற்றும் செல்லுபடிக் காலம் என்பன 01ஆம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறாகவும் அது நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவருக்கு முகவரியிடப்பட்டிருத்தலும் வேண்டும்.
06. விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியுடன் 2022 ஒக்டோபர் 11ஆம் திகதி மு.ப. 11.30 அல்லது அதற்கு முன் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (கீழ்நிலை), நகர அபிவிருத்தி அதிகார சபை, 7ஆம் மாடி, செத்சிறிபாய - படிநிலை 1, பத்தரமுல்லை எனும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவரால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைக்கோரல்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
07. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2022 செப்டெம்பர் 30ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பத்தரமுல்லை, செத்சிறிபாய - படிநிலை 1, 7ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகார சபை, பெறுகைப் பிரிவில் இடம்பெறும். சகல விலைமனுதாரர்களும் இதில் கலந்துகொள்ளுமாறு திட்டவட்டமாக அறிவுறுத்தப்படுகின்றனர்.
08. விலைமனுதாரர்களைத் தெரிவு செய்கையில் விலைமனுதாரர்களின் முன்னைய செயற்பாடுகள் மற்றும் நிதி நிலைமை என்பன திட்டவட்டமாக மதிப்பீடு செய்யப்படும். மோசமான செயற்பாடுகளைக் கொண்ட விலைமனுதாரர்கள் எந்தவொரு விலைக்கோரல் கையளிப்பின் பொருட்டும் கவனத்திற் கொள்ளப்படமாட்டார்கள்.
09. விலைக்கோரல் ஆவணங்கள் தயாரித்தல் தொடர்பான எவ்வித செலவுகளுக்கும் நகர அபிவிருத்தி அதிகார சபை எவ்விதப் பொறுப்பும் கூறப்படமாட்டாது மேலும் கிடைக்கப்பெற்றுள்ள விலைமனுக்களில் பொருத்தமான எந்தவொரு விலைமனுவை ஏற்றுக்கொள்ளும் அல்லது அனைத்தையும் நிராகரிக்கும் அதிகாரத்தை திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் (கீழ்நிலை) தன்னகத்தே கொண்டுள்ளார். திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரின் (கீழ்நிலை) தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு (கீழ் நிலை),
நகர அபிவிருத்தி அதிகார சபை,
7ம் மாடி, 'செத்சிறிபாய-படிநிலை 1',
பத்தரமுல்ல.

பாதுகாப்பு அமைச்சு

2023 வருடத்திற்கான தீ ஆயுதம் (துப்பாக்கி) அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல்

தீ ஆயுத்திற்கான செல்லுப்படியான அனுமதிபத்திரமுடைய நபர்கள்/நிறுவனங்களினால் 2023 ஆம் ஆண்டிற்காக தனது தீ ஆயுதம் (துப்பாக்கி) அனுமதிபத்திரங்களை **2022.12.31** ஆம் திகதிக்கு முன்னர் **கட்டாயமாக** புதுப்பித்துக்கொள்ள வேண்டும். குறித்த தினத்திற்கு பின்னர் பின்னர் **2023** ஆம் ஆண்டிற்கு அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்பட மாட்டாது.

தீ ஆயுத கட்டளைச் சட்ட ஒழுங்கு விதிகளின் படி குறித்த வருடத்திற்கான அனுமதிப்பபத்திரம் பெற்றுக்கொள்ளமல் ஆகக்கூடியது 10 நாட்கள் மாத்திரமே தீ ஆயுதமொன்றினை தன்வசம் வைத்துக்கொள்ள முடியும் என்பதனால் குறித்த விண்ணப்பபத்திரம் ஒப்படைக்கப்பட்டிருப்பினும் **2023.01.10** ஆம் திகதிக்குள் அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ள முடியாமற் போனால் குறித்த அனுமதிப்பத்திரம் கிடைக்கும் வரை தற்காலிகமாக தீ ஆயுதத்தினை அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திடம் ஒப்படைக்க வேண்டும்.

2023 ஆம் ஆண்டிற்கான சகல தீ ஆயுத அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல் **2022 ஒக்டோபர் மாதம் 01** ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்படும்.

கீழே (அ) பிரிவின் கீழ் கொண்டுவரப்படும் தீ ஆயுத அனுமதிபத்திரங்களை புதுப்பித்துக்கொள்ளும் நடவடிக்கை இவ் அமைச்சினால் நேரடியாக மேற்கொள்ளப்படுவதோடு (அ) பிரிவில் அடங்காத ஏனைய சகல தீ ஆயுதங்களுக்கான (விவசாயம் மற்றும் விலங்குகளை கட்டுப்படுத்தல், சொத்துப்பாதுகாப்பு) அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்துக்கொள்ளும் நடவடிக்கை மாவட்ட செயலாளர்கள்/அரசாங்க அதிபர்களினால் **2022.10.01** ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு **2022.12.31** ஆம் திகதிக்கு முன் மேற்கொள்ளப்படும். அது தொடர்பாக குறித்த மாவட்ட செயலாளர்களினால் அனுமதிப்பத்திரமுடையவர்களுக்கு அறிவிக்கப்படும்.

(அ) I. பல்வேறு சிவில் நபர்கள்இ அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு உயிர் மற்றும் சொத்துப் பாதுகாப்புக்காக விநியோகிக்கப்பட்டுள்ள சகல **9 மி.மி** கைத்துப்பாக்கிகள் மற்றும் **.38** வகை ரிவால்வர்கள்

II. மக்கள் பிதிநிதிகள் மற்றும் அரச அதிகாரிகளுக்காக தற்காலிக அடிப்படையில் விநியோகிக்கப்பட்டுள்ள அரசாங்கத்திற்கு சொந்தமான அனைத்து தீ ஆயுதங்கள்

III. தேசிய ரைபல் சங்கத்தின் மற்றும் அதனை சார்ந்த விளையாட்டு அமைப்புகளின் அங்கத்தவர்களிடம் உள்ள அனைத்து தீ ஆயுதங்கள்

IV. தனியார் பாதுகாப்பு முகவர் நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்பட்ட அனைத்து தீ ஆயுதங்கள்

மேற குறிப்பட்ட அனைத்து தீ ஆயுதங்களுக்கான அனுமதிப்பத்திரம் புதுப்பிப்பதற்கான விண்ணப்பத்திரத்தினை பாதுகாப்பு அமைச்சின் **www.defence.lk** இணையத்தளத்தில் பதிவிறக்கம **(download)** செய்துகொள்ள முடியும். மேற்படி (அ) பிரிவின் கீழ் கொண்டுவரப்படும் தீ ஆயுதத்திற்கு மாத்திரம் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்திரம் மற்றும் தீ ஆயுத அனுமதிப்பத்திரம் புதுபிப்பதற்கான அனுமதிப்பத்திர கட்டணத்தினை செயலாளர், பாதுகாப்பு அமைச்சு பெயரில் தப்ரோபென் கிளைக்கு இலக்கம் **0007040119** கணக்கில் வைப்பிலிட்டு பற்றுச்சீட்டின் உண்மை பிரதியுடன் இவ் அமைச்சிற்கு பிரவேசிக்கும் வலாகத்தில் அமைந்துள்ள **சிவில் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி பிரிவில்** விண்ணப்பதாரியினால் ஒப்படைக்க வேண்டும். தேவையேற்படின் விண்ணப்பதாரியினை அலுவலகத்திற்கு அழைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

துப்பாக்கி கட்டளைச் சட்டத்தின் 22 வது பிரிவின் ஒழுங்குகளுக்கு அமைவாக செல்லுப்படியான அனுமதிப்பத்திரம் இல்லாது தீ ஆயுதமொன்றினை தன்வசம் வைத்திருந்தால கீழ்வரும் தண்டனைகளை அனுபவிக்க நேரிடும் என்பதனை கவனத்தில் கொள்ளவும்.

(I) குறித்த குற்றத்தினை முதலாவது தடவை புரிந்தால் பத்தாயிரம் ரூபாவிற்கு மேற்படாத தண்டம் அல்லது ஐந்து வருடத்திற்கு மேற்படாத கடுழிய சிறைத்தண்டனைக்கு அல்லது இவ் தண்டனைகள் இரண்டிற்கும் உட்படுவர்.

(II) குறித்த குற்றத்தினை இரண்டாவது தடவை அல்லது அதன் பின்னரும் புரிந்தல் பத்து வருடங்களுக்கு குறையாத மற்றும் இருபது வருடங்களுக்கு மேற்படாத காலம் கடுழிய சிறைத்தண்டனைக்கு உட்படுவர்

(III) அதேபோன்று இக்குற்றம் **தன்னியக்க துப்பாக்கி அல்லது மீள் உதை சுடு துப்பாக்கியொன்றை** (ரிப்பிட்டர் சொட் கன்) தன் வசம் வைத்துக்கொள்ளல் அல்லது உபயோகிக்கும் சந்தர்ப்பத்தில் குற்றவாளி வாழ்நாள் முழுவதும் சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடும்.

இதன் பிரகாரம் சகல தீ ஆயுத உரிமையாளர்களும் 2023 ஆம் ஆண்டிற்கான தீ ஆயுத அனுமதி பத்திரங்களை **2022.12.31** ஆம் திகதிக்கு முன் புதுப்பித்துக் கொள்ள வேண்டுமென இத்தால் அறிவிக்கின்றேன்.

மேலதிக விபரங்களுக்கு கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுக்கு அழைக்கவும்.

011-2335794/ 011-2335795/ 011-2430860-9

ஜெனரல் கமல் குணரட்ண (ஓய்வு)
டப்ஸ்வீ ஆர்டப்பீ ஆர்எஸ்பீ யுஎஸ்பீ என்டிசீ பீஎஸ்சீ எம்பில்
செயலாளர்
பாதுகாப்பு அமைச்சு

2022. 09. 20 ஆம் திகதி
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே,
பாதுகாப்பு தலைமையக கட்டிட தொகுதியில் அமைந்துள்ள
பாதுகாப்பு அமைச்சு

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

சிறு விளம்பரம்

மோட்டார் வாகனங்கள்

WP B H W- 7702 Yama h a Ray ZR 2019, Motor Cycle கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711 2 10 810 . 054579

122

மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

NC AAS-9477 Bajaj 2014, Threewheel கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711 2 10 810 . 054578

இல. 02, பெல்மடுல்லவத்த, கஹவத்தையைச் சேர்ந்த **இராமகிருஷ்ணன் சாந்தினி** (தே.அ.அ. இல. 199980310253) ஆகிய நான், சுயவிருப்பில் இஸ்லாமிய மார்க்கத்தைத் தழுவிக் கொண்டு எனது பெயரை **பாத்திமா நுஹா** என மாற்றிக் கொண்டுள்ளேன் என்பதையும், இல. 159, கர்பலா வீதி, பாலமுனை -10, ஆரையம்பதி எனும் விலாசத்தில் தற்போது வசித்து வருகின்றேன் என்பதையும் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்

Repeat Your ad For Better Offers

விசேட அற்றோர்ணி தத்துவத்தை இரத்துச்செய்தல்

நுகேகொட, கங்கொடவில, பார்க்வீதி, இல.31ஐச் சொந்த, கமச்சி விதானகே மஹிந்த பெரேரா (தே.அ.அ.இல 432770710V இன் உரிமையாளர்) ஆகிய என்னால் பன்னிப்பிட்டிய, மஹல்வராவ வீதி, இல.72/5 A ஐச் சேர்ந்த சஜீவ ரஞ்சன் பொல்வத்தவுக்கு வழங்கப்பட்ட, கொழும்பு மாவட்ட பகிரங்க நொத்தாரிசு லலனி ஹெட்டிகேயினால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2021.03.19ம் திகதியிடப்பட்ட விசேட அற்றோணி தத்துவ இல.4140ஐ 2022 செப்டம்பர் 16ம் திகதி முதல் இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாக இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது என்சார்பாக இதன் பிறகு சொல்லப்பட்ட சஜீவ ரஞ்சன் பொல்வத்தவினால் மேற்கொள்ளப்படும் எந்த கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பாகமாட்டேன்.

Best way to fulfil your Future Dreams
E-mail your advertisements to classified@lakehouse.lk
Piyumi- 0112 429 383 Ramani - 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342
SUNDAY OBSERVER Marriage Proposals

பெறுகை அறிவித்தல்

சிலாபம் நகர சபை

சபையின் ஆதனங்களை குத்தகைக்கு வழங்குதல் – 2023

01. 2023-01-01ம் திகதி முதல் 2023-12-31ம் திகதி வரையான காலத்துக்கு சிலாபம் நகர சபைக்குச் சொந்தமான கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஆதனங்களின் வியாபார உரிமையை குத்தகைக்கு விடுவதற்காக விண்ணப்பங்கள் என்னால் கோரப்படுகின்றன.

02. சபையின் ஆதனங்களை குத்தகைக்கு விடுவதற்கான விண்ணப்பங்களை கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட கட்டணங்களைச் செலுத்தி 2022-09-30ஆம் திகதி முதல் 2022-10-21ஆம் திகதி வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 மணி வரையான அலுவலக நாட்களில் சிலாபம் நகர சபையின் வருமானப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

03. விண்ணப்பங்கள் 2022-10-25ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் அன்றைய தினமே பி.ப. 2.30 மணிக்கு அவை திறக்கப்படும்.

04. விண்ணப்பப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளும்போது விண்ணப்பதாரர் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக செல்லுபடியாகும் தேசிய ஆளடையாள அட்டை அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய அடையாள அட்டையைச் சமர்ப்பிக்க வேண்டும். தற்போதைய ஒப்பந்ததாரர்களுக்கு விண்ணப்பங்கள் வழங்கப்படுதல் அவர்கள் செலுத்த வேண்டிய குத்தகைப் பணத்தை நிலுவையின்றி செலுத்தியிருந்தால் மாத்திரமேயாகும். பட்டியலிலிருந்து பெயர் நீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு விண்ணப்பங்கள் வழங்கப்பட மாட்டாது.

05. அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளபடி குறித்த பிணைப் பணம் மற்றும் கேள்விப்பத்திரக் கட்டணத்தைச் செலுத்த இக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பப் பத்திரத்தில் மாத்திரமே விண்ணப்பிக்க வேண்டும்.

06. விண்ணப்பப் படிவங்களை இரு பிரதிகளில் தயாரித்து முதலாம் பிரதி மற்றும் இரண்டாம் பிரதி எனக் குறிப்பிட்டு வெவ்வேறான உறைகளில் இட்டு மீண்டும் அவைகளை வேறொரு உறையில் இட்டு ''தலைவர், நகர சபை, சிலாபம்'' எனும் முகவரிக்கு குறித்த திகதி, நேரத்திற்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இல்லையேல் குறித்த திகதி, நேரத்திற்கு முன்னதாக இக்காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

07. ஆகக்குறைந்த கேள்வியை விட குறைவாக விண்ணப்பிப்பவர்களின் விண்ணப்பங்கள் செல்லுபடியற்றதாக்கப்படுவதுடன் அவர்களின் மற்றும் விண்ணப்பப்பத்திரம் பெற்று விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்காதவர்களின் பிணை வைப்பு சபைக்குரிதாக்கப்படும்.

08. விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தாம் குத்தகைக்கு எடுக்க உத்தேசிக்கும் ஆதனத்தின் பெயரை குறிப்பிட வேண்டும். ஒவ்வொரு ஆதனம் சம்பந்தமாகவும் வெவ்வேறாக விண்ணப்பிக்க வேண்டும்.

09. விண்ணப்பப்பத்திரம் பெற்றுக்கொள்ளும் போது அட்டவணையில் குறிப்பிடப்பட்ட படிவக் கட்டணம் மற்றும் அரச சட்டவாக்க வரியைச் செலுத்துதல் வேண்டும். இணைப்பில் குறிப்பிடப்பட்ட பொது கேள்வி நிபந்தனைகளுக்கு உடன்படல் வேண்டும்.

10. ஒரு வருடத்திற்காக குத்தகைக்கு வழங்கப்படும் ஆதனத்தின் பொருட்டு வெற்றிகரமான விண்ணப்பதாரரால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித் தொகை 10 மாதாந்த தவணைகளில் செலுத்தி முடிக்கப்பட வேண்டும் என்பதுடன் அத்தொகைக்கு அரச சட்டவாக்க வரியும் 1000.00 ரூபாவுக்கு 10.00 ரூபா வீதம் முத்திரைக் கட்டணத்துடன் செலுத்துதல் வேண்டும். (அரசாங்க வரி திருத்தங்களின் பிரகாரம் மாற்றமடையும்)

11. விண்ணப்பப் பத்திரம் பெற்றுக்கொள்ளும் போது வைப்புச் செய்யும் மீளளிக்கப்படும் கேள்விப் பிணைத் தொகையை விடுவித்துக் கொள்வதானது வெற்றிகரமான கேள்விதாரால் நகர சபையுடன் ஒப்பந்தமொன்றுக்கு உடன்பட்ட பின்னரேயாகும்.

12. வெற்றிகரமான கேள்வியாளரைத் தெரிவு செய்ததன் பின், அறிவிக்கப்பட்ட 07 நாட்களுக்குள் 04 மாதத் தவணைக்குச் சமனான பாதுகாப்பு பிணை வைப்புத் தொகையை நகர சபைக்கு வைப்புச் செய்து, ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்பதுடன் 10,000.00 ரூபா வரையான சகல வெற்றியாளர்களும் கேள்வித் தொகையை ஒரே தடவையில் செலுத்த வேண்டியதுடன் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

13. விண்ணப்பங்களைத் திறக்கும் வேளையில் விண்ணப்பதாரர் அல்லது அவரது எழுத்து மூல அதிகாரத்தைப் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளிப்பதற்கு அனுமதி அளிக்கப்படும்.

14. பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

15. இந்த அட்டவணையில் உள்ள ஆதனமொன்றை கேள்விச் செயற்பாட்டிலிருந்து விலக்கிக் கொள்வதற்கான அதிகாரம் எனக்கு வழங்கப்பட்டுள்ளது.

16. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தினுள் வருமான பிரிவின் தலைவரிடம் விசாரித்தறிந்துகொள்ளலாம்.

அட்டவணை

தொ. இல.	உருப்படிகள்	ஆகக் குறைந்த கேள்வித் தொகை (ரூபா)	கேள்விப் பிணை முறி (ரூபா) மீளளிக்கப் படும்)	படிவக் கட்டணம் (ரூபா) (மீளளிக்கப் படாதது)	குத்தகைக் காலம்
	இறைச்சிக் கடைகள்				
01	புதிய மரக்கறிச் சந்தையின் 01ஆம் இலக்க மாட்டிறைச்சிக் கடை	258,062.00	20,650.00	700.00	01
02	புதிய மரக்கறிச் சந்தையின் 02ஆம் இலக்க மாட்டிறைச்சிக் கடை	130,400.00	10,440.00	700.00	01
03	புதிய மரக்கறிச் சந்தையின் ஆட்டிறைச்சிக் கடை	52,900.00	5,290.00	500.00	01
04	நகர பன்றியிறைச்சிக் கடை	721,500.00	36,080.00	1,000.00	01
05	கடற்கரை கொலனி பன்றியிறைச்சிக் கடை	80,000.00	8,000.00	500.00	01
06	கடற்கரை தாய்மார் சிகிச்சைக் கட்டிடத்திற்குப் பின்னாலுள்ள பன்றியிறைச்சிக் கடை	62,000.00	6,200.00	500.00	01
	காணித் துண்டுகள்				
07	கொழும்பு வீதியில் 04ஆம் இலக்க இடத்தில் அமைந்துள்ள 0.63 பர்ச் இடப்பரப்பு	240,000.00	19,200.00	1,000.00	01
	வாகனத் தரிப்பிடங்கள்				
08	மரக்கறிச் சந்தையின் மோட்டார் சைக்கிள் - மிதிவண்டி தரிப்பிடம்	336,000.00	26,880.00	1,000.00	01
09	பேர்ள் இடப்பரப்பின் வாகனத் தரிப்பிடம்	235,400.00	18,840.00	700.00	01
10	இபோச பஸ் நிலையத்தோடு இணைந்துள்ள இடப்பரப்பின் வாகனத்தரிப்பிடம்	188,000.00	15,040.00	700.00	01
	தேங்காய் விளைச்சல்				
11	விலியம் சில்வா காணியிலுள்ள 04 தென்னை மரங்களின் விளைச்சல்	2,000.00	200.00	100.00	01
12	டீ.எம். த சில்வா மாவத்தையிலுள்ள (ஜாயாவத்த) 04 தென்னை மரங்களின் விளைச்சல்	7,400.00	740.00	100.00	01
13	ரிதிவெல்ல செயலக உத்தியோகபூர்வ விடுதியின் 08 தென்னை மரங்களின் விளைச்சல்	9,000.00	900.00	100.00	01
14	சத்துட்டு உயன 06 தென்னை மரங்களின் விளைச்சல்	8,200.00	820.00	100.00	01
	சந்தை				
15	இரவுச் சந்தை	866,330.00	43,320.00	1000.00	01
	மலசலகூட சேவைகள்				
17	இபோச பொது மலசலகூடம்	2,758,400.00	110,340.00	1,000.00	01
18	ரிதிவெல்ல பொது மலசலகூடம்	1,017,800.00	50,890.00	1,000.00	01
19	மரக்கறிச் சந்தையின் பொது மலசலகூடம்	638,900.00	31,945.00	1,000.00	01
20	மீன் சந்தையின் பொது மலசலகூடம்	575,700.00	28,785.00	1,000.00	01
	சிற்றுண்டிச்சாலை				
21	சத்துட்டு உயன	73,000.00	7,300.00	500.00	01

தலைவர்,
நகர சபை, சிலாபம்.
2022-09-20

தொலைபேசி : 032-2222275
தொலைநகல் : 032-2223708

விலைக்கோரலுக்கான அழைப்பு (IFB)

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

பாரிய கொழும்பு நகரப் போக்குவரத்து வலையமைப்பு மேம்பாட்டுக் கருத்திட்டம்

மாகும்புர பலமாதிரி போக்குவரத்து நிலையத்தினுள் விற்பனைக் கூடங்கள் மற்றும் விளம்பரப் பிரசாரத்திற்கு இடவசதிகளை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கான பெறுகை

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பாரிய கொழும்பு நகரப் போக்குவரத்து வலையமைப்பு மேம்பாட்டுக் கருத்திட்டத்தின், கருத்திட்ட பெறுகைக் குழுத் தலைவரினால் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

பெறுகை இல.	விடயம்	விலைக் கோரல் பிணை முறி ரூபா	மீளளிக்கப் படாத ஆவணக் கட்டணம்	விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நேரம் மற்றும் திகதி
MoT/GCUTDP/MMC/BD/2022/G9.2	Main Restaurant (452 sqft) Offload Canteen (80 sqft)	50,000.00	3000.00	04-10-2022, 2:00 pm
MoT/GCUTDP/MMC/BD/2022/G9.99	Front Hoarding (30'x50') Advertising Board	50,000.00	3000.00	04-10-2022, 2:00 pm
MoT/GCUTDP/MMC/BD/2022/G9.24	Quick Stop Shop (sqft)	50,000.00	3000.00	04-10-2022, 2:00 pm
MoT/GCUTDP/MMC/BD/2022/G9.3	Juice bar (194 sqft)	50,000.00	3000.00	04-10-2022, 2:00 pm
MoT/GCUTDP/MMC/BD/2022/	Veggie Shop	50,000.00	3,000.00	04-10-2022, 2:00 pm
MoT/GCUTDP/MMC/BD/2022/	Coffee Shop	50,000.00	3,000.00	04-10-2022, 2:00 pm

01. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரலின் மூலம் விலைமனுக்கள் கோரப்படும்.

02. 2022 செப்டெம்பர் 20ஆம் திகதி முதல் 2022 ஒக்டோபர் 04ஆம் திகதி வரையில் கருத்திட்டப் பணிப்பாளர், பாரிய கொழும்பு நகரப் போக்குவரத்து வலையமைப்பு மேம்பாட்டுக் கருத்திட்டம், GB-01, தரைத் தளம், செத்சிறிபாய கட்டம் II, பத்தரமுல்ல எனும் முகவரியில் பொதுவான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.30 மணி வரையில் தயாரிக்கப்பட்டுள்ள முழுமையான விலைக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் அந்த செயற்றிட்டப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் விலைக்கோரல் ஆவணங்களைக் கொள்வனவு செய்யலாம். இதன் பொருட்டு மீளளிக்கப்படாத கட்டணம் ஒன்று அறவிடப்படும். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் மட்டும் மேற்கொள்ளல் வேண்டும்.

03. இது தொடர்பில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கருத்திட்டப் பணிப்பாளர், பாரிய கொழும்பு நகரப் போக்குவரத்து வலையமைப்பு மேம்பாட்டுக் கருத்திட்டம், GB-01, தரைத் தளம், செத்சிறிபாய கட்டம் II, பத்தரமுல்ல எனும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 0112186094 / 011 2034471, தொலைநகல்: 011-2186096

04. தள விஜயமொன்று 2022 செப்டெம்பர் 23ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு கொட்டாவையிலுள்ள மாகும்புர, பலமாதிரி போக்குவரத்து நிலையத்தில் ஆரம்பமாகும் என்பதுடன் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் தள விஜயத்தின் பின் அவ்விடத்திலேயே இடம்பெறும்.

05. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பெறுகை இலக்கம் மற்றும் விடயத்தை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை நேரில் கொண்டுவந்து ஒப்படைக்கலாம் அல்லது கருத்திட்டப் பணிப்பாளர், பாரிய கொழும்பு நகரப் போக்குவரத்து வலையமைப்பு மேம்பாட்டுக் கருத்திட்டம், GB-01, தரைத் தளம், செத்சிறிபாய கட்டம் II, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம்.

06. விலைமனுக்களை இரு பிரதிகளில் பின்வரும் முகவரிக்கு 2022 ஒக்டோபர் 04ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும்.

கருத்திட்டப் பணிப்பாளர்,
(பாரிய கொழும்பு நகரப் போக்குவரத்து வலையமைப்பு மேம்பாட்டுக் கருத்திட்டம்),
GB-01, தரைத் தளம், செத்சிறிபாய கட்டம் II, பத்தரமுல்ல

விலைமனுக்களுக்கான அழைப்பு

சுகாதாரம், சுதேச வைத்தியம், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு அமைச்சு, மத்திய மாகாணம்

பெறுகை நிறுவனம் : பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், கண்டி
பெறுகையின் தலைப்பு : பொருட்கள் மற்றும் உபகரணங்களின் தேவைப்பாடு
ஒப்பந்த இல. : **CPC/RDHS/KY/F13/02/NCB/1/2022**
பிரசுரத் திகதி : 2022-09-19

01. பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் உபகரணங்களின் தேவைப்பாடு பெறுகைக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கண்டி, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக, பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

02. விலைமனுதாரர்களுக்கான தகுதி மற்றும் தகைமைத் தேவைப்பாடுகள் விலைமனு ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

03. பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு வகுதிக்கும் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் 2022-09-19ஆம் திகதி முதல் 2022-10-11ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

04. தகுதி மற்றும் தகைமை வாய்ந்த ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கண்டி, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 0812236452 மின்னஞ்சல் முகவரி: rdhskandysupply123@gmail.com. விலைமனு ஆவணங்களை வேலை நாட்களில் மு.ப. 10.00 மணி முதல் ந.ப. 12.00 மணி வரையில் கண்டி, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் நிதிப் பிரிவில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

05. சகல விலைமனுக்களுடனும் இலங்கை மத்திய வங்கியில் அங்கீகரிக்கப்பட்ட புகழ்பெற்ற வங்கியொன்றினால் வழங்கப்பட்ட கண்டி, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பெயரில் பெறப்பட்ட வங்கி உத்தரவாதமொன்று அல்லது கண்டி, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் சிறாப்பருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் சான்றுபடுத்திய பிரதி விலைக்கோரல் பிணை முறியாக இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். (பின்வரும் அட்டவணையில் தொகை குறிப்பிடப்பட்டுள்ளது).

06. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2022-10-12ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் ''தலைவர், பெறுகைக் குழு, கண்டி, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், த.பெ. இல. 56, எஹெல்லேபொல குமாரிஹாமி மாவத்தை, போகம்பர, கண்டி'' எனும் முகவரிக்கு ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கண்டி, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வகுதியின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் சகிதம் ''பொருட்கள் மற்றும் உபகரணங்களின் தேவைப்பாட்டிற்கான விலைக்கோரல்'' எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

07. பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பின்வரும் முகவரியில் விலைமனுக்கள் திறக்கப்படும் இடத்தில் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது முறையான அனுமதி வழங்கப்பட்ட விலைக்கோரலில் கலந்துகொள்வதற்கு தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

08. சமர்ப்பிக்கப்படும் சகல விலைமனுக்களும் தொழில்நுட்ப மதிப்பீடொன்றுக்கு உட்படுத்தப்படும் என்பதுடன் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

தொ. இல.	பொருட்களின் பெயர்	மீளளிக்கப் படாத ஆவணக் கட்டணம் (ரூபா)	விலைக்கோரல் பிணை முறி (ரூபா)	
			வங்கி உத்தரவாதம்	ரொக்கப் பணம்
1	வகுதி இல. 01: மின்சாரக் கருவிகள் (Power Tools) ஒப்பந்த இல. CPC/RDHS/KY/F13/02/NCB/1-1/2022	2,000.00	25,000.00	12,750.00
2	வகுதி இல. 02: கனரகப் பொருட்கள் (2) ஒப்பந்த இல. CPC/RDHS/KY/F13/02/NCB/1-2/2022	2,000.00	300,000.00	150,000.00
3	வகுதி இல. 03: மின்சாரப் பொருட்கள் (3) ஒப்பந்த இல. CPC/RDHS/KY/F13/02/NCB/1-3/2022	2,000.00	200,000.00	100,000.00
4	வகுதி இல. 04: கட்டமைப்பு மற்றும் பகுதிபிரிப்பு பொருத்தல் பொருட்கள் ஒப்பந்த இல. CPC/RDHS/KY/F13/02/NCB/1-4/2022	2,000.00	100,000.00	50,000.00
5	வகுதி இல. 05: உருக்கு வேலைகளுக்குத் தேவையான பொருட்கள் ஒப்பந்த இல. CPC/RDHS/KY/F13/02/NCB/1-5/2022	2,000.00	100,000.00	50,000.00

தலைவர்,
பெறுகைக் குழு,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,
எஹெல்லேபொல குமாரிஹாமி மாவத்தை, போகம்பர, கண்டி.

Rs. 500/- (For 15 Words) * Cost of each additional word Rs. 20/-
Rs. 500/- (For 15 Words) * Cost of each additional word Rs. 20/-
Rs. 250/- (For 15 Words) * Cost of each additional word Rs. 20/-
Trusted Marketplace of Classified Advertisers
Classified Ads (For 15 Words) Rs. 700/- * Cost of each additional word Rs. 20/-
Three Papers Rs. 950/- * Cost of each additional word Rs. 20/-
Photo Classified (For 15 Words) Rs. 800/- * Cost of each additional word Rs. 15/-
Rs. 1,000/- * Cost of each additional word Rs. 15/-
Box Ads Rs. 3,000/- + VAT
Rs. 4,000/- + VAT
The convenient way to make your payment... Acc.No. 000000377 BOC LAKE HOUSE BRANCH
E-mail - classified@lakehouse.lk
Ramani - 077 7 278 948 / Piyumi - 011 2 429 383 / Gayani - 011 2 429 342

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

மறைந்த ராணி எலிசபெத்துக்கு இறுதி அஞ்சலி செலுத்த லண்டனில் சுமார் 10 இலட்சம் பேர் கலந்து கொண்டனர். ராணி எலிசபெத்தின் உடல் வெஸ்ட்மின்ஸடரிலிருந்து வெஸ்ட் மின்ஸ்டர் அபேக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு இறுதிச்சடங்கு செய்யப்பட்டது. இந்த இறுதி ஊர்வலத்தில், ராணியின் உடலை அரச குடும்பத்தினர் பின்தொடர்ந்து சென்றனர். பின்னர், விண்ட்ஸருக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அவரின் கணவர் இளவரசர் பிலிப் உடல் அடக்கம் செய்யப்பட்டுள்ள இடத்தின் அருகே அடக்கம் செய்யப்பட்டது.

நகர்வலம்

காலி மாவட்டத்தில்;

தமிழ் மொழி மூலம் 3ஏ சித்தி பெற்று அய்யாஷ் சாதனை

க.பொத. உயர் தரப் பரீட்சையில் காலி மாவட்டத்தில் இருந்து தமிழ் மொழிமூலம் முதன் முறையாக கணிதப் பிரிவில் 3 ஏ சித்திகளைப் பெற்று காலி மல்ஹருஸ்ஸுல்ஹியா பாடசாலை மாணவர் எம். ஏ.ஏ. அய்யாஷ் சாதனை படைத்துள்ளார்.



இவர் எஸ். எச். எம். அஸ்ஹர் மற்றும் ஆசிரியை எம்.பீ.எஸ். ஜென்னா ஆகியோரின் புதல்வராகும். 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த இவர், க.பொ.த சாதாரண தரப் பரீட்சையிலும் 9 ஏ பெற்று சாதனை படைத்திருந்தார். கடந்த உயர்தரப் பரீட்சையில் கணிதப் பிரிவில் 3ஏ சித்தி பெற்று மாவட்ட மட்டத்தில் இவர் 61 ஆவது இடத்தை பிடித்து பாடசாலைக்கும் ஊருக்கும் பெருமை சேர்த்துள்ளார். (பா)

முஸ்லிம் சமூகத்தின் விடிவெள்ளியாக மிளிர்ந்த அரசியல் பெருந்தகை அஷ்ரப்

அமைச்சர் நஸீர் அஹமட் அனுதாபம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம். எச்.எம் அஷ்ரபின் இருபத்திரண்டு வருட இடைவெளிகள், முஸ்லிம் சமூகத்தை நாதியற்ற நிலைக்குத் தள்ளியுள்ளதாக சுற்றாடல்துறை அமைச்சர் நஸீர் அஹமட் கவலை தெரிவித்துள்ளார்.

மர்ஹூம் அஷ்ரபின் மறைவு தினத்தை முன்னிட்டு (செப்டம்பர் 16) அவர் வெளியிட்டுள்ள அனுதாப அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

முஸ்லிம்களின் அரசியல் விடிவெள்ளியாக வலம் வந்தவர் மர்ஹூம் எம்,எச்,எம், அஷ்ரப். தனது சமூகத்தின் அரசியல் தனித்துவத்தைக் காக்கப்புறப்பட்ட அவரது அரசியல்பாதை, அந்த மாபெரும் தலைவரையே காவுகொண்டு விட்டது. இதனால், 22 வருடங்களாக முஸ்லிம் சமூகம் மேய்ப்பானில்லா மந்தைகள்போல், திக்குத்தடம் தெரியாமல் தடுமாறுகிறது. எத்தனை சவால்கள் எழுந்து மலையாக மோதிய போதிலும், எடுத்த இலட்சியத்தில் அஷ்ரப் இலக்குத்த வறியதும் இல்லை. தலைமைக்குள்ள தனிப்பெரும் சிறப்புக்களை அவரிடம் நெருங்கிப்பழகிய காலத்தில் நான் கண்டிருக்கிறேன்.

எல்லோரும் மரணித்தே தீரவேண்டும் என்ற இறை நியதிதான் அவரது மரணத்தில் எம்மை பொறுமை காக்கச் செய்கிறது. பல்லின சமூகங்கள் வாழும் நமது நாட்டில், சிறுபான்மை முஸ்லிம்களுக்குரிய வகிபாகத்தை மர்ஹூம் அஷ்ரப் சரியாகப் புரிந்து வைத்திருந்தார்.

இந்தப்புரிதல்களை அவரது மறைவுக்குப் பின்னால் உதயமான முஸ்லிம் கட்சிகளின் தலைமைகள் புரிந்துகொண்டாக கூற முடியாத நிலையே நிலவுகிறது. இதனால் தான், நமது சமூகம் நாதியற்ற நிலைக்குச் சென்றுள்ளது.

அஷ்ரபின் இடைவெளியை நிரப்புவதற்கு இன்னுமொரு தலைமை பிறக்கப் போவதும் இல்லை.

எனவே, அவர் மரணித்த இந்த நாளிலிருந்தாவது இந்த இடைவெளிகள் ஏற்பட்டதற்கான காரணத்தை அடையாளம் காணும் பொறுப்புக்களை முஸ்லிம் தலைவர்கள் மட்டுமல்ல முஸ்லிம் எம்பிக்களும் பொறுப்பேற்க வேண்டியுள்ளனர். எல்லாம் வல்ல இறைவன் அந்த மாபெரும் தலைவரை பொருந்திக் கொள்வானாக என பிரார்த்திக்கிறேன்.

SLPP கருணாதாஸ கொடிதுவக்கு MP

சம்பள பணத்தை மக்கள் நலனுக்கு வழங்கி வைப்பு

பதவி ஏற்கும்போது வழங்கிய வாக்குறுதி நிறைவேற்றல்

வெலிகம தினகரன் நிருபர்

கடந்த இரண்டு வருடங்களாக பாராளுமன்ற உறுப்பினராக கடமையாற்றி வரும் மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் அகுரஸ்ஸ தேர்தல் தொகுதி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அமைப்பாளருமான கருணாதாஸ கொடிதுவக்கு தமது மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் அடங்களாக 1 கோடி 20 இலட்சம் ரூபா நிதியை (18) மாத்தறை மாவட்ட மக்கள் நலனுக்காக அன்பளிப்பு செய்துள்ளார். இந்நிகழ்வு மாத்தறை மாவட்ட பொதுஜன பெரமுன அலுவலகத்தில் நடைபெற்றது.

பாராளுமன்ற உறுப்பினராக பதவி ஏற்கும் போது தாம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுமுகமாகவே இவ்வாறு தனது அனைத்து கொடுப்பனவுகளையும் மக்கள் நலனுக்காக அர்ப்பணம் செய்துள்ளார். இவ்வாறு செய்யாது விடின் மக்களுக்கு நம்பிக்கை துரோகம் செய்தவனாக ஆளாவேன். எனவே, வாக்குறுதியளித்ததன் பயனாகவே மக்கள் என்னை தெரிவு செய்தனர். நான் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை மீறியதில்லை என பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார். மேலும் எனது அரசியல் பிரவேசத்துக்கு காரணமாக அமைந்த முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சகல தலைவர்களுக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

பொலிஸ் உத்தியோகத்தரின் வீடு உடைக்கப்பட்டு திருட்டு: பெறுமதியான நகைகள் கொள்ளை

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

இபலோகம பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரின் வீட்டிற்குள் புகுந்து சுமார் ஏழு இலட்சம் ரூபா பெறுமதிமிக்க தங்கம் மற்றும் பணத்தினையும் திருடிச் சென்றுள்ள குழுவினரை கைது செய்வதற்கு விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் இபலோகம பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் பொலிஸ் பரிசோதகர் ஆகியோருக்கு சொந்தமான கொட்டல்வத்த தலாவ வீதியில் அமைந்துள்ள வீட்டில் தங்க நகைகள் மற்றும் பணம் என்பன திருடப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் அவரது மனைவியான பொலிஸ் உத்தியோகத்தர் ஆகியோர் கடமையில் இருந்த போது கடந்த (14) அவர்களின் வீட்டுக்கு அருகாமையில் உள்ள வீட்டில் வசித்து வரும் பெண் ஒருவர் வீடு உடைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

வீட்டின் அலுமாரியில் இருந்த இரண்டு தங்க வளையல்கள், இரண்டு பென்டன்கள் மற்றும் 10 ஆயிரம் ரூபா பணம் என்பன திருடப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

கடற்றொழில் அமைச்சு;

நிறுவன தலைவர்களுடன் இராஜாங்க அமைச்சர் சந்திப்பு

கடற்றொழில் அமைச்சின் புதிய இராஜாங்க அமைச்சராக பதவியேற்றுள்ள பியல் நிசாந்த, கடற்றொழில் அமைச்சின் கீழுள்ள அனைத்து முகவர் நிலையங்களின் தலைவர்களையும் சந்தித்து அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் முன்னேற்றம், அபிவிருத்தி தொடர்பான மீளாய்வுக் கூட்டமொன்றை அமைச்சின் காரியாலயத்தில் அண்மையில் நடாத்தினார்.

இராஜாங்க அமைச்சர் இங்கு கருத்து தெரிவிக்கையில், கடற்றொழில் அமைச்சின் இராஜாங்க அமைச்சராக தான் நியமிக்கப்பட்ட பின் அமைச்சின் அதிகாரிகளான உங்களை முதல்தடவையாக சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியை சமாளிக்கும் வகையில் புதிய வேலைத்திட்டமொன்றை நிறுவன மட்டத்தில் முன்னெடுக்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.

அந்த வகையில் மேற்படி வேலைத்திட்டத்தை முன்னெடுப்பது நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அதிகாரிகளுடன் இங்கு விரிவாக ஆராயப்பட்டமை விசேட அம்சமாகும்.

இந்நிகழ்வில் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் திருமதி ஆர்.எம்.ஐ. ரத்நாயக்க மற்றும் அமைச்சின் அனைத்து பிரதம அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

ஜே. ஜே. பவுண்டேசன் அமைப்பின் மூலம் நாட்டின் நிலவும் பொருளாதார நெருக்கடியை கருத்திற் கொண்டு கல்நேவ பிராந்திய வைத்தியசாலைக்கும் மற்றும் கலாவெள கிராமிய வைத்தியசாலை ஆகியவற்றுக்கும் மருத்துவப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டது. ஜே.ஜே.பவுண்டேசன் அமைப்பின் தலைவர் ஐ.வை.எம். ஹனீப் இந்த இரு வைத்தியசாலைகளுக்கும் விஜயம் செய்து பணிப்பாளர்களிடம் இந்த மருத்துவப் பொருட்களை உத்தியோகபூர்வமாக கையளித்தார். (படம்: மாவத்தகம தினகரன் நிருபர்)

இலங்கை வங்கி

பின்வரும் நகரத்தில் ATM இயந்திரமொன்றை நிறுவுவதற்கு பொருத்தமான கட்டடம் அல்லது காணி நீண்டகால குத்தகை அடிப்படையில் தேவைப்படுகின்றது.

கெடமான்ன - பெலிஅத்த

உத்தேசக் காணி அல்லது கட்டடம் பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- குறைந்தபட்ச குத்தகைக் காலம் 10 வருடங்களாகும்.
- மேற்குறித்த இடத்திலிருந்து 500 மீற்றருக்குள் அமைந்திருத்தல் வேண்டும்.
- வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு போதுமான இடவசதி இருத்தல் வேண்டும்.
- முதல்நிலை 30 அம்பியர் மின்சார விநியோகம் இருத்தல் வேண்டும்.
- காணியாக இருப்பின் குறைந்தபட்ச நிலப்பரப்பு 140 சதுர அடிகள் (7′X20′) இருத்தல் வேண்டும்.
- கட்டடமாக இருப்பின் உட்புற நிலப்பரப்பு 91 சதுர அடிகள் (7′X13′) இருத்தல் வேண்டும்.

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கட்டட உரிமையாளர் அங்கீகரிக்கப்பட்ட கட்டட வரைபடம், காணித்துண்டின் வரைபடம், அளவையியல் திட்டம், உரிமைத்துவ உறுதி போன்ற ஆவணங்களின் பிரதிகள் மற்றும் எதிர்பார்க்கும் மாதாந்த வாடகையைக் குறிப்பிட்டு 14 நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"ATM இயந்திரத்துக்கான அறை கெடமான்ன - பெலிஅத்த"** எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

உதவிப் பொது முகாமையாளர் (தென் மாகாணம்),
இலங்கை வங்கி,
தென் மாகாணக் காரியாலயம்
இல: 11, குமாரதுங்க மாவத்தை, மாத்தரை.
தொலைபேசி: 041 223 2238 / 041 222 0949
மின்னஞ்சல்: bocsp@boc.lk

1975 BOC CALL CENTRE www.boc.lk
AA- (lka) Fitch ரேட்டிங், AAA- Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

தினகரன்
விளையாட்டு
sports.tkn@lakehouse.lk
2022 செப்டெம்பர் 20 செவ்வாய்க்கிழமை

இலங்கை லெஜன்ட்ஸ் அணிக்கு தொடர்ந்து மூன்றாவது வெற்றி

வீதிப் பாதுகாப்பு உலகத் தொடரில் திலக ரத்ன டில்ஷான் தலைமையிலான இலங்கை லெஜன்ட்ஸ் அணி தென்னாபிக்க லெஜன்ட் ஸுக்கு எதிரான தனது மூன்றாவது போட்டியிலும் 11 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

இந்தூரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (18) நடை பெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெ டுத்தாட பணிக்கப்பட்ட இலங்கை அணி 20 ஓவர்களுக்கும் 6 விக்கெட்டுகளை இழந்து 165 ஓட்டங்களை பெற்றது.

மத்திய வரிசையில் ஜீவன் மெண்டிஸ் அதிரடி யாக ஆடி 27 பந்துகளில் 5 பௌண்டரிகள் 2 சிக் ஸர்களுடன் ஆட்டமிழக்காது 43 ஓட்டங்களை பெற்று இலங்கை அணியின் ஓட்டங்களை அதி கரிக்க உதவினார். உபுல் தரங்க 27 பந்துகளில் 36 ஓட்டங்களை பெற்றார்.

தொடர்ந்து பதிலெடுத்தாடிய தென்னாபிரிக்க அணிக்கு ஆரம்ப துடுப்பாட்ட வீரரும் விக்கெட் காப்பாளருமான மோர்ன் வென் வைக் அபாரமாக ஆடி 56 பந்துகளில் 76 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தபோதும் கடைசி நேரத்தில் தென்னாபி ரிக்க அணியின் ஓட்ட வேகத்தை கட்டுப்படுத்த இலங்கை பந்துவீச்சாளர்களால் முடிந்தது.

இதனால் தென்னாபிரிக்க லெஜன்ட்ஸ் 20 ஓவர் கள் முடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 154 ஓட் டங்களையே பெற்றது. பந்துவீச்சில் இலங்கை லெஜன்ட்ஸ் சார்பில் நுவன் குலசேகர 2 விக்கெட் டுகளை பதம்பார்த்தார். இந்த வெற்றியுடன் எட்டு அணிகள் பங்கேற்றிருக்கும் இந்தத் தொடரில் இலங்கை லெஜன்ட்ஸ் அணி 6 புள்ளிகளுடன் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளது. இலங்கை லெஜன்ட்ஸ் அணிக்கு இன்னும் இரண்டு போட் டிகள் எஞ்சியுள்ள நிலையில் அரையிறுதிக்கு முன் னேறும் வாய்ப்பு அதிகரித்துள்ளது.

மொங்கோலியாவிடமும் தோற்ற இலங்கை ஆசிய கிண்ணத்திலிருந்து வெளியேற்றம்

ஆசிய கால்பந்து கூட்டமைப்பின் 20 வயதுக்கு உட்பட்ட ஆசிய கிண்ண தகுதிகாண் போட்டித் தொடரில் போட்டியை நடத்தும் மங்கோலியாவி டம் 0–6 என்ற கோல் வித்தியாசத்தில் தோல்வி அடைந்த இலங்கை அணி அந்தத் தொடரில் இருந்து வெளியேறியது.

மொங்கோலியத் தலைநகர் உலான்பாதர் நகரில் உள்ள எம்.எப்.எப் கால்பந்து மையத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (18) 'ஈ' குழுவுக்காக தனது மூன் றாவது போட்டியிலேயே இலங்கை அணி மொங் கோலியாவை எதிர்கொண்டது.

எனினும் போட்டியின் ஆரம்பத்திலேயே தடு மாற்றம் கண்ட இலங்கை வீரர்கள் 2ஆவது நிமி டத்திலேயே எதிரணிக்கு முதலாவது கோலை விட்டுக்கொடுத்தனர். தொடர்ந்து முதல் பாதியில் மொங்கோலியா மேலும் இரு கோல்களை பெற் றதோடு இரண்டாவது பாதியில் மேலும் மூன்று கோல்களை புகுத்தியது.

இதன்மூலம் மொங்கோலியா சென்ற 20 வய துக்கு உட்பட்ட இலங்கை அணி தான் ஆடிய மூன்று போட்டிகளிலும் மொத்தம் 15 கோல்களை விட்டுக்கொடுத்து எதிராக ஒரு கோலைக் கூட புகுத்தாமல் ஆசிய கிண்ணத்திற்கு முன்னேறும் வாய்ப்பை இழந்துள்ளது.

இலங்கை அணி முன்னதாக தென் கொரியா வுக்கு எதிரான போட்டியில் 0–6 என்ற கோல் கணக் கிலும் மலேஷியாவுக்கு எதிரான போட்டியில் 0–3 என்ற கோல் கணக்கிலும் தோல்வியை சந்தித்தது.

இதேவேளை தென் கொரிய அணி இந்தக் குழுவில் இருந்து உஸ்பகிஸ்தானில் நடைபெறும் 2023 ஆசிய கிண்ண கால்பந்து தொடருக்கு தகுதி பெற்றுள்ளது. தென் கொரியா கடந்த ஞாயிற்றுக்கி ழமை இதே மைதானத்தில் நடைபெற்ற மலேஷி யாவுக்கு எதிரான போட்டியில் 6–2 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியதை அடுத்தே அது ஆசிய கிண்ணத்திற்கு தகுதி பெற்றுள்ளது.

சம்பியனானது சவுண்டஸ்

மாளிகைக்காடு குறூப் நிருபர்

ஏறாவூர் லக்கி ஸ்டார் விளை யாட்டு கழகம் ஒழுங்கு செய்திருந்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபக தலைவர் மர்ஹூம் எம். எச்.எம். அஷ்ரப் ஞாபகார்த்த டி20 கிரிக்கெட் வெற்றிக் கிண்ணத்தை ஏறாவூர் சவுண்டஸ் விளையாட்டு கழகம் கைப்பற்றியது.

இத் தொடரில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 16 அணிகள் பங்குபற்றியிருந்தன.

இறுதிப்போட்டியில் ஏறாவூர் யூத் ஸ்டார் விளையாட்டு கழகமும் ஏறாவூர் சவுண்டஸ் விளையாட்டு கழகமும் பலப்பரீட்சையில் ஈடுபட் டன. முதலில் துடுப்பெடுத்தாடிய யூத் ஸ்டார் 105 ஓட்டங்களை பெற்ற தோடு பதிலெடுத்தாடிய சவுண்டஸ் 16.2 ஓவர்களில் இலக்கை எட்டியது.

அக்குறணை பிரதேச சபை சபை உறுப்பினர் நட்புறவு அமைப்பினால் நான்காவது முறையாகவும் ஏற்பாடு செய்யப்பட்ட அணிக்கு எட்டுப் பேர் கொண்ட மென்பந்து கிரிக் கெட் போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கு அக்குறணை பிரதேச சபை தவிசாளர் இஸ் திஹார் இமாதுதீன், பாராளுமன்ற உறுப்பினர் எம்.எச்.ஏ. ஹலீம் உட்பட பிரமுகர்கள் வெற்றிக் கிண்ணத்தை வழங்குவதை காணலாம். (படம்: பூஜாபிட்டிய தினகரன் நிருபர்)

சீ.ஆர் 7 அணி சம்பியன்

புத்தளம் தினகரன் நிருபர்

புத்தளம் வெட்டாளை அசன் குத்தூஸ் வித்தியால யத்தின் பொன்விழாக் கொண்டாட்டங்களின் ஒரு அங்கமாக பழைய மாணவர் அமைப்புக்க ளினால் ஏற்பாடு செய் யப்பட்ட அணிக்கு எழுவர் கொண்ட உதைப்பந்தாட்ட தொடரில் மேன் சிட் அணிக்கு எதிரான இறுதிப் போட்டியில் சீ.ஆர் 7 4–2 கோல் கணக்கில் வெற்றியீட்டி யது.

20 அணிகள் பங்கேற்ற இந்தப் போட்டிகள் அதிபர் ஜே.எம். இல்ஹாம் தலைமையில் நடைபெற் றது. போட்டி நிகழ்வுகளின் மூலம் பெறப்பட்ட சுமார் 80000 ரூபா நிதி பழைய மாணவர் அமைப்புக்களி னால் பாடசாலை அபிவிருத்திக்காக அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

சர்வதேச செய்திகள்

கிரிக்-தஜிக் எல்லை மோதல்: 94 பேர் பலி

கிரிகிஸ்தான் மற்றும் தஜிகிஸ் தான் எல்லையில் இடம்பெற்ற மோதலில் குறைந்தது 94 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த இரு மத்திய ஆசிய நாடு களுக்கும் இடையில் கடந்த புதன்கிழமை மோதல் வெடித் ததோடு கடந்த வெள்ளியன்று போர் நிறுத்தம் ஒன்று எட்டப் பட்டது.

எனினும் எல்லை பிரச்சினை நீடிக்கும் இந்த முன்னாள் சோவியட் ஒன்றிய நாடுகளுக்கு இடையே அடிக்கடி மோதல் கள் இடம்பெற்று வருகின்றன. பிரச்சினையை அமைதியான முறையில் தீர்க்கும்படி இரு நாடுகளிடமும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் கோட்டுள் ளார்.

தஜிகிஸ்தான் மற்றும் கிர்கிஸ் தான் இரு நாடுகளும் 1,000 கிலோமீற்றர் எல்லையை பகிர்ந் துகொள்ளும் நிலையில் அதில் மூன்றில் ஒரு பகுதியில் பிரச் சினை நீடிக்கிறது.

இந்நிலையில் தற்போதைய மோதலில் தமது தரப்பில் 59 பேர் கொல்லப்பட்டதாக கிரி கிஸ்தான் குறிப்பிட்டிருப்ப தோடு 35 பொதுமக்கள் கொல் லப்பட்டதாக தஜிகிஸ்தான் கூறியுள்ளது.

தொடர்ந்து சர்வதேச அழுத் தம் அதிகரித்ததை அடுத்து இரு தரப்பும் போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

விடைபெற்றார் மகாராணி

நூற்றுக்கணக்கான அரச தலைவர்கள் மற்றும் அரசர்கள் உட்பட இரண்டாயிரம் பிரமுகர்களுடன் இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்கு லண்டனில் உள்ள வெஸ்ட்மின்ஸ்டர் அபேவில் இடம் பெற்றதைத் தொடர்ந்து நேற்று மாலை அவரது பூதவுடல் வின்ட்சோர் கோட்டை யில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

பிரிட்டன் வரலாற்றில் மிகப்பெரிய நிகழ்வுகளில் ஒன்றாக இடம்பெற்ற மகாராணியின் இறுதிச் சடங்கில் அமெ ரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், ஜப்பான் பேரரசர் நருஹிடோ மற்றும் பிரான்ஸ் ஜனாதிபதி எமானுவேல் மக்ரோன் என 2000 பிரமுகர்கள் பங்கேற்றனர். இதனை ஒட்டி நாடு முழுவதிலும் இருந்து 10,000 பொலிஸார் லண்டன் நகரில் நிறுத்தப் பட்டதோடு இலட்சக்கணக்கான மக்கள் திரண்டனர்.

மகாராணியின் பூதவுடல் வைக்கப்பட்ட பேழை மதச் சடங்குகளுக்காக நேற்று மாலை வின்ட்சோர் தேவாலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. தொடர்ந்து தனிப்பட்ட இறுதிக் கிரியைக்குப் பின் மகாராணியின் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

70 ஆண்டுகள் ஆட்சியில் இருந்த இரண்டாம் எலிசபெத் மகாராண கடந்த செப்டெம்பர் 8 ஆம் திகதி ஸ்கொட்லாந் தில் உள்ள பல்மோரல் கோட்டையில் தனது 96 ஆவது வயதில் காலமானார். தொடர்ந்து பத்து நாள் துக்கதினத்திற்கு பின்னரே அவரது இறுதிச் சடங்கு நேற்று இடம்பெற்றது. இதனையொட்டி நேற்று பிரிட்டனில் பொது விடுமுறை வழங்கப் பட்டிருந்தது.

தாய்வானை பாதுகாக்க பைடன் மீண்டும் உறுதி



சீனாவின் தாக்குதல் ஒன்றில் தாய்வானை அமெ ரிக்கா பாதுகாக்கும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மீண்டும் ஒருமுறை வலியுறுத்தியுள்ளார்.

சி.பி.எஸ் தொலைக்காட் சிக்கு அவர் அளித்த பேட்டி ஒன்றின்போது, அமெரிக்க துருப்புகள் தாய்வானை பாது காக்குமா? என்று கேட்கப் பட்டபோது, "ஆம், உண்மை யில், அது முன்னெப்போதும் நிகழாத ஒன்றாக இருக்கும்" என்று பதிலளித்தார்.

இருப்பினும் தாய்வானுக் கான அமெரிக்கக் கொள் கைகளில் எந்த மாற்றமும் இல்லை என்று வெள்ளை மாளிகைப் பேச்சாளர் தெரி வித்தார்.

தாய்வான் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் இராணுவ ரீதியாக அமெரிக்கா பதிலடி கொடுக்குமா என்பதற்கு வொஷிங்டன் நீண்ட கால மாகத் தெளிவான பதிலை வெளியிட்டதில்லை.

இருப்பினும் அமெரிக்கா, தாய்வானின் சுதந்திரத்தை ஆதரிக்கவில்லை என்று பைடன் கூறினார்.

'ஒரே சீனா' கொள்கைக்கு அமெரிக்கா தொடர்ந்து கடப் பாடு தெரிவிக்கும் என்று அவர் கூறினார்.

கிழக்கு சீன கடற்கரைக்கு அப்பால் இருக்கும் சுயாட்சி புரியும் தீவான தாய்வானை தனது நாட்டின் ஒரு பகுதியா கவே சீனா கருதுகிறது. இது தொடர்பில் சீனா மற்றும் அமெரிக்கா இடையே தொடர்ந்து முறுகல் நீடிக்கி றது.

தாய்வானுடன் நெருக்க மான உறவை பேணி வரும் அமெரிக்கா அந்நாட்டுக்கு ஆயுதங்களை விற்பனை செய்கிறது.

இந்திய-சீன இராணுவம் எல்லையிலிருந்து வாபஸ்

கிழக்கு லடாக்கின் கோக்ரா ஸ்பிரிங்ஸ் பகு தியில் உள்ள முக்கிய இடங்களில் இந்திய–சீன இராணுவம் படைகளை திரும்ப பெறும் நடவ டிக்கை நிறைவடைந்த தாக அரசு தரப்பில் தெரி விக்கப்பட்டுள்ளது.

கிழக்கு லடாக் எல்லையில் குவிக்கப்பட் டுள்ள இந்திய–சீன இராணுவ படைகளை திரும்ப பெற்று எல்லையில் அமைதியை நிலைநாட்ட, இருநாட்டு இராணுவ அதிகாரிகள் மட்டத்திலான பேச்சு நடந்து வருகிறது.

16ஆவது சுற்றின் போது கோக்ரா ஸ்பிரிங்ஸ் பகு தியில் உள்ள முக்கிய பகுதிகளில் படைகளை திரும்ப பெற இருதரப்பும் ஒப்புக்கொண்டன. இந்த நடவடிக்கை கடந்த வாரம் நிறைவடைந்ததாக அறிவிக்கப்பட்டுள் ளது.

ஷங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் மோடி உரை

நாடுகளுக்கிடையில் பரஸ் பர போக்குவரத்துக்கான உரி மைகளுடன் பிராந்தியத்தில் நம்பகமானதும், மீள்தன்மை கொண்டதுமான பன்முகப்ப டுத்தப்பட்ட விநியோகச் சங் கிலிகளை உருவாக்க ஷங்காய் ஒத்துழைப்பு அமைப்பு உழைக்க வேண்டும் என்று இந் தியப் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற ஷங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற் றும்போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். உலகளா விய மொத்த உள்நாட்டு உற் பத்தியில் சுமார் 30 வீத பங்க ளிப்பை ஷங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் அங்கத்துவ நாடுகள் வழங்குகின்ற அதே நேரம் உலக சனத்தொகையில் 40 வீதத்தினர் இந்நாடுகளில் தான் வாழ்கின்ற னர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 செப்டெம்பர் மாதம் 20ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.